
சிவபுராணச் சிற்றுரை



திரு. அடிகளாசிரியர்

உ
இறைவன் துணை

சிவபுராணச் சிற்றுரை

கிளை மாமணி அவர்கட்குப்
பணிவன்புடன்
அ. சிவபெருமான்
24/9/96

உரையாசிரியர்
திரு. அடிகளாசிரியர்
ஓய்வுபெற்ற தமிழ்ப் பேராசிரியர்
சித்தநாதேச்சுராதீனம்
குகையூர் - 606 306

பதிப்பாசிரியர்
சோதிடரத்னா
டாக்டர் அ. சிவபெருமான்
5. வெள்ளிவிழாச்சாலை
செயங்கொண்டசோழபுரம் - 621 802
பெரம்பலூர், திருவள்ளுவர் மாவட்டம்

நூல் குறிப்பு

நூல் பெயர்	:	சிவபுராணச் சிற்றுரை
ஆசிரியர்	:	திரு. அடிகளாசிரியர்
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	இரண்டாம் பதிப்பு
வெளியிட்ட நாள்	:	செப்டம்பர், 1996
உரிமை	:	திரு. அடிகளாசிரியர்
அளவு	:	டிம்மி 1/8
பக்கங்கள்	:	144
படிகள்	:	1000
அச்சகம்	:	சபாநாயகம் பிரிண்டர்ஸ் கீழவீதி, சிதம்பரம்
விலை	:	ரூ. 20-00
வெளியீட்டாளர்	:	திருவருள் நிலைய வெளியீட்டகம் குகையூர் – அஞ்சல் நயினார்பாளையம் – வழி கல்லக்குறிச்சி-வட்டம் விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டம் 606 306 தமிழ்நாடு

இறைவன் திருவருளால் செம்புலச் செல்வராயினவர் மாணிக்கவாசக சுவாமிகள்

"தில்லை மூதூர்ப் பொதுவினிற் றோன்றி
எல்லையி லானந்த நடம்புரி கின்ற
பரம காரணன் திருவரு ளதனான்
திருவாத வூர்மகிழ் செழுமறை முனிவர்
செம்புலச் செல்வ ராயினர்"

"திருக்கோவையார் உரை"

மாணிக்கவாசக குரு வணக்கம்

நிறைந்தபரி பூரணனாய் நிர்க்குணனாய்
நிர்மலனாய் நித்தனாகித்
துறந்தமனத் துடையோர்க்கும் துரியனுமாய்
அதீதனுமாய்ச் சோதி யாகி
கறந்தமுலைப் பாலாகிப் பாலிலுள்ள
சுவைகாட்டுங் கருத்தனாகிச்
சிறந்தகுரு மாணிக்க வாசகரை
யெம்முளத்திற் சேர்த்து வோமே.

"சிவானந்த போதம்"

உள்ள மாகிய புலத்தினைப் பத்தியால் உழுது
தெள்ளு ஞானவித் துறுத்துநற் சிரத்தைநீர் பாய்ச்சிக்
கள்ள வான்பொறிக் களைகள்கட் டானந்தம் விளைத்துக்
கொள்ளை கூறுமா ணிக்கவா சகன்கழல் குறிப்பாம்.

"பேரூர்ப்புராணம்"

திருவாசகச் சிறப்பு

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே – எல்லை
மருவா நெறிஅளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகம்என்னும் தேன்.

பொருளடக்கம்

பதிப்பாசிரியர் உரை

முதற் பதிப்பின் பதிப்புரை

இரண்டாம் பதிப்பின் பதிப்புரை

அறிஞர் கருத்து

சுருக்கெழுத்து விளக்கம்

சிவபுராண முன்னுரை ... 1 - 16

சிவபுராணச் சிற்றுரை ... 17 - 109

பிற்சேர்க்கைகள்

1. சிவபுராண யாப்பு ... 110 - 122
2. பேராசிரியர் திரு. அடிகளாசிரியர் வாழ்வும் பணியும் ... 123 - 128

பதிப்பாசிரியர் உரை

போற்றி ஓம் நமச்சி வாய
புயங்கனே மயங்கு கின்றேன்
போற்றி ஓம் நமச்சி வாய
புகலிடம் பிறிதொன்று இல்லை
போற்றி ஓம் நமச்சி வாய
புறமெனைப் போக்கல் கண்டாய்
போற்றி ஓம் நமச்சி வாய
சயசய போற்றி போற்றி

(திருவாசகம் - திருச்சதகம் 62)

எட்டாந்திருமுறையாக விளங்கும் திருவாசகத்தை அருளிய **தவத்திரு மாணிக்கவாசகப் பெருமான்**, சிவபெருமானால் திருப்பெருந்துறையில் குருந்தமர நிழலில் ஆட்கொள்ளப் பட்ட அருளாளராவார். பாண்டியனிடம் அமைச்சராக விளங்கிய அப்பெருமான் அரசபதவியைத்துறந்து ஞான வாசகமாகிய திருவாசகத்தை அருளி நமக்கெல்லாம் ஞானநெறியைக் காட்டியவராவார்.

திருவாசகத்துள் முதல் வாசகமாகிய சிவபுராணத்திற்கு எனது தந்தையார் பேராசிரியர் **திரு. அடிகளாசிரியரவர்கள்** **'பேருரை'** ஒன்றை எழுதி, அதை மிகுந்த தன்னடக்கத்துடன் **'சிவபுராணச் சிற்றுரை'** என்ற பெயரில் 1986ஆம் ஆண்டில் அச்சிட்டு வெளியிட்டார்கள். அப்பதிப்பு செலவாகிய நிலையில் மீண்டும் பதிப்பிக்கும் பொறுப்பை என்னிடம் நல்கினார்கள். யானும் அத்திருத்தொண்டை ஏற்று நல்ல முறையில் பதிப்பித்து உங்கள் முன் கொண்டுவந்துள்ளேன்.

முதற்பதிப்பைக் காட்டிலும் இவ்விரண்டாம் பதிப்பில் அரிய பல கருத்துகள் சேர்க்கப்பட்டுள்ளன.

என் தந்தையார் 'திருவருள் நிலைய வெளியீட்டகம்' என்ற நிறுவனத்தைத் தொடங்கி அதன் வழிச் சிறந்த நூல்களை வெளியிட்டு வருகின்றார். மேலும், அந்நிறுவனம் தமிழ்த் தொண்டு என்ற ஒன்றை மட்டும் நோக்கமாகக் கொண்டு குறைந்த விலையில் நூல்களை வெளியிட்டு வருகின்றது. அவ்வகையில் ஒன்பது பாரங்களைக் (144 பக்கம்) கொண்ட இந்நூல் ஒன்றின் விலை ரூபாய் இருபது மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கதாகும் சுருங்கக் கூறின் இவ்வெளியீடு இலாபம் கருதாத வெளியீடாகும்.

இந்நூலை அச்சிடுதல் முதலான பிறபணிகளை முன்னிட்டுச் சிதம்பரத்தில் தங்கிய பொழுது முக மலர்ச்சியுடன் தங்குவதற்கு இடமும், உண்பதற்கு உணவும் வழங்கிய சிதம்பரம் மௌனமடத்து அதிபர் தவத்திரு. மௌன சுந்தரமூர்த்தி சுவாமிகளின் அன்பை என்றும் மறவேன்.

இந்நூலை வெளியிடப் பொருளுதவி நல்கிய எங்கள் ஆதீனச் சீடர்களுக்கு ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்நூலை நல்ல முறையில் அச்சிட்டு வழங்கிய சிதம்பரம் சபாநாயகர் அச்சக உரிமையாளருக்கும், அவ்வச்சகப் பணியாளர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். வழக்கம் போல் அச்சுப் பிழைகளை அன்புடன் திருத்தி வழங்கிய புலவர் இரா. கணபதி அவர்கட்கும் நன்றி. அச்சகம் சென்று அச்சுப் பிரதிகளை வாங்கிவருதல் முதலான பணிகளைச் செய்துதவிய உடன் பிறவா இளவல் திரு. த. சோதி இராமலிங்கத்திற்கும் நன்றி.

என்னுடைய பணிகளுக்குப் பக்கபலமாக உறுதுணை யாக எப்பொழுதும் விளங்கி வரும் என் துணைவியார் திருமதி சி. மகேசுவரி என்கின்ற மதுரம் அவர்கட்கும் நன்றி.

மாணிக்கவாசகர் சிவத்தலங்கள் பலவற்றைத் தரிசித்து, இறுதியில் தில்லைக்கு வந்து நடராசப்பெருமானை வணங்கிச் சிவசொரூபத்தில் இரண்டறக் கலந்தார் என்று சுவாமி சித்பவானந்தர் குறிப்பிட்டுள்ளார். ஆகவே, இந்நூலைத் தில்லை நடராசப் பெருமானின் திருவருளால் சிதம்பரத்தில் சபாநாயகம் அச்சகத்தில் அச்சேற்றி, அப்பெருமானின் திருவடிக்கீழ் வைத்து வெளியிட்டுள்ளேன்.

இங்ஙனம்

11—9—96 அ. சிவபெருமான்

உ
இறைவன் துணை

முதற் பதிப்பின் பதிப்புரை

பொருளை உள்ளத்தால் உணர்ந்து வாயால் சொல்லும் அன்பர்க்கு இம்மையில் சிந்தை மகிழ்ச்சி உண்டாகவும், முந்தை வினை முழுதும் மோயவும், மறுமையில் இறைவன் திருவடிக் கீழ் வாழும் வாழ்வு கிடைக்கவும் வேண்டி மாணிக்கவாசகப் பெருமானால் இயற்றப்பட்டது இச் சிவபுராண மாகும்.

இச்சிறந்த குறிக்கோளையுடைய இச்சிவபுராணத்திற்குச் சிறிதளவே பொருள் உணர்ச்சி உண்டாகுமாறு அடியேன் சிற்றுரை ஒன்றினை இயற்றினேன்.

தமிழக அரசு செய்து வரும் சிறந்த செயல்கள் பலவற்றுள் தஞ்சாவூரில் தமிழ்ப்பல்கலைக் கழகம் அமைத்தது தமிழ் மொழிக்குச் செய்த மிகச்சிறந்த மாபெருந் தொண் டாகும். அப்பல்கலைக் கழகத்தில் 20—1—1982 இலிருந்து 1—10—1985 வரைபணி செய்யும் வாய்ப்பு அடியேனுக்குக் கிடைத்தது.

இத் தமிழ்ப்பல்கலைக் கழகம் தமிழ்ப்பணியில் மிகச் சிறந்து வாழ வேண்டும் என்று இறைவனை வேண்டிக் கொண்டு, இச் சிவபுராணச் சிற்றுரையை அச்சிட்டு வெளியிடுகின்றேன்.

என் முதல் மகன் திருநிறை புலவர், அ. பேராசிரியன் M.A. இவ்வுரைக் கையெழுத்துப் படியினைத் தட்டெழுத்துச் செய்து உதவி புரிந்தார்.

என் மருமகன் மன்னார்பாளையம் திருநிறை புலவர் ப. பாலசுப்பிரமணியன் M.A., அவர்கள் அச்சுத்தாள்களை நன்கு திருத்தி உதவினார்.

வாழப்பாடி இராசன் அச்சக உரிமையாளர் உயர்திரு. தி.கு. அங்கப்பன் அவர்கள் மிகவும் முயன்று நல்ல முறையில் அச்சிட்டுக் கொடுத்தார்.

மேற்கண்ட அச்சகப் பணியாளர்கள் திருமதி. ரா. நிர்மலா செல்விகள்: சு. புவனேஸ்வரி, கு. வெற்றிக்கொடி சு. ரேவதி, செல்வர்கள்: அ. செந்தில்ராசு, கு. செயராமன், ம. சந்திரசேகரன் ப. மதிவாணன் என்னும் இவர்களெல்லோரும் ஊக்கமாக இயங்கித் தங்கள் பணியை நன்கு செய்து உதவினார்கள்.

மேற்கண்ட இவர்களெல்லோருக்கும் என் ஆழ்ந்த நன்றியையும் வாழ்த்தினையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இச் சிவபுராணச் சிற்றுரை வெளியீடு மக்கட்குப் பத்தி நெறியை உண்டாக்கிப் பழவினைகள் பாறும் வண்ணம் சித்தமலம் அறுவித்துச் சித்தத்தைச் சிவமாக்க வேண்டுகிறேன்.

குகையூர் – அஞ்சல்.,
நயினார்பாளையம் (வழி)
606 301,
தென்னார்க்காடு மாவட்டம்
15—12—85

இங்ஙனம்
திரு. அடிகளாசிரியன்

உ
இறைவன் துணை

இரண்டாம் பதிப்பின் பதிப்புரை

இறைவன் திருவருளால் சிவபுராணச் சிற்றுரையைப் பத்தாண்டுகளுக்கு முன்பு முதல் பதிப்பாக ஓர் ஆயிரம் படிகள் பதிப்பித்தேன். இப்படிகள் அன்பளிப்பாகவும், விலைக்கு விற்றும் செலவழிந்து விட்டன. அதனால் இப்பொழுது இரண்டாம் பதிப்பைப் பதிப்பித்து வெளியிடுகின்றேன்.

இவ்விரண்டாம் பதிப்பு சிலதிருத்தங்கள் செய்யப்பட்டு சில புதிய கருத்துக்கள் சேர்க்கப்பட்டு வெளிவருகின்றது. அவை அல்லாமல் இந்தச் சிவபுராணம் எந்த யாப்பு வகையால் யாக்கப்பட்டது என்று வினாவிக் கொண்டு அதுபற்றி யான் எழுதியுள்ள ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்றையும் பின் இணைப் பாகப் பெற்று வருகின்றது.

அச்சுக்கூலி மிகுதியாகவும் தாள்கள் விலை மிக உயர்ந்தும் உள்ள இக்காலத்திலே பொருள்வளம் நன்கு அமையப்பெறாத யான் தொண்டுமனப்பான்மை ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு இப்பதிப்பினைப் பதிப்பித்துத் தமிழ் உலகத்திற்குத் தருகின்றேன்.

குகையூர் சித்தநாதேச்சுர குருஆதீனத்திற்குச் சீடர் களாய் ஈரோட்டில் உள்ள அக்கிரகாரத் தெருவில் சோமசுந்தரம் என்னும் பெயரால் பெரிய அறுவைவாணிகம் புரிந்துவரும் சைவத்திருவாளர் **மா. சோமசுந்தரம்** அவர்கள் இப்பதிப்பிற்கு உதவியாக ஓர் ஆயிரம் ரூபாய் தந்துதவினர். மேலும் அவ்வூர் தில்லை நகரில் உள்ள இராம் பிரிண்டிங் மில்லின் உரிமை யாளர்களுள் ஒருவராகிய சைவத்திருவாளர் **ஆ. மோகனசுந்தரம் அவர்களும்** ஓர் ஐநூறு ரூபாயைத் தந்துதவினார்கள்.

அச்சிடும் வேலை என்பது அரிய வேலைகளில் ஒன்றாக உள்ளது. நல்ல எழுத்துக்களால், நல்லதாளில் பிழையில்லாமல்

அழகாக அச்சிடவேண்டும். வயது முதிர்ந்து கைநடுக்கம் ஏற்பட்டுச் செயல் செய்யமுடியாத நிலையில் உள்ள யான் இச்சிவபுராணத்தை எவ்வாறு பதிப்பிக்கமுடியும் என்று கருதினேன். இதனை யாரைக்கொண்டு அச்சிடலாம் என்று கருதியபொழுது என் இளையமகன் திரு. அ. சிவபெருமான் நினைவே எனக்குத் தோன்றிற்று, அவர் என்னுடைய இலக்கியங்களாகிய தண்ணிழல், தொழிலியல், மெய்ப்பொருட் காதை, என்பவற்றை எல்லாம் இதற்குமுன் பதிப்பித்துக் கொடுத்துள்ளார். ஆதலால் இச்சிவபுராணத்தையும் பதிப்பிக்குமாறு வேண்டினேன். அவரும் என் வேண்டுகோளுக்கு இசைந்து இரவும் பகலும் அதுவே நினைவாயிருந்து மிகவும் முயன்று நல்லமுறையில் அச்சிட்டு உதவினார்.

வாழ்த்து

இப்பதிப்பிற்குப் பொருள் உதவிதந்து உதவிய மேற்கண்ட ஈரோட்டு அன்பர்களுக்கும், நேருக்கு நேராய் இருந்து அச்சிட்டு உதவிய என் இளைய மகன் திரு. அ. சிவபெருமானுக்கும் நல்ல முறையில் அச்சிட்டுத் தந்த சிதம்பரம் சபாநாயகர் அச்சகத் தாருக்கும் என் நல்வாழ்த்தினையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இங்ஙனம்

குகையூர்
10—8—1996

திரு. அடிகளாசிரியர்

உ
சிவமயம்

சிவபுராண உரை பற்றிய

அறிஞர் கருத்து

திருமுறையாராய்ச்சிக் கலைஞர், கலைமாமணி
பேராசிரியர் க. வெள்ளைவாரணனார்
[முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், தமிழ்ப்பல்கலைக் கழகம்]

திருப்பெருந்துறையிற் சிவபெருமானே குருவாக எழுந்தருளி உபதேசித் தருள, அப்பெருமானது திருவருள் ஞானமாகிய பேரின்ப வெள்ளத்தில் திளைத்த செம்புலச் செல்வராகிய திருவாதவூரடிகள் திருவாய் மலர்ந்தருளிய திருவாசகச் செழுமறையின், முதற்கண் அமைந்த சிவபுராணப் பகுதிக்குத் தாங்கள் எழுதிய உரை விளக்கம் முழுவதனையும் படித்து மகிழ்ந்தேன். சிவபுராணத்துள் 'நமச்சிவாய வாழ்க நாதன் தாள்வாழ்க' என்பதுமுதல். 'மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்' என்பது முடியவுள்ள முப்பத்திரண்டு அடிகள் பாயிரப்பகுதி எனவும், 'உய்ய என்னுள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற' என்பது முதல் 'அல்லற் பிறவி அறுப்பானேயோ வென்று', என்பது வரை புராணப்பகுதி எனவும். எஞ்சியன 'பயன் கூறும்' பகுதி எனவும் வகுத்துக் கொண்டிருப்பது, கற்போருள்ளத்திற்குத் தெளிவு பயப்பதாகும்.

பாயிரப் பகுதி கடவுள் வணக்கமும், நுதலியதுரைத்தலும், இம்மைப் பயனும் அவையடக்கம் கூறுதலும் ஆகும் என்றும், புராணப்பகுதி 'உய்ய என்னுள்ளத்து ஓங்காரமாய் நிற்றல்' முதல், 'அல்லற்பிறவி அறுத்தல்' ஈறாகவுள்ள அறுபத்துமூன்று செயல்கள் சிவனுடைய அநாதிமுறையான பழமையினை

விளக்குவன என்றும், சிவபெருமானுடைய திருவடியின் கீழ்ப் பலரும் பணிந்தேத்துமாறு சிவாநுபூதியிற் சென்று நிலை பெறுதலே இப்பாடலைப் பொருளுணர்ந்து ஓதுவார் பெறும் பயன் என்றும் பகுத்து உரை கூறியிருப்பது, சிவபுராணத்தைப் பொருளுணர்ந்து ஓதுவார்க்கு இவ்வுரை சிறந்த கருவியாதலைப் புலப்படுத்தும்.

சிவபுராணச் சொற்பொருள் அமைதியினை விளக்குங்கால் திருவாசகத்தில் ஏனைய இடங்களில் அச்சொல் ஆளப்பெற்ற திறத்தினையும், திருமூலர் திருமந்திரம் முதலிய ஏனைய திருமுறைகளில் உள்ளவற்றையும் ஒப்புமை காட்டியிருப்பது' இவ்வுரையின் பொருள் தூய்மையினை நன்கு புலப்படுத்து கின்றது. சைவசித்தாந்தக் கருத்துக்களையும், வீரசைவ சித்தாந்தக் கருத்துக்களையும் இயைபுடைய இடங்களில் இயைத்துக் காட்டி விளக்கும் முறையில் ஆங்காங்கே இவ்வுரையிற் காட்டப்பெற்றுள்ள விளக்கங்கள் அறிஞர்களால் வியந்து பாராட்டும் நிலையில் அமைந்துள்ளன.

இங்ஙனம் சொற்பாவும், பொருள் தெரிந்து தூய்மை நோக்கிச் சிவபெருமான் திருவருளில் தோய்ந்த நெஞ்சத்துடன் எழுதப்பெற்றுள்ள சிவபுராண உரை விளக்கம், செந்தமிழ்ச் சிவநெறியில் ஆர்வமுடையார் அனைவர்க்கும் நவில் தொறும் பத்திச்சுவை பயப்பதாய் அமைந்துள்ளமை பாராட்டத்தகுவ தாகும்.

142, கனகசபை நகர்,
சிதம்பரம்.
26—1—86

தங்கள் அன்புள்ள,
க. வெள்ளைவாரணன்

சுருக்கெழுத்து விளக்கம்

அச்சோ	—	அச்சோப்பதிகம்
அதிச அதிசய	—	அதிசயப்பத்து
அருட்	—	அருட்பத்து
ஆனந்த	—	ஆனந்த மாலை
உயிருண்	—	உயிருண்ணிப்பத்து
எண்	—	எண்ணப்பதிகம்
எ–று	—	என்றவாறு
கீர்த்தி	—	கீர்த்தித் திருவகவல்
குயிற்	—	குயிற்பத்து
குழைத்த	—	குழைத்த பத்து
கோயிற்	—	கோயிற்பதிகம்
கோயின் மூத்	—	கோயின் மூத்த திருப்பதிகம்
சி	—	சிவஞான போதம்
சி – போ	—	சிவஞான போதம்
சித்தாந்த	—	சித்தாந்த சிகாமணி
சிவ சிவபு	—	சிவபுராணம்
சூ	—	சூத்திரம்
செத்தி செத்திலா	—	செத்திலாப்பத்து
செய்	—	செய்யுளியல்
சென்னி	—	சென்னிப்பத்து
திருக்கோத்	—	திருக்கோத்தும்பீ
திருச்ச திருச்சத	—	திருச்சதகம்
திருத்த	—	திருத்தசாங்கம்
திருத்தெள்	—	திருத்தெள்ளேணம்
திருத்தோ	—	திருத்தோணோக்கம்
திருப்படை	—	திருப்படையாட்சி

திருப்பள்ளி	—	திருப்பள்ளியெழுச்சி
திருப்பாண்	—	திருப்பாண்டிப்பதிகம்
திருப்பூ	—	திருப்பூவல்லி
திருமந்	—	திருமந்திரம்
திருவண்	—	திருவண்டப்பகுதி
திருவம்	—	திருவம்மானை
திருவே	—	திருவேசறவு
தொல்	—	தொல்காப்பியம்
நால்வர்நான்	—	நால்வர்நான்மணிமாலை
நீத்தல் நீத் -	—	நீத்தல் விண்ணப்பம்
பண்டாய	—	பண்டாய நான்மறை
பிடித்த	—	பிடித்தபத்து
பெருந்	—	பெருந்திரட்டு
போற்றி போற்	—	போற்றித்திருஅகவல்
யாத்திரை யாத்	—	யாத்திரைப்பத்து

உ

இறைவன் துணை

சிவ புராண முன்னுரை

திரு. அடிகளாசிரியர்

திருவள்ளுவர் நல்லவற்றையெல்லாம் அறிந்து அவற்றைப் பின்பற்றி வாழ்தலுக்குச் 'சான்றாண்மை' என்று பெயர் கூறுகின்றார்.

கடனென்ப நல்லவை யெல்லாம் கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு'' (*குறள்*–981)

மேலும் அவர், சான்றாண்மையைத் தாங்கும் தூண்களுள் முதன்மையானது அன்பென்று கூறுகின்றார்.

''அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோ
டைந்துசால் பூன்றிய தூண்'' (*குறள்*–983)

உயிர்கள் பிற உயிர்களையும், கடவுளையும் விரும்புதற்கு அடியான உயிர்ப்பண்பே இவ் அன்பாகும்.

''அன்பிலா ரெல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு'' (*குறள்*–72)

என்னும் குறள், அன்பினைப் 'பிறர்நலங்கருதி எழும் உயர்ந்த பண்பு' என்று குறிப்பிடுகின்றது.

இறையனார் களவியல் உரை அன்பினைப்பற்றிக் கூறுஞ் செய்தியாவன:–

''அன்பு என்பது குடத்துள் விளக்கும் தடற்றுள் (உறையுள்) வாளும் போல, இதுகாண் அன்பு என்று தந்து காட்டலாகாது. அன்புடையரான குணம் கண்டவிடத்து, இவை உண்மையால்

ஈங்கு அன்பு உண்டென்று அனுமித்துக் கொள்ளற்பாற்று என்றும்,

அன்புடையரான குணம் யாவையோ வெனின்? சாவிற் சாதலும், நோவின் நோதலும், ஒண்பொருள் கொடுத்தலும், நன்கினிது மொழிதலும், புணர்வுநனி வேட்டலும், பிரிவுநனி யிரங்கலுமென இவையாம். இக்குணங்கள் திரிபின்றி நிகழ்ந்த வழி அன்புண்டென்று கொள்க என்றும்,

அன்றியும், உண்மை மாத்திரை உணர்த்திப் பிழம்பு உணர்த்தப்படாதனவும், உண்மையும் பிழம்பும் உணர்த்தப் படுவனவுமென உலகத்துப் பொருள் இருவகைப்படும்; அவற்றுள் அன்பென்பது உண்மை மாத்திரை யுணர்த்திப் பிழம்பு உணர்த்தப்படாத பொருளாகும் என்றும்,

அன்பெனப்பட்டது தான் வேட்ட வேட்ட பொருளின்கண் தோன்றும் உள்ள நெகிழ்ச்சி [இளகுதல்] என்றும் கூறும்.

இத்தகைய அன்பு என்பது மக்களின் அகவாழ்க்கை புற வாழ்க்கை என்னும் இரண்டிற்கும் வேண்டப்படும் இன்றி யமையாத குணமென்க.

அன்றியே, மக்கள் மேற்கொள்ளும் இல்லறம் துறவறம் என்னும் அறவாழ்க்கைக்கும், வெட்சிப்போர் முதலிய மற வாழ்க்கைக்கும், அன்பு வேண்டும் என்னுங் கருத்தால் திருவள்ளுவர்

''அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கு மஃதே துணை'' (*குறள்*–76)

என்பராயினார்.

அன்பிலிருந்து ஆர்வம் தோன்றும்; அவ்வார்வம் இயல் பாகவே உடையவராகப் பெற்றிருக்கும் மனைவி, மக்கள்,

உறவினர் என்னும் இவர்களை நண்பராக்கி இல்லறத்தை மாண்புறச் செய்யும்.

அவ் அன்பிலிருந்து அருளும் தோன்றும்; அவ்வருள் மன்னுயிர்கள் எல்லாவற்றின் மேலும் இரக்கம் வைத்து அவற்றை ஓம்பச் செய்து துறவறத்தை மாண்புறச் செய்யும் என்க.

எனவே, ஆர்வத்திற்கும் அருளுக்கும் அடியாயிருப்பது அன்பாகையால் அது இல்லறத்தார்க்கும் துறவறத்தார்க்கும் வேண்டப்படும் அடிப்பண்பெனக.

கடவுள் அன்பு அல்லது பத்தி

மேலே, உயிர்கள் பிற உயிர்களையும், கடவுளையும் விரும்புதற்கு அடியான உயிர்ப்பண்பு அன்பாகும் என்று கூறப்பட்டது. அவற்றுள் உயிர்கள் கடவுளை விரும்புவதற்கு ஏதுவான பண்பினைச் சமய அறிஞர் பத்தி முதலான பெயர் கூறி வழங்குகின்றனர்.

''அன்பு பத்திநல் லாதரம்
ஆர்வமங் கருத்தியோ டுறுநேயம்
இன்ப மார்விருப் புடனெழிற்
காதலும் இராகமோ டெலையில்லாத்
துன்பி லாசையும் எனஇவை
ஈசனற் றுணைக்கழ லுறுபத்திக்
கென்ப தாம்பரி யாயநற்
பெயரென இசைத்தனர் பெரியோரே''

(பெருந்திரட்டு - பத்திமான்மியம்-5

என்னும் செய்யுளின்படி, அன்பும் பத்தியும் ஆதரமும் ஆர்வமும் அருத்தியும் நேயமும் விருப்பமும் காதலும் பரமராகமும் அளவற்ற ஆசையும் என்னும் இவை கடவுள் பத்திக்குப் பரியாயப் பெயர்களாகும்.

பத்திப் பயன்

உலகப் பற்றில் மூழ்கித் துன்புறும் உயிர்கள் அப்பற்றி லிருந்து விலகி இறைநிலையை அடையக் கருவியாயிருப்பது பத்தியாகும். பத்தியின் சிறப்பினை விளக்கப் பிரபுலிங்க லீலையில் ஒருகதை உள்ளது. பெரும் புதையலை அஞ்சன மிட்டுக் காணும் விழியுடையவன் போல, மேலான அல்லம தேவனாகிய அருட்குரவனைத் தானும் கண்டு அன்பர்கட்கும் காட்டுவோன்இந்நந்தியே யென்று புகழ்ந்து, என் சத்தியினாலே உயிர்களை உலகப்பற்றில் மூழ்குமாறு பந்தப்படுத்தி விடுகின்றேன். அப்பந்தத்தைத் தன் தூயபத்தியால் அவிழ்த்து விடும் வல்லமை படைத்தோன் இந்நந்தியேயாவன்; அதனால் விலங்கு பூட்டுபவன் அருளுடையவனா? அவ் விலங்கிலிருந்து விடுவிப்பவன் அருளுடையவனா? என்பனவற்றை உணர்ந்து கொள்ளுங்கள்' என்று சிவகணங்களுக்கு நந்திகேசுரருடைய பத்திப் பெருமையைச் சிவபெருமான் கூறினாராம்.

இக்கதையால் **உலகப்பற்றை விட்டுச் சிவப்பேறடைதற்குப் பத்தியே சிறந்த கருவியாகும்** என்பது புலனாகிறது. **மெய்கண்டார்** "அயரா அன்பில் அரன்கழல் செலுமே" என்பர்.

பத்தியால் விளையும் மெய்ப்பாடும் பயனும்

கடவுளிடத்தே ஒருவர்க்கு இறவாத இன்பபத்தி தோன்று மாயின் கடவுள் உண்மையை உணர்ந்த பொழுதும் கேட்ட பொழுதும் அவன் அருள்வடிவைக் கண்டபொழுதும் தன்வச மிழந்து பரவச மாதலும், உரோமஞ் சிலிர்த்தலும், இன்பக் கண்ணீர் பொழிதலும் விம்முதலும் நாத்தழுதழுத்தலும், உரை தடுமாறலும் ஆனந்தக் கூத்தாடுதலும், என்புருகப் பாடுதலும், பணிதலும், பணி செய்தலும் எனும் இவை முதலாயின மெய்ப்பாடு விளையு மென்க. முடிவாக அவர்களிடத்தே பத்தியால் விளைவது பரம் என்னும் கடவுள் என்க. இதனைப் "பத்தி யாகும்மெய்க் கடலிடை எழுதரும் அமுது நற்பரம்" என்று பெருந்திரட்டு கூறுகின்றது.

இப்பத்தி பல பிறவிகளில் பாவச் செயலே பயின்று வன்மை படைத்தவர் உள்ளத்திற் சிறிதும் தோன்றாமல், பல பிறவிகளில் அறச் செயல் புரிந்து இளகுதல் படைத்தவர் உள்ளத்தில்தான் நன்கு தோன்றி வளருமென்க.

சேக்கிழார் கண்ணப்ப நாயனாரின் பத்தியை "முன்பு செய்தவத்தின் ஈட்டம் முடிவிலா இன்பமான அன்பினை எடுத்துக் காட்ட" என்று கூறுகின்றார்.

பத்தியின் வகை

மேற்கூறிய பத்தி புறப்பத்தி யென்றும் அகப்பத்தி என்றும் இருவகையாகும். இறைவன் அருளுருவத்தை வைத்து வழிபாடு செய்வதெல்லாம் புறப்பத்தியாகும். இறைவனை மனத்தில் வைத்து எண்ணுதலும், உயிர்க்குள் உயிராயிருக்கும் இறைவனை உணர்ந்து அவன் முதல்வன்; நாம் அவன் அடிமை என்று உணர்ந்தொழுகுதலும் அகப்பத்தியாகும்.

இன்னும் இப்பத்தி செயல்முறையினாலே, இறைவனைப் புகழ்த லென்றும், பிறர்புகழக் கேட்டலென்றும், நினைத லென்றும், குற்றேவல் புரிதலென்றும், பூசித்தலென்றும், தொழுதலென்றும், தொண்டு புரிதலென்றும், தோழமை கொள்ளுதலென்றும், தன்னை இறைவனுக்குக் கொடுத்த லென்றும் ஒன்பது வகையா இருக்கும்

"புகழ்தல் கேட்கை புனிதற் கருதுதல்
மகிழ்குற் றேவல் அருச்சனை வந்தனை
தொகுநற் றொண்டொடு தோழமை நற்கொடை
பகரு மற்றிவை நன்னவ பத்தியே"

(சித்தாந்த சிகாமணி—பத்தி-2)

மேலும் இப்பத்தி, மனம், சொல், உடம்பு என்னும் மூன்று கருவிகளால் முன்று வகையாகவும் இருக்கும். இறைவனை மனத்தால் எண்ணுதலும் சொல்லாற் புகழ்தலும் உடம்பாற் பூசித்தலும் அவ்வகை என்க.

உயர்ந்த பத்தி

மேற் கூறிய ஒன்பது வகைப் பத்திகளுள் ஈற்றிலுள்ள பத்தி 'தன்னை இறைவனுக்குக் கொடுத்தல்' என்பது. அது எல்லாப் பத்திகளிலும் உயர்ந்த பத்தியாகும். இதனை வடநூலார் ஆத்ம நிவேதன பத்தி என்பர்.

மணிவாசகர்

''இன்பே அருளி எனையுருக்கி உயிருண் கின்ற எம்மானே' என்று இதனைக் கூறுகின்றார்.

திருவுந்தியார் என்னும் அறிவு நூல் இப்பத்தியை;

''நஞ்செயல் அற்றிந்த நாம்அற்ற பின்நாதன்
தன்செயல் தானேயென் றுந்தீபற''

என்று கூறுகின்றது. 'நம் செயலாலே (உயிர்ச்செயலாலே) நாம் நினைத்தகாரியங்களெல்லாம் முடிகின்றன என்னும் எண்ணம் அற்று, நாம் செய்யும் செயலுக்கெல்லாம் நாமே (உயிரே) முதல் என்னும் எண்ணமும் அற்ற பின்; நமக்கு முதல்வனாகிய நாதன்றன் செயல் வழி நம் செயல் நிகழ்கின்றன என்னும் எண்ணமும், அச்செயலுக்கு அவனே முதல் என்னும் அறிவும் உண்டாகும் என்பது மேற்பாட்டின் பொருளாகும்.

இப்பாட்டினை 'நம் செயலும் நாமும் அற்ற பின், நாதன் தன் செயலும் நாதன் தானுமே உளவாம்' என்று இயைக்க. ''தன் செயல் தானே'' என்பது உம்மைத் தொகை. அதனைத் ''தன் செயலும் தானுமே'' என்று விரிக்க.

இப்பாட்டின் கருத்து:- நம் செயலாலே நாம் நினைத்தவை நடக்கின்றன என்பது அற்று, நாதன் செயலாலே அவை நடக்கின்றன என்ற உண்மையை உணர்ந்து நிற்றல் நம் செயல் அறுவதாகும்.

அது போலவே, நம்மிடத்தில் எழும் செயலுக் கெல்லாம் நாமே முதல் என்ற எண்ணம் வராமல் நாதனே முதல்வன் என்ற உண்மையை உணர்ந்தொழுகுதல் நாம் அறுவதாகும் என்க.

பேரறிஞரான சாந்தலிங்க அடிகளார் நம் செயல் அற்று நாதன் செயல்வழி ஒழுகுதலைப் பரபத்தி என்றும், நாம் என்பதற்று நாதனால் நிற்றலைப் பரஞானம் என்றும் கூறுகிறார். பரபத்தியால் ஆணவமல நீக்கமும் பரஞானத்தால் மாயாமல நீக்கமும் உண்டாகுமென்பர்.

''மறத்த லும்நினைத் தலும்செயும் ஆணவம்
மாயைநின் றவைதம்மைத்
துறத்த லேயிராப் பகலகல் வீடெனச்
சொல்வரத் துறவெய்தக்
குறித்திடிற்பர பத்திஞா னத்தினாற்
கூடும்மற் றவைநெஞ்சே!
நிறத்த பத்திநஞ் செயலறின் நாமறின்
நின்றமற் றொன்றாமே''

(*வைராக்கிய சதகம்–31*)

என்பது, அக்கருத்தை உணர்த்தும் பாடலாகும்.

எனவே நம்செயல் இறைவன் செயலுக்குள் அடங்கி நிற்க, நம் செயல் அறவாழும் பரபத்தியும்; நாம் [உயிர்] நாதனுக்குள் அடங்கி நிற்க நாம் அறவாழும் பரஞானமும் தன்னை இறைவனுக்குக் கொடுத்தல் என்னும் உயர்ந்த பத்திவகையுள் அடங்கும் என்க.

பத்தி நூல்களில் சிறந்தது திருவாசகம்

பெருந்திரட்டு என்னும் ஞானநூல், ஞான நூல்களை வேதம் ஆகமம் ஆத்தருரை என்று மூன்று வகையாகப் பிரித்துக் கொண்டு அவற்றின் சிறப்பினை முறையே கூறுகின்றது. அது ஆத்தர் உரையைக் கீழ்வருமாறு சிறப்பிக்கின்றது.

'வேத முடிவு என்னும் உபநிடதங்களையும் ஆகமங்களையும் ஒருவர் கருதிக் கூறும் பொழுது அவர் கூறுவனவற்றைக் குறைவிலா வகைக் கேட்டாலும் கேட்டவருடைய உள்ளமும் உடம்பும் இயல்பாக நிற்கும் குறி அழிந்ததுண்டோ? **திருவாதவூரர்** முதலியோர் அருளிய ஆத்தர் உரையை (ஆப்தர்–உண்மை உரைப்போர்) ஒருவர் கூறக் கேட்பில் கேட்பவருடைய உள்ளமும் உடலும் தம் குறியழிந்து கனலிடைப் பட்ட மெழுகெனக் கரைந்து நிற்போரைக் கண்டீரன்றோ' என்று கூறுகின்றது.

''மறைக ளீறுடன் ஆகம
முதற்கலை மதித்தறைந் திடுபோழ்தில்
குறைவி லாவகைக் கேட்பவர்
உடல்உளம் குறியழிந் ததுமுண்டோ?
அறைவ தாகிய வாதவூ
ரன்முதல் ஆத்தவாக் கியங்கேட்கில்
கறையி லாவுளம் உடல்கனல்
மெழுகெனக் கரைந்தவர் கண்டீரே''
(பெருந் – ஆத்தருரை – சிவானந்த நிலையம்)

என்பது அப்பாடலாகும். அது மறைக ளீறு ஆகமம் முதலான கலைகளைக் காட்டிலும் திருவாதவூரர் முதலியோர் அருளிய ஆத்தவாக்கியம் சிறந்ததென்று கூறி, சிறந்தமைக்குக் காரணத்தையும் கூறியுள்ளது, அத்தகைய ஆத்த வாக்கியத்தில் முதலாவதாகக் கருதத்தக்கது திருவாதவூரர் அருளிச் செய்த திருவாசகம் என்க.

மேற்கூறிய பெருந்திரட்டினைப் போலவே பிற்காலத்து வந்த தவத்திரு – சிவப்பிரகாச சுவாமிகளும்

''வேதம் ஓதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சம்நெக் குருகிநிற்பவர்க் காண்கிலேன்
திருவா சகமிங் கொருகால் ஓதின்
கருங்கல் மனமுங் கரைந்துகக் கண்கள்

தொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
அன்ப ராகுந ரன்றி
மன்பதை யுலகின் மற்றைய ரிலரே''

(நால்வர் நான்மணி மாலை–6)

எனவே திருவாசகம் மறையின் முடிவைக் காட்டிலும் ஆகமங் களைக் காட்டிலும் சிறந்து விளங்கிக் கேட்பவர் தம் உள்ளத்தை உருகச் செய்து உயர்ந்த கடவுட் பத்தியை உண்டாக்குவதில் தலை சிறந்த இலக்கியமாகும் என்பது அறிஞரின் முடிந்த கருத் தாகுமென்க.

அன்பு நூல்

திருவாசகம் உலகப்பற்றில் ஆழ்ந்து கிடந்து மயங்கி வருந்தி நிற்கும் மக்களைத் தட்டி யெழுப்பிச் சிவமாகிய செம்பொருளிடத்திலே அன்பு கொள்ளச் செய்யும் **அன்பு நூல்** என்க. **மணிவாசகர்** இறைவனை 'அன்பினில் விளைந்த ஆரமுது' (பிடித்த–3) என்பர். **திருவள்ளுவரும்,**

அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு (80)

என்னும் குறளில் 'அன்பின் வழியதே உயிர் நிலை' என்பர் இங்கே உயிர் நிலை என்றது வீடுபேற்றினை. இப் பொருள் அறியார் தமக்குத் தோன்றியவாறு உரைப்பர். திருவள்ளுவர் வீடுபேற்றினை உயிர்நிலை என்றும், புக்கில் என்றும், அது வானோர் உலகமாகிய துறக்கத்திற்கு அப்பாற் பட்டதென்றும் கூறுவர்.

பெருந்திரட்டும் திருவாசகமும்

பல ஞான நூல்களிலே உள்ள சிறந்த பாடல்களை எடுத்து அவற்றை முறைப்படி வகுத்துத் திரட்டியநூல் பெருந்திரட் டென்க. அது கலைக்கட்டளை [பொது] என்றும், அநுபவக் கட்டளை [உண்மை] என்றும் இருபிரிவாக உள்ளது. அவற்றுள்

அநுபவக் சுட்டளைப் பிரிவில் உள்ள அன்பியற் பணையும் அன்புப் பணையும் பத்தியின்பாற் படும்.

அவ்விரண்டுள் **முதலாவதாகிய அன்பியற் பணையில்** அன்பினை வேண்டலும் பத்திமான்மியமும் என இரண்டு பகுப்புகள் உள்ளன.

இரண்டாவதாகிய அன்புப் பணையில் அன்பர் கூட்டமும், அன்பரிற் கூட விரும்புதலும், அன்பரிற் கூடிய வியப்பும், அன்பர்தஞ் சிறப்பும், அன்பர்திறத்தின் அறிகுறியும், அன்பொடு கூடாவன்பருக்கு அஞ்சுதலும் என ஆறு பகுப்புகள் உள்ளன.

மேற்கண்ட இரண்டு பகுப்புகளுக்கும் ஏற்ற பல பாடல்கள் திருவாசகத்திலிருந்து தேர்ந்து எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

இன்னும் பெருந்திரட்டுள் உள்ள பல பணைகளின் பகுப்புகளுக்கும் திருவாசகத்திலிருந்து பாடல்கள் தெரிவுசெய்து எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. அப்பகுப்புத் தலைப்புக்களை நோக்கித் திருவாசகப் பாடற் பொருள்களை உணர்ந்து கொண்டால், அது அறிஞர்க்கு நல் விருந்தாக அமையும்.

மேலும், பெருந்திரட்டில் தொகுக்கப்பட்ட நூல்கள் திருவாசகப்பாடற் பகுதியை எடுத்துக் கூறித் தம் கருத்தைக் கூறுவனவாகவும் உள்ளன. உதாரணமாகக் கீழ்வரும் பாடலைக் காண்க.

''முழுதுந் தன்னையே தழுவிட
தழுவிடும் மூலமாம் இறைவந்து
பழுதொன் றின்றிய பத்திநன்
வலையினிற் படுமெனும் அதுகண்டால்
எழுதுங் கல்வியும் இலங்குற்
றவங்களும் யோகஞா னமுமெங்கே?
அழிவொன் றின்றிய அன்பினன்
பெருமையை அறையவும் முடியாதே''

(பெருந் – பத்தி – 8 மெய்ஞ்ஞான நிலயம்)

என்னும் இப்பாட்டு 'சித்தமும் செல்லாச் சேட்சியன் காண்க' 'பத்தி வலையிற் படுவோன் காண்க' என்னும் [41-42] திருவண்டப் பகுதி அடிகளை எடுத்துக் கூறிப் பத்தியின் பெருமையை விளக்குகின்றது.

திருவாசகத்துள் சிவபுராணம்

மாணிக்கவாசகர் முதன் முதல் பாடிய பாடல்கள் **சென்னிப்பத்து** என்று **நம்பிதிருவிளையாடற்புராணம்** கூறு கின்றது.

ஆனால் **திருவாதவூரர் புராணம்** கூறுவது:

வாதவூரர் திருப்பெருந்துறையில் குருந்த மரத்தின் கீழ் தெய்வத்தன்மையுடைய ஒரு பீடஞ் செய்து அதன் மேலே வரந் தரும் சிவந்த தாமரை மலர் போன்ற திருவடிகளைச் செய்தமைத்து வழி பட்டு வரும் நாளில் ஒரு நாள் இறைவன் அன்பிலாத பண்பினரெனினும் தன்னைப் பாடினார்க்கு இரங்கும் என்று கருதிக்கொண்டு 'நமச்சிவாய வாழ்க' என்ற முதன் மந்திரமொழியைத் தொடங்கி இறைவன் திருவடியைப் புகழ்ந்து கூறிப் பின் ஞானவாசகம் பகரலுற்றார் [திருவம்பலச் சருக்கம் 10-11] என்று கூறுகிறது. இதனால், திருவாசகத் திற்கு ஞானவாசகம் என்ற பெயருண்மை பெறப்படும்.

எப்படி யிருப்பினும் திருவாசகச் சுவடிகள் எல்லா வற்றினும் சிவபுராணமே முதல் இடத்தைப் பெற்றிருக்கின்றது.

"சிவனவனென் சிந்தையுள் நின்ற வதனால்
அவனரு ளாலே அவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் மோய உரைப்பனியான்" (17-20)

என்னும் சிவபுராணப் பாடற் பகுதியை நோக்கினால், இப்பாட்டு மாணிக்கவாசகராலேயே 'சிவபுராணம்' என்று

பெயரிடப் பெற்று, அவனருளாலே அவன்தாளை வணங்கிக் கொண்டும் இயற்றப்பட்ட தென்ற செய்தி புலனாகின்றது.

சிவபுராணப் பொருள்

'சிவபுராணம்' என்பதற்குச் 'சிவனது அநாதி முறையான பழமை' என்று அறிஞர் பொருள் கூறுவர். சிவபெருமானுக்கும் 'பழையோன்' என்றொரு பெயர் உண்டு. **மாணிக்கவாசகர்** 'முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே' என்று இறைவனின் பழமையைப், பழமைக்கும் பழமையென்பர். எனவே சிவபுராணம் என்பதற்குப் '**பழம்பொருளாகிய சிவத்தின் பழமை இயல்புகளைக் கூறுவது**' என்று பொருள் கூறுவது பொருந்தும்.

சிவபுராணக் கருத்து

அறிஞரிலொருவர்

> **''ஈசர் தமக்கியல்பான திருநாம முதலெவையும்**
> **மாசறவே வாழ்கவென வாழ்த்துகின்ற அருட்குறிப்பாம்''**

என்று சிவபுராணத்திற்குக் கருத்துக் கூறுகின்றார். ஆனால், சிவபுராணம் சிவபெருமானுடைய திருவடியை வாழ்த்திக் கொண்டு பழமைப் பொருள் தரும் அவன்றன் திருப்பெயரைச் சொல்லிச் சொல்லி முன்னிலைப்படுத்தி அழைத்துப் பரவுவதாகவே அமைந்து உள்ளது. அழைத்தலுக்கு 'அகவல்' என்றொரு பெயருண்டு. தெய்வத்தை வழிபடும் முறையில் அதனை முன்னிலைப்படுத்தி அழைத்துப் பரவுவது ஒரு முறையாகும். இம்முறையமைந்த பாடல்களைத் தொல்காப்பியர் வண்ணக ஒத்தாழிசை யென்றும், கொச்சக ஒருபோகென்றும், அம்போதரங்கமென்றும், கூறுவர். இப் பாடல்களிலெல்லாம் 'எண்' என்ற சிறப்புறுப்பு முன்னிலைப் படுத்தி அழைத்துப் பரவுவது ஒரு முறையாகும். இம்முறை யமைந்த பாடல்களைத் தொல்காப்பியர் வண்ணக ஒத்தாழிசை யென்றும், கொச்சக ஒருபோகென்றும், அம்போதரங்க மென்றும், கூறுவர். இப்பாடல்களிலெல்லாம் 'எண்' என்ற

சிறப்புறுப்பு முன்னிலைப் பரவலாக அமைந்திருக்கும் முறை கருதத்தக்கதொன்றாகும்

பரவலும் பழிச்சலும்

பரவல் என்பதும், பழிச்சல் என்பதும் ஒருவன் கடவுள் முன்னின்று கடவுளை முன்னிலைப் பெயரால் விளித்து மலர் தூவி வழுத்துதற் பொருளில் வரும் என்று **இளம்பூரணர்** கருதுகிறார். அவர் 'உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே' (தொல்-உரி 96) என்னும் நூற்பா உரையில்,

என்னை?

'பரவும் பழிச்சும் வழுத்தின் பொருள்' [தொல்-உரி-85] என்பதனால், பொருள் உணராத மடவோரை மற்றொரு வாய்பாட்டால் உணர்த்துக. இதனால் பொருள் உணராக்கால், மேல் நோக்கிச் சில மலர்கொடு தூவிக்காட்ட உணருமேல் 'அ:.தே உணர்ச்சி வாயிலாக அறிக' என்று கூறுவதைக் கருதுக. இதில் இருந்து, திருக்கோயில்களில் இப்பொழுது வழங்கும் 'அருச்சனை' என்பதைப் பண்டையோர் 'எண்' என்ற பெயரால் வழங்கி வந்தனர் என்ற உண்மை கருதி உணரத்தக்கதொன்றாம். இக்கருத்தைத் தெளிவாக உணர்ந்து கொண்டால் அருச்சனை எண்ணிற்கெல்லாம் வடமொழி முறைபற்றி நான்காம் வேற்றுமைப் பொருள் கூறாமல் தமிழ் மொழி முறைபற்றி விளிவேற்றுமைப் பொருள் கூறுதலே தக்கதென்க.

சிவபுராண யாப்பு

தமிழ்ப்பொழில் துணர் 57, மலர் 11-இல் (பிப்ரவரி-மார்ச்சு-1984) 'சிவபுராண யாப்பு' என்ற தலைப்பில் கட்டுரை ஒன்று விரிவாக எழுதியுள்ளேன். அதனை இந்நூலின் பின்னிணைப்பில் உணர்க. அதன் சுருக்கத்தை இங்கே தருகின்றேன்.

இச்சிவபுராணப் பாட்டினைப் பல திருவாசகப் பிரதிகள் சிவபுராணத்தகவல் என்றே குறிப்பிடுகின்றன. அன்றித் திருவாதவூரர் புராணமும் 'அகவல்' என்றே குறிப்பிடுகின்றது. திருவாசகப் பதிகவரிசை கூறும் வெண்பா அந்தாதியும்,

''திருவகவல் நான்கின் றிறங்கேளாய் நெஞ்சே''

என்று சிவபுராணம் மூதலிய நான்கினையும் 'திருஅகவல்' என்றே கூறுகின்றது.

இச்சிவயுராணம் முற்றிலும் இயற்சீர் விகற்பத்தால் வந்த வெண்டளைகளையும், வெண்சீர் ஒன்றிவந்த வெண்டளை களையும் பெற்று, ஈற்றடி பிறப்பு என்னும் அசைச்சீரால் முடிதலின் இது அகவலன்று; வெண்பா யாப்பினை உடைய தென்பது தேற்றமாகும்.

ஆனால், இப்பாட்டில் அடிகளார் இறைவனை உளங்கனிய அழைத்தழைத்து ஓவென்று கூறி முறையிடுவதால், 'அகவல் என்பது அழைத்தலுமாகும்' என்று பிங்கல நிகண்டு கூறுவதால், பொருளால் அகவலாகும். யாப்பால் அகவலன்று.

இப்பாட்டினைச் சிலர் **கலிவெண்பா** என்று கூறுகின்றனர். தொல்காப்பியர் கூறும் இலக்கணப்படி வண்ணக ஒத்தாழிசையும், கொச்சக ஒருபோகும் அம்போதரங்கமும் அல்லாத கலிப்பாக்களெல்லாம் காமப்பொருள் பற்றியே வரல் வேண்டும். 'தூய அகப்பொருண்மே லன்றி அருங்கலிகள் வாரா., [44] என்று வச்சணத்தி மாலையும் கூறுகின்றது.

இப்பாட்டு முற்றிலும் வெண்பா யாப்பாகவே வந்து இறுதி வெண்பா யாப்பால் முடிந்தாலும் அகப்பொருண் மேலதாய் வாராமல் புறப்பொருட்கண் தெய்வத்தை முன்னிலைக்கண் வைத்துப் பரவும் துறையில் வந்துள்ளதால் கலிவெண்பா அன்று. இஃது ஒருவகை வெண்பா யாப்பினை உடைய தாகும்.

தொல்காப்பியர் செய்யுளியலில் வெண்பாவகைகளை

"நெடுவெண் பாட்டே குறுவெண் பாட்டே
கைக்கிளை பரிபாட் டங்கதஞ் செய்யுளொடு
ஒத்தவை யெல்லாம் வெண்பா யாப்பின" (114)

என்ற நூற்பாவினால் அறுவகையாகக் கூறியுள்ளார். அவ்வறுவகையுள் ஒன்று ஈற்றில் உள்ள செய்யுள் வெண்பா ஆகும். அது செவியுறைச் செய்யுளாகவும் [124] அங்கதச் செய்யுளாகவும் [125] வரும் என்பர். **அவ்விரண்டுள் செவியுறைப் பொருளாக வந்த செய்யுள் வெண்பாவே இச்சிவபுராணப் பாட்டென்க**. இது 'முடிபொருளல்லாது அடியளபிலவாய்' [தொல்-செய்-153] வருமாதலின் வரையறை யில்லாமல் பொருள் முடிவே அளவாய்த் தொண்ணூற்றைந்து அடிகளால் வந்துள்ளது.

சிவபுராணப் பயன்

பெருந்திரட்டு கலைக்கட்டளை, அநுபவக்கட்டளை என்று இரண்டு பிரிவாக உள்ளது. கலைக்கட்டளையைப் பொது வென்றும், அநுபவக்கட்டளையை உண்மை என்றும் கூறுவர். அநுபவக்கட்டளையாகிய உண்மைப் பகுதியிலேயே திருவாசகப் பாடல்கள் மிகுதியாக எடுத்தமைத்துக் கொள்ளப்பபடுள்ளன அதனால், திருவாசகம் சிவானுபூதியைக் கூறும் சிறந்த இலக்கிய மாகும். திருவாதவூரர் புராணமும் இதனை **ஞானவாசகம்** என்றே கூறுகிறது. இத்திருவாசகத்திற்கு முதலாகிய சிவபுராணத்தைச்

'சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் மோய உரைப்பனியான்' '(10-20)

என்றும்,

'சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்'

என்றும் அடிகளார் கூறுவதால் சிவபுராணத்தை முறைப்படி பொருளுணர்ந்து ஓதுவதால் முந்தை வினை முழுதும் கெட மன மகிழ்ச்சி உண்டாதலாகிய இம்மைப்பயனும், பின்னர் சிவனடிக் கீழ் வாழ்தலாகிய மறுமைப் பயனும் உண்டாகு மென்க.

''போற்றி போற்றி புராண காரண
போற்றி போற்றி சயசய போற்றி''

சிவா திருச்சிற்றம்பலம்

உ
சிவா திருச்சிற்றம்பலம்

தவத்திரு மாணிக்கவாசக சுவாமிகள்
திருவாய் மலர்ந்தருளிய திருவாசகம் என்னும்
ஞானவாசகத்துள் முதல் வாசகமாகிய

சிவபுராணம்

இது சிவனது அநாதி முறைமையான பழைமையை உரைப்பது அல்லது, முற்பட்ட பழமையான பண்பையும் அருட் செயலையும் உரைப்பது என்றுமாம். **வடநூலார்** பூர்வத்தில் உண்டானதைப் புராணம் என்பர்.

இப்பாட்டு அகவலும் அன்று, கலி வெண்பாவும் அன்று. **தொல்காப்பியர்** கூறியுள்ள அறுவகை வெண்பாவுள் செவியுறைப் பொருட்டாகிய **செய்யுள் வெண்பா** என்க.

இப்பாட்டு பாயிரப் பொருள் உரைப்பதும், புராணப் பொருள் உரைப்பதும், பயன் உரைப்பதும் என மூன்று பகுப்பினை உடையது. இம் மூன்றுள் சிவபுராணப் பாயிரம் முதல் அடியில் இருந்து முப்பத்திரண்டு அடிவரையாகும். "உய்யவென் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற மெய்யா" என்பதிலிருந்து "அல்லற்பிறவி அறுப்பானே ஓவென்று" (33–91) என்பதுவரை சிவபுராணமாகும். எஞ்சியன (92–95) பயன் என்க.

பாயிரத்துள் முதலடியிலிருந்து பதினாறு அடிவரை அவனருளாலே அவன்றாள் வணங்கலும், பதினேழாம் அடியில் இருந்து முப்பத்திரண்டாம் அடிவரை நுதலிய துரைத்தலும் இம்மைப் பயனும் அவையடக்கங் கூறுதலுமாகும்.

பாட்டு

நமச்சிவாய! வா அழ்க; நாதன்றாள்! வாழ்க;
இமைப்பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான் தாள்!வாழ்க;
கோகழி யாண்ட குருமணிதன் தாள்!வாழ்க;
[1]ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்!வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடி!வாழ்க;

சு.வே:– 1 'ஆகமுமாகிநின்'

வேகங் கெடுத்தாண்ட வேந்த னடி!வெல்க;
பிறப்பறுக்கும்[2]பிஞ்சகன்றன் பெய்கழல்கள்! வெல்க;
[3]புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள்! வெல்க;
கரங்குவிவார் உண்மகிழும் கோன்கழல்கள்! வெல்க;
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்!வெல்க;
ஈசன் அடி!போற்றி; எந்தை அடி!போற்றி;
தேசன் அடி!போற்றி; சிவன்சே வடி!போற்றி;
நேயத்தே நின்ற நிமலன் அடி!போற்றி;
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடி!போற்றிச்
சீரார் பெருந்துறைநந் தேவன் அடி!போற்றி;
ஆராத இன்பம் அருளும் மலை!போற்றிச்;
சிவனவன்என் சிந்தையுள் நின்ற வதனால்
அவனரு ளாலே அவன்றாள் [4]வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் [5]மோய உரைப்பனியான்
[6]கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து [7]மிக்காய் விளங்கொளியாய்
[8]எண்ணிறந் தெல்லை இலாதானே! நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
[9]பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் [10]தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்!
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்;

சு.வே:- 2 'பிஞ்ஞகன்றன்' 3 'புறத்தார்க்குஞ்' 4 'வணங்கி'
5 'ஓய' 6 'கண்ணுதல்யான்' 7 'மிக்கா'
8 'எண்ணிறைந்து' 9 'பன்மிருக' 10 'தாபர'

சிவபுராணம் 30-91

உய்யவென்[11] உள்ளத்துள் ஓங்கார மாய் நின்ற
[12]மெய்யா! விமலா! விடைப்பாகா! வேதங்கள்
[13]ஐயா எனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே!
வெய்யாய்! தணியாய்! இயமான னாம் விமலா!
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே!
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே!
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே!
ஆக்கம் அளவிறுதி இல்லாய்! அனைத்துலகும்
ஆக்குவாய்! காப்பாய்! அழிப்பாய்! அருள்தருவாய்!
போக்குவாய்! என்னைப் புகுவிப்பாய்! நின்றொழும்பின்;
[14]நாற்றத்தின் நேரியாய்ச்! சேயாய்! நணியானே!
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே!
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்!
நிறங்களோ ரைந்துடையாய்! விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய்! எம்பெருமான்! வல்வினையேன் றன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவ மென்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது [15]வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்தஅன் பாகிக் [16]கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி

சு.வே: 11 'உள்ளத்தின்' 12 'மெய்யே' 13 'ஐயாய்'
14 'ஆற்றத்தின் நேரியாய்' (பிருங்கி மாநகரம் சி. ராமசாமி முதலியார் பதிப்பு) 15 'வாசற் குடிலை'
16 'கசிந்துள்ளுருகி'

நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே!
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே!
தேசனே! தேனா ரமுதே! சிவபுரனே!
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் [17]ஆரியனே!
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே!
ஆரா அமுதே! அளவிலாப் பெம்மானே!
ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே!
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே!
இன்பமுந் துன்பமும் இல்லானே! உள்ளானே!
அன்பருக் கன்பனே! யாவையுமாய் அல்லையுமாஞ்
சோதியனே! துன்னிருளே! தோன்றாப் பெருமையனே!
ஆதியனே! அந்தம் நடுவாகி அல்லானே!
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே!
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே! நுணுக்கரிய நுண்ணுணர்வே!
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே!
காக்குமெங் காவலனே! காண்பரிய பேரொளியே!
ஆற்றின்ப வெள்ளமே! அத்தா!மிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே! தேற்றத் தெளிவே!என் [18]சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே! உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேயோ வென்றென்று
[19]போற்றிப் புணர்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே

க.வே: 17 'மாரியனே'. 18 'சிந்தையுள்'
19 போற்றிப் புகழ்ந்திருந்து

கள்ளப் புலக்குரம்பைக் [20]கட்டவிழ்க்க வல்லானே!
நள்ளிருளில் நட்டம் பயின்றாடு நாதனே!
தில்லையுட் கூத்தனே! தென்பாண்டி நாட்டானே!
அல்லற் பிறவி அறுப்பானே! ஓவென்று

சிவபுராணப்பயன் (82 – 93)

சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

சிவா திருச்சிற்றம்பலம்
சிவ புராணம்
முற்றும்.

சு.வே: 20 'கட்டழிக்க வல்லானே' மேலே உள்ள பாடம் 'கட்டி அவிழ்த்திடும் கண்ணுதல்தானே' என்னும் திருமந்திரத்திற்கு ஒத்துள்ளது.

உ
சிவா திருச்சிற்றம்பலம்

சிவ புராணச் சிற்றுரை

திருவாதவூரடிகள் திருவாய் மலர்ந்தருளிய சிவபுராணச் செய்யுள் வெண்பாவுள் 'நமச்சிவாய வாழ்க' என்பது முதல் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்' என்பது வரையுள்ள முப்பத்திரண்டடிகளும் இப்புராணப் பாயிர மாகும்.

இப்பாயிரத்துள் முதல் அடியிலிருந்து 'ஆராத இன்பம் அருளும் மலை போற்றி' என்பது வரையிலுள்ள பதினாறு அடிகளும் 'அவனருளாலே அவன்றாள் வணங்கி' என்று அடிகளார் கூறிய கருத்தால் திருவடி வணக்கமாதல் பெறப் படும். மேலும் அடிகளார் 'நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனை' (திருக்கோத் - 12) என்று கூறுதலையுங் காண்க.

இச்சிவபுராணம், திருப்பெருந்துறையில் இறைவன் அருளாசிரியனாக எழுந்தருளி வந்து அடிகளாரை ஆட்கொண்டு பிரிந்து சென்ற காலத்தில், வழிபாட்டிற்காகக் கொடுத்துச் சென்ற திருவடி நிலைக் கீழிருந்து (பாதுகையின் கீழிருந்து) சொல்லிய பாட்டென்பது 'திருவடிக்கீழ்ச் சொல்லிய பாட்டு' (சிவபுரா–92, 93) என்ற பகுதியால் புலனாகிறது.

அருட்குரவனாக வந்த இறைவன், அடிகளார்க்கு அருளிய பின் பிரிந்து சென்ற காலத்தில் தன் திருவடிநிலை இரண்டினையும் வழிபாட்டிற்காகத் தந்து சென்றான் என்ற செய்தியை, **யாதுநீ போவதோர் வகையெனக் கருளாய் வந்துநின் இணையடி தந்தே'** (கோயிற்–6) என்ற பாடற் பகுதியால் உணர்ந்து கொள்ளலாம்.

திருவடி வணக்க வகை

இத்திருவடி வணக்கம் வாழ்க என்றும், வெல்க என்றும், போற்றி என்றும், மூன்று வகையாகக் கூறப்பட்டுள்ளது. இம்

மூன்றும் வணக்கப்பொருளில் வந்திருந்தாலும் தம்முள் பொருள் வேறுபடுவனவாகும்.

இச் சிவபுராணத்தை அகவல் என்று கூறுவதற்கு ஏற்குமாறு. அகவல் என்பது அழைத்தல் என்று பொருள்தருமாதலின். படர்க்கையைத் தன் முகமாக அழைப்பது விளிவேற்றுமைப் பொருளாதலின், தேவரைப் பரவுதல் முன்னிலையிடத்தே வருமாதலின் **இத் திருவடி வணக்கத்தைத் திருவடியை விளித்துக் கூறியதாகக் கொண்டு, திருவடியே! வாழ்க; திருவடியே! வெல்க; திருவடியே! போற்றி என்று பொருள் கூறிக் கொள்க.**

வாழ்க, வெல்க, போற்றி என்ற மூன்றுள், முன்னே, திருவடி வாழ்த்தினை அவர் ஆறு தொடர்களால் கூறியுள்ளார்.

வாழ்க என்பது:

இளம்பூரணர் 'வாழிய என்னும் சேய என்கிளவி' (தொல்–எழு–212) என்னும் நூற்பாவுரையில் ''வாழிய'' என்பது ஏவல் கண்ணாத வியங்கோள்களில் ஒன்றென்றும், வாழுங்காலம் அண்மைய வன்றிச் சேய்மையவாக என்றுணர்த்துஞ் சொல் லென்றும் கூறுவதால், வியங்கோட் பொருட்டாகிய இவ்வாழ்க என்பதற்கு **'நெடுங்காலம் வாழ்க'** என்று பொருள் கூறிக் கொள்க.

(1) **நமச்சிவாய வாழ்க:** என்பது (எல்லா மறைகட்கும் அடியாய் அருளாசிரியனால் முதற்கண் செவியிடத்தே அறிவுறுத்தப்பெற்ற) ஐந்தெழுத்து மறையே நீ பல்லாண்டு வாழ்க (எ–று)

'நமச்சிவய' என்பது ஐந்தெழுத்து மறை. 'சிவ' என்னும் கூடாட்சரமும், 'ய' என்னும் நான்காம் வேற்றுமையும், 'நம:' என்னும் முடிவுச் சொல்லும் சேர்ந்து 'சிவயநம:' என்றும் 'நம' என்னும் முடிவுச் சொல் முதற்கண் வர 'நம: சிவய', என்றும் இரண்டு வகையாகி நிற்கும் ஐந்தெழுத்து மறை என்க; இவற்றுள் விசர்க்கத்தை விடுத்து 'சிவயநம' 'நமசிவய' என்று தமிழ் அறிஞர் வழங்கி வருகின்றனர்.

இவ்விரண்டுள் 'நமசிவய' என்பது ஈண்டு விளி யேற்று 'நமச்சிவாய! என்று நின்றது. நமச்சிவாய விளியாதலை,

''சிற்றம் பலவா! சிவனே! சிவாய!''

என்னும் **அத்துவித வெண்பாவால்** அறிக. 'நமசிவய' என்பது விளி ஏற்காமல் நமச்சிவாய என விகாரப்பட்டு நிற்றலும் உண்டு; அதனைத் **திருமுறைகளிற்** காண்க.

திருமூலர் 'நமசிவய 'சிவயநம' என்னும் இரண்டு வகையான ஐந்தெழுத்து மறைகளையும்,

"நகாரம் மகாரம் சிகாரம் நடுவாய்
வகாரம் இரண்டும் வளியுடன் கூடி
ஒகாரம் முதற்கொண் டொருகால் உரைக்க
மகார முதல்வன் மனத்தகத் தானே",

என்றும்,

"சிகார வகார யகார முடனே
நகார மகார நடுவுற நாடி
ஒகார முடனே ஒருகா லுரைக்க
மகார முதல்வன் மதித்துநின் றானே"

என்றும்,

(976, 982) கூறுதல் காண்க. [வகாரம் இரண்டும், வ, ய]

மேற்கூறிய இரண்டில் 'ஓம் நமசிவாய' என்பதை உரைத்தால் இறைவன் மனத்தகத்தாவான் என்றும், 'ஓம் சிவயநம' என்பதை உரைத்தால் இறைவன் மதித்து நிற்பான் என்றும் இரண்டு வகையாகப் பயன்களைத் **திருமூலர்** கூறியுள்ளார்.

'நமசிவய' என்பதற்குத் திருமூலர் சொல்லும்' 'மனத்தகத் தான்' என்பதையும், மாணிக்கவாசகர் 'நமச்சிவாய வாழ்க என்று ஓதிப் பின்னர் 'இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க' என்று ஓதுவதையும் அன்பர் ஒப்பிட்டுப் பார்க்க.

மேலும் **திருமுலர்**, நகாரத்தை முதல் வைத்து ஓதினால் வல்வினை அடங்குமென்றும், சிகாரத்தை முதல் வைத்து ஓதினால் சதாசிவமூர்த்தியே முதலாய் விளங்குமென்றும் ஓதுதல் காண்க.

"நம்முதல் ஓரைந்தின் நாடுங் கருமங்கள்
அம்முதல் ஐந்தில் அடங்கிய வல்வினை
சிம்முத லுள்ளே தெளியவல் லார்கட்குத்
தம்முத லாகுஞ் சதாசிவந் தானே" (983)

நம:, என்பதை முதலில் வைத்தும், ஈற்றில் வைத்தும் ஓதும் முறையால் 'நமசிவய என்றும் 'சிவயநம என்றும் இரண்டு வகையாக விளங்கும் இவ்வைந்தெழுத்து மறையினை அருளாசிரியர்கள் மாணவர்க்கு உபதேசிக்குங்கால் தொடக்கத்தில் நமசிவய என்னும் முதன் மறையினையே உபதேசித்தலை வழக்கமாகக் கொண்டுள்ளனர். மேலும் **அடிகளார்** திருவடி வாழ்த்தினை முதற்கண் கூறித் தொடங்குகிறார். ஐந்தெழுத்துள் நகாரம் இறைவன் திருவடியைக் குறிக்குமாதலால் நகாரத்தை முதலாக உடைய ஐந்தெழுத்து மறையினையே முதலாக வைத்து 'நமச்சிவாய' வாழ்க என்பர்.

சமய குரவருள் **திருஞான சம்பந்தர்**

"காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே"

என்றும், **திருநாவுக்கரசர்**

"நற்றுணை யாவது நமச்சி வாயவே"

என்றும், **திருநாவலூரர்**

"நான்மறக்கினும் சொல்லும்நா நமச்சிவாயவே"

என்றும், மாணிக்கவாசகர் முதற்கண் கூறிய ஐந்தெழுத்து மறையினையே கூறிச் செல்வதைக் காண்க.

1. நாதன்தாள் வாழ்க: என்பது

(ஆசிரியனாக எழுந்தருளிச் செவி அறிவுறுத்திய திருமறைக்கு உரிய தலைமைப் பொருளாயிருக்கும்) பதியினுடைய திருவடியே வாழ்க (எ–று)

நாதன்-பதி. முக்கியப் பொருள், கௌணப் பொருள் என்று சொற்பொருள் இரண்டு வகைப்படும் அவற்றுள் முக்கியப் பொருளே **தலைமையான பொருளென்க.**

மந்திரங்கட்குரிய தெய்வம், இருடி, சந்தஸ் என்னுமிவற்றை மந்திர நூல் கூறும். இவற்றை ஆசிரியரிடம் கேட்டுணர்க.

திருஞான சம்பந்தர் "நாதன் நாமம் நமச்சிவாயவே" என்று கூறுவதாலும், **திருநாவுக்கரசர்** "சிவன் எனும் நாமம் தனக்கே உரிய செம்மேனி எம்மான்" என்று கூறுவதாலும் நமச்சிவாய மறைக்குத் தெய்வமாய் இருக்கும் நாதன், உலகநாதனாகிய (விசுவநாதன்) பதிப்பொருள் என்க.

அடிகளார் சிவபெருமானை "நாத தத்துவத்தைப் பறையாக உடையவனென்றும், நான்முகன் மாலுக்கும் நாதர் இந்நாதனார் என்றும்" (அன்னைப்பத்து-1) கூறுதலை அறிக.

2. இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க என்பது:

என் மனநினைவில், நமச்சிவாய என்னும் திருமறையாகவும், அம் மறைப்பொருளாகிய நாதனாகவும், இமை என்னும் சிற்றளவுப் பொழுது தானும் நீங்கா திருப்பவனுடைய திருவடியே! வாழ்க. (எ-று)

இறைவன் மறையாகவும், மறைப்பொருளாகவும் தன் மனத்தில் எப்போழுது இருத்தலைக் கருதி இவ்வாறு கூறினார். இதனை,

"மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்
மனத்திடை மன்னிய மன்னே" (கோயிற்-5)

என்று மற்றோரிடத்தில் **அடிகள்** கூறியுள்ளதால் உணரலாம். **அடிகளார்** பிறிதோரிடத்தில் "போற்றி ஓம் நமச்சிவாய" (திருச்சத-62) என்று விளித்துக் கூறுதலையும், இறைவனுடைய திருவடியைப் பணியும் பொழுது 'நமச்சிவாய' என்று கூறிக் கொண்டு பணிய வேண்டும் என்னும் முறையை, "நமச்சிவாய

வென்று உன்னடி பணியாப் பேயனாகிலும் பெருநெறி காட்டாய் (செத்தி-6) என்று கூறுதலையும் அறிக.

எல்லா உயிர்களின் நெஞ்சத்தாமரையிலும் இறைவன் சிறிது பொழுதும் நீங்காமலிருப்பன் என்ற பொதுநிலையைக் கூற வந்தது இப்பகுதி என்று கருதிக் கொண்டு இவ்வடிக்கு அறிஞர் உரை கூறுகின்றனர்.

ஆனால் அடிகளார் இங்கே குருமணி உபதேசித்த திருமறையினையும், அதன் உட்பொருளையும் இமைப் பொழுதளவும் மறவாமலிருக்கும் தம்முடைய அனுபவ நிலையினையே முதற் கண் சுட்டிக் கூறுகின்றா ரென்பது, ஆழ்ந்து உணர்வார்க்குப் புலனாம்.

இறைவன் தம்மனத்துள் எப்பொழுதும் அகலா திருக்கும் நிலையை அடிகளார்

“இன்பம் பெருக்கி இருளகற்றி எஞ்ஞான்றும்
துன்பந் தொடர்வறுத்துச் சோதியாய்-அன்பமைத்துச்
சீரார் பெருந்துறையான் என்னுடைய சிந்தையே
ஊராகக் கொண்டான் உவந்து” (பண்டாய-1)

என்றும்,

உன்னற் கரியசீர் உத்தர மங்கையர்
மன்னுவ தென்னெஞ்சில்” (அன்னை-6)

என்றும் கூறுவதறிக.

“மாடத்து ளானலன் மண்டபத் தானலன்
கூடத்து ளானலன் கோயிலுள் ளானலன்
வேடத்து ளானலன் வேட்கைவிட் டார்நெஞ்சில்.
மூடத்து ளேநின்று முத்திதந் தானே” (2614)
அறிவுடை யார் நெஞ் சகலிட மாவது
அறிவுடை யார்நெஞ் சருந்தவ மாவது
அறிவுடை யார்நெஞ்சொ டாதிப் பிரானும்
அறிவுடை யார்நெஞ்சத் தங்குநின் றானே” (2364)

என்னும் **திருமந்திரப் பாடல்கள்** வேட்கைவிட்ட அறிவுடையார் நெஞ்சில் இறைவன் சிறப்பாக எழுந்தருளியிருக்கும் செய்தியைக் கூறுதல் காண்க.

3. கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க

என்பது ''கோகழியைத் தான் வாழுமிடமாகக் கொண்டருளிய ஆசிரியருட் சிகாமணி போன்றவனுடைய திருவடியே வாழ்க'' (எ-று)

குந்தல நாடாகிய பெல்லாரியில் நருமதை ஆற்றங்கரையில் அறுபத்து நான்கு இயக்கிமார்கள் அமைத்துள்ளது கோகழித் திருமடம் என்க. மாணிக்க வாசகரை ஆட்கொண்டருளிய அருளாசிரியர் இம்மடத்தினைச் சார்ந்தவராவார்.

அடிகளார் ''கடையேனைத் தொண்டாகக் கொண்டருளும் கோகழி எங்கோமாற்கு'' (பண்டாய-1) என்றும், ''கோகழி மேவிய கோவே போற்றி'' (போற்றி-57) என்றும், ''கோகழி நாதனைக் கூவாய்'' (குயிற்-1) என்றும் தமக்கு உபதேசித்த ஆசிரியரைக் கோகழிக் குரியவராகக் கூறுதலைக் காண்க.

மேலும் அவர் 'நண்ணிப் பெருந்துறையை நம்மிடர்கள் போயகல எண்ணி எழுங்கோ கழிக்கரசை' (பண்டாய-5) என்று கூறுவதால், இக்குருமணி கோகழிக் கரசாயிருந்து திருப்பெருந்துறையிடத்தே வந்து உபதேசித்தார் என்னும் செய்தி புலனாகிறது.

ஆனால், மதுரையில் உள்ள சொக்கலிங்கப் பெருமானே அருளாசிரியனாக எழுந்தருளி அடிகளார்க்கு ஞானோபதேசம் செய்தார் என்று **திருவிளையாடற்புராணம்** கூறுகின்றது. அடிகளாரும் ''கூடல் இலங்கு குருமணி போற்றி; (போற்றி-91) என்றும், இச்சிவபுராண ஈற்றில் 'தென்பாண்டி நாட்டானே அல்லற் பிறவி அறுப்பானே! என்றும் கூறுவர்.

அதனால், சொக்கலிங்கப் பெருமான் திருவருளால் கோகழிக் குரு வந்து அருள் செய்தார் போலும்.

குருமணி என்றதன் பொருளை அடுத்த அடிக்குக் கூறும் உரையால் உணர்க.

4. ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான் தாள்வாழ்க என்றது

அபர ஞானமாகிய சிவாகமம் ஆகி நின்று இனிப்பைத் தருவானுடைய திருவடியே! வாழ்க. (எ–று)

அண்ணித்தல்–இனித்தல். "பாயமு தாகிநின் றண்ணிக்கின் றானே" என்பது திருமந்திரம் (2365)

இவ்வடிக்கு வீரசைவ அறிஞர் கூறும் உரை வருமாறு:–

மேலே "கோகழி யாண்ட குருமணி" (3–சிவ என்ற சொற் றொடரால் குரு குறிக்கப்பட்டுள்ளார். அக்குரு, ஞான விளக்கம் உண்டாக்கிப் பாசத்தைக் கெடுக்கும் தீட்சாகுரு வென்றும், சிவாகமங்களைக் கற்பிக்கும் சிட்சா குரு வென்றும், ஐயங்களை நீக்கி அனுபவ ஞானமாகிய பரஞானத்தைத் தரும் ஞான குரு வென்றும் மூன்று வகையினர் ஆவர் என்க.

'குருமணி' என்பதற்குக் குருசிகாமணி' என்பது பொருளாகும். இதன் பொருள் விளக்கத்தினை,

"யாவன் வாய்மொழி ஐயமென் வனத்தினை எறிய
வாவும் ஒண்பர சாமவன் குருசிகா மணியாம்"

(சித்தாந்த–46–5) என்ற பாடலால் உணர்க.

இம் மூவகைக் குருவினாலே கூறப்படும் ஆகமமும், **கிரியாகமம்** என்றும், **பாவாகமம்** என்றும், **ஞானாகமம்** என்றும் மூன்று வகையாக இருக்கும்.

அவற்றுள் கிரியாகமமாவது, கிரியாலிங்க பூசைக்குரிய நியமத்தைக் கூறுவது. இங்கே நியமம் என்பது, மேலான சிவயோகி செய்து வரும் சிவபூசை–யாகிய நியமம் என்க. அந்நியமத்தை அறிந்த ஆசிரியன் மாணவனுக்கு உபதேசிப்பன். இது கிரியாகமம் என்று கூறப்படும். இது புறப்பூசைக்கு உரியது.

பாவாகமமாவது, விருப்பு வெறுப்பற்ற அப்பரமயோகி, தன் மனத்தினால் சிவனைக் குறித்துச் செய்கின்ற பாவனைக் குறிகளை யெல்லாம் (பாவசின்னங்கள்) அறிந்து, ஆசிரியன் மாணவனுக்கு உபதேசிப்பதாம். இது மனத்தின் பாவனையால் இறைவனைக் கருதுவதாகும் இப்பாவனை மூலாதாரம், நெஞ்சத்தாமரை, புருவநாப்பண் முதலிய இடங்களில் இறைவனைத் தியானித்தலும்' சிவோகம் பாவனை செய்தலும் முதலியனவாம்.

ஞானாகமமாவது மேற்குறிப்பிட்ட பரம யோகியின் ஞான சின்னத்தை ஆசிரியன் அறிந்து, மாணவனுக்கு உபதேசிப்பதாம். சத்து சித்து ஆனந்தமயமாக விளங்கும் இறைவனை ஆசிரியன் உரையாலும், நூல்களாலும், முயற்சி-யாலும் அறிந்து தெளிதலே ஞானாகமப் பயன் என்க.

கிரியாகமம் இட்டலிங்க பூசையினையும், பாவாகமம் பிராண லிங்க– தியானத்தையும், ஞானாகமம் ஞானலிங்க உணர் வினையும் கொடுத்து இனிப்பைத்தருதலால், ''ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க,(சிவ–4) என்றார் அடிகளார்

பாடவேறுபாடு

மன்னார்பாளையம் திரு. சொக்கலிங்கையர் என்னும் வீரசைவர் வீட்டிலிருந்து கிடைத்த திருவாசக ஓலைச்சுவடியில் ''ஆகமும் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க'' என்ற பாடம் உள்ளது. இப்பாடத்திற்கு ''இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காமல் இருத்தலுடன் ஆகமும் (உடம்பின் கண்ணும்) இடங் கொண்டருளியிருந்து இனிப்பைத் தருபவனுடைய திருவடியே வாழ்க'' என்று பொருள் கூறிக்கொள்க.

இப்பொருள் கோவில் திருப்பதிகத்தில் ''சிந்தையே கோவில் கொண்டஎம் பெருமான் திருப்பெருந்துறையுறை சிவனே எந்தையே ஈசா உடலிடம் கொண்டாய்'' (கோவில்திருப்பதிகம் 10) என்றும் கூறும் கருத்துடன் ஒத்திருத்தலைக் காண்க.

இப்பாடம் ''போகமும் இன்பமு மாகிப் போற்றியென் பாரவர் தங்கள், ஆகமும் உறைவிடமாக அமர்ந்தார்'' என்னும் திருஞான சம்பந்தர் தேவாரப் பாடலை நினைவு செய்கின்றது.

5. ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க என்பது

"ஒருவனாகியும் உயிர்களுக்கு அருள்புரியும் பொருட்டு சந்திரசேகரன் முதலான பலமூர்த்தங்களை உடையவனாகியும் விளங்கும் இறைவனுடைய திருவடியே! வாழ்க., (எ-று)

ஏகன் அநேகன் என்பன இறைவனுக்கு அடை. ந+ஏகன் என்னும் சொற்கள் அநேகன் எனப் புணர்ந்தன. 'ந' நேர்ந்த மொழிப்பொருளை நீக்க வரும் இடைச் சொல்லாதலால் ஏகத்தன்மை யில்லாதவன் அநேகன் என்று பொருள்படும்.

அடிகளார் "ஒருவனே போற்றி, (திருச்ச-68) என்றும், "ஒழிவற நிறைந்த ஒருவ போற்றி" (போற்-215) என்றும், 'ஒருவன் என்னும் ஒருவன் காண்க' (திருவண்-43) என்றும், 'அநேகன் காண்க' (திருவண்-39) என்றும், 'ஒன்றாய்; முளைத் தெழுந்து எத்தனையோ கவடுவிட்டு, (திருக்கோத்-7) என்றும் ஏகன் அநேகன் என்னும் இருநிலையைக் கூறுதல் காண்க. திருச்சதகத்தில், "அநேகன் ஏகன் அணு அணுவில் இறந்தாய்" (25) என்றது ஒடுக்கமுறை; இங்கே "ஏகன் அநேகன் இறைவன்" என்றது படைப்பு முறை.

இனி வெல்க என்பது:

"வேகங்கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க" (6) என்பதிலிருந்து "சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன் கழல்வெல்க (10) என்பது வரையிலுள்ள இப்பகுதி "திருவடியே வெல்க" எனவும் திருவடியி லணிந்த "வீரக்கழல்களே" வெல்க எனவும் கூறி வணங்கியதாம்.

பெருந்திரட்டு: என்னும் ஞானநூலுள் சம்பிரதாய இலக்கணங் கூறும் பகுதியில் ஆசிரியன் மாணவனுக்கு அருள் புரியும் நெறிமுறைகளைக் கூறும்பொழுது, "கரத்தில் மலர் கொண்டு மாணவன் உச்சியில் வைத்தும், கண்களால் பாசம் வெந்திட நோக்கியும், மாணவனுடைய உடல் பொருள் உயிர் களை ஏற்றுக் கொண்டும், திருவடிகளைத் தலையின்மேல் வைத்தும் ஆசிரியன் மாணவனுக்கு அருள் புரிவன் என்று கூறும். அப்பொழுது ஆசிரியன் மாணவனுடைய பவம் அறுத்தற்குக் காலில் வீரக்கழல் அணிந்து கொள்ளும் வழக்கமும் உண்டு.

அடிகளார் கோகழிக் குருமணி தமக்கு அருள்செய்த முறையினை நினைந்து கூறும் இப்பகுதியில் குருமணியினுடைய திருவடியினையும், அவ்வடிகளில் அணிந்துள்ள வீரக் கழல்களையும் விளித்து அவற்றிற்கு வெற்றி விளையுமாறு வேண்டுகிறார்.

6. "வேகங் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க"

என்றது, உலகப் பொருள்களின்மேல் ஓடும் மனத்தின் வேகத்தைக் கெடுத்து (பிரவிருத்தியைக் கெடுத்து) தன் அருள் ஆட்சியில் அமைதியுற்று அமையுமாறு என்னை ஆண்டு கொண்ட ஞானவேந்தனுடைய திருவடியே! வெற்றியுடன் விளங்குக. (எ-று)

இங்கே அருளாசிரியனை அடிகளார் வேந்தனாகக் கூறியிருத்தலை "வெண்கொற்றக்குடையும், நவமணிமுடியும் சிங்காதனமும் மன்னவர்க்கே உரிய சிறப்படையாளமாம். அதுபோலப் பிரபஞ்ச மெல்லாவற்றிற்கும் மூல காரணமாகிய ஒரு பெருவெண் கொற்றக் குடையும் எவற்றையும் ஒருங்கே ஓர் இயல்பால் அறியும் பேரறிவாகிய ஒரு பெருஞ்சுடர் முடியும் எவற்றினையும் அங்கங்கே உயிர்க்குயிராய் நின்று செலுத்தும் இயல்பாகிய சிங்காதனமும் பிறர்க்கு இன்றித் தனக்கே உரிமையாகச் சிறந்தமை பற்றிப் பசுக்களுக்குப் பாசங்களை அரித்தலான் அரன் என்னும் பெயருடைய முதல்வனை மன்னனாகவும்" என்று கூறும் சிவஞான போதமாபாடியப் [சி-போ-சூ-8] பகுதியுடன், ஒப்பிட்டுப் படித்தற்கு உரியது.

அடிகளார் இறைவன் வேந்தனாய் வந்து வேகங்கெடுத்தாண்ட செய்தியை

"ஏய்ந்த மாமல ரிட்டுமுட் டாததோர்
இயல்பொடும் வணங்காதே
சாந்த மார்முலைத் தையல்நல் லாரொடும்
தலைதடு மாறாகிப்
போந்தி யான்துயர் புகாவணம் அருள்செய்து
பொற்கழ லிணைகாட்டி
வேந்த னாய்வெளி யேஎன்முன் நின்றதோர்
அற்புதம் விளம்பேனே" [அற்புதப்பத்து-2]

என்னும் பாட்டில் கூறியிருத்தலைக் காண்க.

மேலும் 'மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி'' [சிவ-74]
என்று கூறியதோடன்றி,

''உன்னை உகப்பன் குயிலே
உன்துணைத் தோழியும் ஆவன்
பொன்னை அழித்தநன் மேனிப்
புகழில் திகழும் அழகன்
மன்னன் பரிமிசை வந்த
வள்ளல் பெருந்துறை மேய
தென்னவன் சேரலன் சோழன்
சீர்ப்புயங் கன்வரக் கூவாய்'' [குயிற்பத்து-7]

என்ற பாட்டில் பொதுவாக மன்னனாகவும், சிறப்பாகத் தமிழ் நாட்டு மன்னராகிய தென்னவன் சேரலன் சோழன் என்னும் மூவேந்தராகவும் அடிகளார் கூறியுள்ள செய்திகள் ஒப்புநோக்கி அறியத்தக்கன.

இச் செய்திகளுடன் திருவாசகத்தில் பல்லவ மன்னரைப் பற்றிய குறிப்பு எதுவும் இல்லையென்ற செய்தியும் வரலாற்றறிஞரால் கருதத்தக்கன.

''வேகங் கெடுத்தாண்ட'', என்பதற்குப் ''பசு போதத்தைக் கெடுத்துச் சிவபோதத்தைத் தந்து ஆட்கொள்ளுதல்'' என்று கூறும் (அநுபூதி உரை)

7. ''பிறப்பறுக்கும் பிஞ்சகன்றன் பெய்கழல்கள் வெல்க'' என்றது

'பிஞ்ஜ' என்ற வட சொற்குக் கொல்லுதல் என்று பொருள். இறைவன் பிறவியைக் கொல்பவன் ஆதலால் அவனைப் 'பிறப்பறுக்கும் பிஞ்சகன்' என்றார். பிறப்பினைக் கொல்லும் பிஞ்சகனுடைய சேவடியிற் கட்டிய வீரக்கழல்களே! வெற்றியுடன் விளங்குக (எ-று.)

தவத்திரு-சித்பவாநந்தர் எழுதியுள்ள உரையில் 'பிஞ்சகன்' என்னும் சொல் 'பிஞ்ஞகன்' எனத்திரிந்தது என்னும்கருத்தால் ''பிஞ்ஞகன் - பிஞ்சகன்; கொல்லுபவன், அவன் சிவன்'' என்பர்.

ஆனால் என்னிடம் உள்ள திருவாசகச் சுவடியில் 'பிஞ்சகன்' என்றே பாடம் உள்ளது.

அச்சுப் பிரதிகளில் 'பிஞ்ஞகன்' என்றே பாடம் உள்ளது. 'பிஞ்ஞகம்' என்பது தலைக்கோலத்திற்கு வழங்கும் பெயராகும். **திவாகர நிகண்டு** ''பிஞ்ஞகம் தலைக்கோலம்'' என்று கூறும்.

தவத்திரு – மறைமலையடிகளார் ''சிவபெருமான் திருமுடியும், அம்முடிமேல் அழகிய வெண்பிறையும், குளிர்ந்த கங்கை நீரும் உடையராதல் பற்றிப் பிஞ்ஞகன் எனப்பட்டார்'' என்பர்.

'பின்னகம்' என்னுஞ் சொல் 'பிஞ்ஞகம்' என்றாயிற்று என்றும் அறிஞரிற் சிலர் கருதுகின்றனர். இது பெண்கள் தலைக்கோலத்திற் குரிய பெயராகும். இறைவன் பாதிப்பெண் மேனியனாதலால் அப்பெண் வடிவத்திற்குள்ள தலைக்கோல முடையான் என்று பொருள் கொள்ளலும் ஆம்.

அன்றியே, ஞானோபதேச காலத்தில் ஆசிரியன் தலைப் பாகையாகிய தலைக்கோல மணிந்தும், வீரக்கழலணிந்தும் அருள்புரிதலின், ''பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க'' என்றார் எனலுமாம்.

அடிகளார் ''முற்றுமாய் முற்றுக்கும் பின்னானைப் பிஞ்ஞகனை'' [திருவம் – 19] என்றும் ''பிறைகுலாஞ்சடைப் பிஞ்ஞக னேயோ'' [செத்தி – 7] என்றும் கூறுவனவற்றை நோக்குக.

''பிறப்பறுக்கும்'' என்று தொடங்கும் நான்கடிகளால் பிறப்பறுக்குங் கழலுக்கு வெல்கை கூறுகின்றார். திருவடியில் அணியப்பெற்றதால் 'கழல்கள் வெல்க' (7) ''கழல் வெல்க'' (10) என்று கூறியதும்தாள் வணக்கமாகவே கருதப்படும் என்க.

''பிறவியை வேர் அறுக்கவல்ல தலைக்கோலப் பெருமா னுடைய வீரச் சிலம்பு நிறைந்த திருவடிகள் சிறந்து விளங்குக'' என்பது திரு கா. சுப்ரமணிய பிள்ளை உரையாகும்.

பிங்கல நிகண்டு கழலைப்பற்றி

"ஆடவர் கொடையால் வீரத் தாலணி
பாதத் தணியே கழலணி யென்ப"

என்று கூறும்.

8. புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க என்றது

உயிர்க்குள்உயிராய் இறைவன் உளன் என்று அறிந்து வழி படாமல் உயிர்க்குப் புறம்பாய் இறைவன் உளன் என்று கருதி வழிபடுபவர்க்குச் சேய்மையான இடங்களிலே உள்ள வடிவங் களிலிருந்து அருள் புரிபவன்றன் பொலிவு நிறைந்த வீரக் கழல்களே! நீஇர் வெற்றி பெறுக. (எ—று.)

"புறம்பு காண்குவன் புல்லியன் ஈசனை
அறிந்த ஞானி அகமுறக் காண்பனால்"

(பிரபுலிங்க லீலை)

என்று கூறியவாறு. துவிதபாவனை யுடையவர்கள் இறைவனை உயிர்க்குப் புறம்பாக வைத்து வழிபடுவர்; அத்துவிதபாவனை யுடைய ஞானிகள் உயிர்க்குள் உயிராய் இறைவன் இருப்பதை அறிந்து வழிபடுவ ரென்க.

புறத்தார் தலங்களிலே உள்ள மூர்த்திகளையே வழிபடுவர். அகத்தார் உடம்பினுள்ளே உத்தமன் கோயில் கொண்டிருப்பதை அறிந்து வழிபடுவர் என்க. திருமூலர் "**தேயமும் நாடும் திரிந்தெங்கள் நந்தியைக் காயநன் னாட்டிடைக் கண்டுகொண் டேனே**" என்பர்.

தேயமும் நாடும் திரிந்து அங்குள்ள திருக்கோயில்களில் மட்டும் இறைவழிபாடு செய்தல் புறவழிபாடாகும். தம் உடம்பாகிய நாட்டில் கண்டு இறைவழிபாடு செய்தல் அகவழி பாடாகும். புறவழிபாடு செய்பவர்க்கு இறைவன் சேய்மை யிலேயே இருப்பான்; அகவழிபாடு செய்பவர்க்கு இறைவன் எப்பொழுதும் அண்மையிலேயே இருப்பான் என்க.

இறைவன் புறவழிபாடு செய்யும் புறத்தார்க்குச் சகள வடிவமாய்க் காட்சி தருதலால் திருவடியும் கழலும் கூறப்

பட்டுள்ளன. அகவழிபாடு செய்யும் அகத்தார்க்கு இறைவன் நிட்கள வடிவமாய்க் காட்சி தருதலின் அவ்வடிவிற்குத் திருவடியும் கழலும் கூறமுடியாமையின் அதுபற்றி ஒன்றும் கூறாராயினார்.

சகளம் — உடம்புடன் தோன்றிய வடிவம்
நிட்களம் — உடம்பில்லாத வடிவம்

அடிகளார் ''மெய்யடியவர்கட்கு அண்மையனே! என்றுஞ் சேயாய் பிறர்க்கு'' (நீத்தல் – 22) என்றும் கூறுவதால், மெய்யடியாரல்லாதார் புறத்தார் என்றும் கொள்ளலாம்.

9. கரம் குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க என்றது

''கைகள் இயல்பாகவே குவியும்படித் தொழும் அடியவஃ தம் மனம் முதலான அகக் ''கருவிகளெல்லாம் உவகை அடைவதற்குக் காரணமான வேந்தனின் வீரக் கழல்களே! நீஇிர் வெற்றி பெறுக'' (எ-று)

எண்ணிக் குவியாமல் இயல்பாகவே இறைவன்முன் கைகள் குவிதலால் குவிப்பார் என்னாது 'குவிவார்' என்று கூறினார்.

கை குவியத் தொழுபவருடைய உள்ள மயக்கத்தைத் தீர்த்துத் தெளிவினை உண்டாக்கிவிடுதலால், அவர் உள்ளம் உவத்தற்கு ஏதுவாயிற்று. அடிகளார் ''தொழுவார் மையல் துணிப்பாய் போற்றி'' (போற்றித்-218) என்று கூறுதல் காண்க.

மேலும் அவர் ''தொழுத கையின ராகித் தூய்மலர்க் கண்கள் நீர்மல்குந் தொண்டர்க்கு வழுவிலா மலர்ச் சேவடிக்கண்நம் சென்னி மன்னி மலருமே'' (சென்னி-8) என்றும், ''நின் வெறி மலர்த்தாள் தொழுது செல்வான்நல் தொழும்பரிற் கூட்டிடு'' (நீத்தல்-44) என்றும், ''நின் திருமுகத் தெமக்கருள் மலரும் எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்'' [திருப்பள்ளி-1] என்றும் கூறுவர்.

10. ''சிரம் குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க''

என்றது, கரங் குவித்துத் தொழுதல்தான். நெஞ்சுக்கு நேராகவும், நெற்றிக்கு நேராகவும், சிரத்திற்கு மேலாகவும் கரங் குவித்துத் தொழுதலென மூன்று வகைப்படும். அவற்றுள் சிரத்திற்கு மேல் கரங்குவித்துத் தொழுதல் சிறந்ததாகலின் அவ்வாறு தொழுபவரை ஓங்குவிக்கும் செயல் [சீர்] படைத்த வனுடைய **வீரக்கழலே!** வெற்றிபெறுக [எ-று] சீர்-செயல் சிறப்புமாம்

யாவர்க்கும் மேலாம் அளவிலாச் சீருடையான்'' [திருவெண்பா-8] என்பதைக் காண்க.

அடிகளார் ''பூப்புரை அஞ்சலி காந்தள் காட்ட'' [திருவண்-75] என்றும், 'கரமலர் மொட்டித்து' [போற்றி-84] என்றும் பொதுவாகக் கரம் குவித்தலைக் கூறியதன்றிக், ''குஞ்சி அஞ்சலிக்கணே ஆக என்கை'' [திருச்சத-82] என்று சிரத்தின் மேல் கரங்குவித்தலையும் கூறுதல் காண்க.

இங்கே வீரக்கழலை விளித்துக் கூறியது போல மற்றோரி டத்தில் ''சீருடைக் கழலே'' [பிடித்த-1] என்று அடிகள் கழலை விளித்துக் கூறுதலைக் காண்க.

தஞ்சாவூர்ப் பெருவுடையார் கோயிலில் திருப்பதியம் விண்ணப்பஞ் செய்தவனொருவனுக்குச் ''சீருடைக் கழலோன்' என்று பெயரிருத்தலைக் காண்க.

இனி, போற்றி என்பது.

இனி, ஈசனடி போற்றி, [11] என்பதிலிருந்து, ''ஆராத இன்பம் அருளும் மலைபோற்றி'' (16) என்பது வரையிலுள்ள இப்பகுதி, இறைவன் திருவடியை விளித்துப் போற்றி என்று கூறி வணங்கியதாம்.

'போற்றி' என்பதற்கு 'நீ என்னைக் காக்க' என்று பொருள் கூறுவாரும் உண்டு ஆனால், அடிகளார் ''உன்னைப் போற்றி

சயசய போற்றி என்னும் கைதான் நெகிழவிடேன்'' [திருச்சத-1] என்று கூறுவதலால், அவ்வாறு பொருள் கூறல் இயலா தென்க. [என்னைப் போற்றி என்று கூறாமல், உன்னைப் போற்றி என்று கூறுவதை நோக்குக].

'போற்றுதல்' என்னுஞ் சொல் ஓம்புதல் அல்லது, பாதுகாத்தல் என்று பொருள் படும். ''மனமும் சொல்லும் செயலும் ஒருமுகப்படுமாறு ஓம்பி வணக்கம் செய்கின்றேன்'' என்பதே இங்கே உள்ள 'போற்றி' என்கின்ற சொல்லிற்குப் பொருளாகு மென்க.

''பரவல் வழுத்தல் ஏத்தல் போற்றல்
பழிச்சல் வாழ்த்தல் துதித்தல் ஆகும்''

என்னும் பிங்கல நிகண்டால் போற்றல் என்பது துதித்தல் என்னும் பொருளில் வருதல் காண்க.

11. ''ஈசன் அடி போற்றி'' என்றது

அழியாச் செல்வத்துடன் விளங்குகின்றவனுடைய திருவடியே! உன்னை மனம் சொல் செயல் என்னும் இவைக ளெல்லாம் ஒருமுகப்படுமாறு ஓம்பி வணங்குகின்றேன். [எ-று]

ஈசன் என்னும் வடசொற்கு ஐஸ்வர்யத்தொடு கூடினவன் அல்லது விபூதியொடு கூடினவன் என்று பொருள்.

'ஈசன்' என்பதற்குக் கர்த்தவ்விய முடையவன் என்றும் 'போற்றி' என்பதற்கு இரட்சிப்பதற்காக வணங்கும் துதி என்றும் கூறும் [அநுபூதி உரை]

கூடும் அன்பினிற் கும்பிடலே அன்றி வீடும் வேண்டா விறல் அடியார் 'ஈசன்' எம்மைக் காக்க' என்று வேண்டார் என்க, காமியப் புத்தியுடையோர் அவ்வாறு வேண்டுவ ரென்க.

11. எந்தை அடி போற்றி என்றது

எம் அப்பனின் திருவடியே! உன்னைப் போற்றிட வணங்குகிறேன்'' [எ–று]

அடிகளார் இறைவன் தனக்கு எந்தையாயும், யாய் ஆயும், எம்பிரானாயும், மற்றவர்க்கெல்லாம் தந்தையாயும், தாயாயும், தம்பிரானாயும் விளங்குகின்றான் என்று உரிமை தோன்றக் கூறுகின்றார். இக்கருத்தமைந்த,

"எந்தை யாய்எம் பிரான்மற்றும் யாவர்க்கும்
தந்தை தாய்தம் பிரான்தனக் க..திலான்"

[திருச்ச-47] என்னும் பாட்டு, படித்து இன்புறத் தக்கது. எம்பிரான், தம்பிரான் என்றது ஆசிரியனை. இறைவன், தந்தை, தாய் ஆசிரியன் செய்கின்ற மூன்று பகுப்பான உபகாரங்களை எல்லாம் தான் ஒருவனே செய்கிறான் என்பது மேற்பாடற் கருத்தாகும், எந்தையின் சிறப்பினை,

"நள்ளும் கீழுளும் மேலுளும் யாவுளும்
எள்ளும் எண்ணெயும் போல்நின்ற எந்தையே"
(திருச்ச–46)

என்பர்

12. தேசன் அடி போற்றி என்றது

ஒளியுடையோனுடைய திருவடியே! உன்னைப் போற்றுகின்றேன் [எ–று]

"தேசனே தேனா ரமுதே" (63) என்றதின் உரையில் 'தேசன்' என்ற சொல்லின் விளக்கத்தை அறிக.

12. சிவன் சே அடி போற்றி என்றது

சிவத்தன்மை யுடையோனுடைய சிவந்த திருவடியே! உன்னைப் போற்றுகின்றேன். [எ–று]

சிவம் என்னும் சொற்பொருள்

1 சமையுடையவன் சிவன்: சமையாவது மேலான இன்பமுடைமையும் நிர்விகாரத்தன்மையுமாம்.

2 சிவ: என்பது நல்லோரின் மனத்திற்கு இருப்பிடமானவன்

3 சிவ: நல்லோரின் மனத்தில் சயனித்திருப்பவன்.

4 சிவ: சுபத்துடன் கூடினவன்.

5 சிவ: சுபத்தைக் கொடுப்பவன்.

மேற்கண்ட பொருளை, **நாமலிங்காநு சாசனம் இலிங்க பட்டிய** உரையால் உணர்க.

‘முத்த னாகிநின் றனாதியே மும்மலங்க ளினும்
சுத்த னாதலின், மங்கலம் முழுவதும் தோன்றற்கு
உய்த்த தோரிட மாதலிற் சிவமென உரைப்பர்;
சத்த னாகிய சச்சிதா னந்தசங் கரனை` என்பது
[சித்தாந்த சிகாமணி]

13. நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி என்றது

(பள்ளம் உள்ள இடத்திலேயே நீர் தங்குகின்றாற் போல) அன்புள்ள இடத்திலே நின்றருளும் தூயோன்றன் திருவடியே! உன்னைப் போற்றுகின்றேன் [எ-று] நேயம்-அன்பு

“நேசத்து ளேநின்ற நின்மலன் எம்இறை
தேசத்தை யெல்லாம் தெளியவைத் தானே”
(திருமந்-2063)

“நேயத்தே நின்றிடும் நின்மலன்”
(திருமந்-1812)

14. மாயப்பிறப்பு அறுக்கும் மன்னன் அடி போற்றி என்றது

மயக்கத்தைச் செய்யும் பிறப்பின் வேரினை அறுத்தொழிக்குஞ் செயலில், ‘பகைவரை அறுத்தொழிக்கும் மன்னன் போல் விளங்குபவனுடைய திருவடியே! உன்னைப் போற்றுகின்றேன் [எ-று]

அடிகளார், இறைவன் பிறப்பறுக்குஞ் செயலை

“செறியும் பிறவிக்கு நல்லவர் செல்லன்மின்”
தென்னன்நன்னாட்
டிறைவன் கிளர்கின்ற காலம் இக் காலம்;
எக்காலத்துள்ளும்
அறிவொண் கதிர்வாள் உறைகழித் தானந்த
மாக்கடாவி
எறியும் பிறப்பை; எதிர்ந்தார் புரள இருநிலத்தே;”
(திருபாண்-4)

என்று கூறுதலைக் காண்க, மேலும்

"நின்திருவருளால் என் பிறவியை வேரறுப்பவனே"
[அடைக்கலம்–2]

என்றும்

"திருவார் பெருந்துறை மேயபிரான் என்பிறவிக்
கருவேர் அறுத்தபின் யாவரையுங் கண்டதில்லை"
(திருத்தெள்–2)

என்றும்,

"நாயிற் கடைப்பட்ட தம்மையுமோர் பொருட்படுத்துத்
தாயிற் பெரிதுந் தயாவுடைய தம்பெருமான்
மாயப் பிறப்பறுத் தாண்டான்" (திருப்பூ–3)

என்றும் கூறுதலைக் காண்க.

உயிர்கட்குப் பிறப்பினைத் தருதற்கும் (பந்தம்) அப்பிறப்பினை அறுத்து வீட்டினைத் தருதற்கும், இறைவன் ஒருவனே முதல்வன் என்பதை,

"நாயிற் கடையாம் நாயேனை நயந்து நீயே
ஆட்கொண்டாய்
மாயப் பிறவி உன்வசமே வைத்திட் டிருக்கும் அதுவன்றி
ஆயக் கடவேன் தானோதான் என்ன தோயிங் கதிகாரம்
காயத் திடுவாய் உன்னுடைய கழற்கீழ் வைப்பாய்
கண்ணுதலே"

[குழைத்–8] என்பதனால் அறிக.

இச் சிவபுராணத்தின் ஈற்றில் "அல்லற் பிறவி அறுப்பானே ஓ" என்று இறைவனுக்குச் செவி யறிவுறுத்திய செய்தியையும் உணர்க.

15. சீர்ஆர் பெருந்துறை நம் தேவன் அடி போற்றி என்றது

சிறப்பு நிறைந்த பெருந்துறையிடத்தே எழுந்தருளியுள்ள நமக்கு உரிமையுடைய தேவனின் திருவடியே! போற்றி (எ-று)

திருமூலர் பெருந்துறையை நான் கண்டு கொண்டபின் இறைவனுடைய திருவடிப் பேறு கூடும் என்று கூறுவர்.

"நாடும் பெருந்துறை நான்கண்டு கொண்டபின்
கூடுஞ் சிவனது கொய்மலர்ச் சேவடி"
[திருமந் 2651]

"திருவருட் பூமியாகிய திருப்பெருந்துறை"
என்னும் [அனுபூதி–249]

இறைவனுடைய சீரினை; யாவர்க்கும் மேலாம் அளவிலாச் சீருடையான் [திருவெண்பா–8] என்பர் அடிகளார். 'சீர் ஆர் தேவன்' என்று கூட்டுக.

16. ஆராத இன்பம் அருளும் மலை போற்றி என்றது

இதுவரை நுகரப் பெற்றிராத பேரின்பத்தைக் கொடுத் தருளும் மலை போன்ற திருவடியே! போற்றி. [எ–று]

இது திருவடியை, இறைவனைத் தாங்கிக் கொண்டிருக்கும் மலையாகக் கூறியது. அலை போற்றி என்றுமாம். அலை– இன்பக்கடல், ஆர்தல்–நுகர்தல். அன்றியே "ஆராத ஆசையதாய்" (திருப்பூ 18) என்றாற் போல் "நுகர நுகர அமையாத இன்பம்," என்றும் பொருள் கொள்ளுக.

'நமச்சிவாய வாழ்க' என்பதிலிருந்து 'ஆராத இன்பம் அருளும் மலை போற்றி' என்பது வரை உள்ள பகுதிகளால், திருவடிக் கீழிருந்து வாழ்க, வெல்க, போற்றி என்று கூறித் திருவடி வணக்கம் செய்து கொண்டபின், நுதலிய பொருளையும் அவையடக்கத்தையும் முறையே கூறுகின்றார் எண்க.

நுதலிய பொருள் 17–ஆம் அடியிலிருந்து 20–ஆம் அடிவரையாகும்.

17, 18. சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால் அவன் அருளாலே அவன்தாள் வணங்கி என்றது

சிவனாகிய அத்தகையோன் என் சிந்தையுள் திருமறை யாகவும், திருமறைப் பொருளாகவும், குருமணியாகவும், சிவாகமமாகவும், நின்ற அச்சிறப்பினாலே இயக்கிவிடும்

அவன் திருவருள் உணர்வால், அவனுடைய திருவடியை முன்னே வாழ்க என்றும், வெல்க என்றும், போற்றி என்றும் கூறி முன்னிலைப் படுத்தி வணங்கிக் கொண்டு [எ–று]

19, 20. சிந்தை மகிழச்சிவபுராணந் தன்னை முந்தைவினை முழுதும் மோய உரைப்பன் யான்

என்றது இம்மையிலே மன மகிழ்ச்சி உண்டாகவும், பழைய சஞ்சிதம் என்னும் வினைகள் கெடவும் (மோயவும்) யான் சிவபுராணமாகிய சிறந்த பொருளைக் கூறுவேன் [எ-று]

"மூவா முதலா உலகம்" என்ற **சிந்தாமணிப்** பாடலில் வந்துள்ள 'மூவா' என்ற எதிர்மறைச் சொல் அழியாமையை உணர்த்தும், அதன் உடன்பாட்டுச் சொல்லாகிய 'மூ' என்பது அழிவை உணர்த்தும் அச்சொல் 'மூய' என்றாகி 'மோய' எனத் திரிந்தது. மூய்தல், என்னும் சொல் அழிவுப் பொருளில் இன்றும் கொங்கு நாட்டகத்து வழங்குகின்றது.

சிவனவன் சிந்தையுள் நின்று அதனைத் திருத்திச் செப்பஞ் செய்ததை

"இன்பம் பெருக்கி இருளகற்றி எஞ்ஞான்றும்
துன்பந் தொடர்வறுத்துச் சோதியாய் அன்பமைத்துச்
சீரார் பெருந்துறையான் என்னுடைய சிந்தையே
ஊராகக் கொண்டான் உவந்து"

[திருவெண்பா–11]

என்னும் பாட்டால் அறிக.

சிவபுராணம் என்னுஞ் சொல் சிவனுடைய பழமையான பண்பையும், அருட் செயலையும் குறிக்கும். **வடநூலார் பூர்வத்தி லுண்டாவது புராணம்** என்பர்.

இறைவன் முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம் பொருளாதலால், அவன்

"படைப்போன் படைக்கும் பழையோன்"

என்றும்,

"பரமன் காண்க பழையோன் காண்க"

[திருவண்–13,37]

என்றும், கூறப்படுபவன் ஆகையால், அத்தகைய பழையோனையும், பழையோனுடைய பண்பு, செயல்களையும் குறித்துக் கூறும் இப்பகுதி, 'சிவபுராணம்' என்று பெயர் பெற்றது. மற்றும், "போற்றி போற்றி புராண காரண" (போற்-?24) என்ற அடிகளையும் நோக்குக

சிவபுராணப்பயன்

இச்சிவபுராணத்தை ஓதுதலால் சிந்தை மகிழ்தலும், முந்தை வினைமுழுதும் கெடுதலும், முன்னே (இம்மையில் விளையும் பயனாகும். பின் (மறுமையில்) உண்டாகும் பயனைச் "சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார் செல்வர்சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக் கீழ்" என்று ஈற்றில் அடிகள் கூறியுள்ளார்.

சிவபுராணத்தை முறைப்படி ஓதுதலால் உண்டாகும் இருவகைப் பயன்களைக் குறித்து அடிகளார்கூறுவதில்எனக்குச் சிறிதும் ஐயமில்லை. என் வாழ்க்கையில் மனித முயற்சியால் நீக்க முடியாத துன்ப நிகழ்ச்சி ஏதாவதுஏற்பட்டால், அப் பொழுது தூய இடத்தில் தூய்மையாயிருந்து சிவபுராணத்தைப் பொருளுணர்ச்சியுடன் மனம் உருகி ஓதுவேன். அப்பொழுது அத்துன்பம் எவ்வாறோ நீங்கி விடும்.இது யான் கண்ட உண்மையாகும்.

அடுத்து **அடிகளார்** எடுத்துக் கொண்ட பொருளின் பெருமையைக் கூறி, அதனை உள்ளவாறு சொல்லமுடியாத தன் சிறுமையையுங் கூறி, அம்முகத்தால் **அவையடக்கம்** கூறுகின்றார். அப்பகுதியைக் கீழே காண்க.

அவையடக்கம்

21, 24. எண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட
வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய்
விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே என்றது

எடுத்துக்கொண்ட பொருளின் பெருமையாகும்.

—நெற்றியில் விழியையுடையானே! நின்றன் திருவருட் கண் உணர்த்த சிவநெறிக்கு வந்து, அந்நெறியின் மெய்ப் பொருளை எய்தி, மனத்தினால் கருதுதற்கு எட்டாத அழகு நிறைந்த கழல் அணிந்த திருவடியை வணங்கி, வானுலகம் மண்ணுலகமெல்லாம் நிறைந்து அவற்றில் மிக்காகியும், (எங்கும் வியாபியாகியும்) உள்ளொளி புறவொளி என விளங்கும் இருவகை ஒளியாகியும் [இவ்வாறிருந்தும்] அளவை களால் அறியமுடியாதவனாய் வரம்பு இல்லாதவனா யிருப்பவனே! [எ—று]

'விளங்கொளியாய்' விளியுமாம், கண்ணுதலான்'' என்னும் சொல் விளியாகக் கொள்ளப்பட்டது.

கழல்—வீரக்கழல் என்னும் அணிகலத்தை அணிந்த திருவடி. ஆகுபெயர். அடிகளார் ''மெய்ச் சுடருக்கெல்லாம் ஒளிவந்த பூங்கழல்'' (நீத்தல்–15) என்பர். எண்—அளவை; அது காண்டல் முதலாகப் பலவகைப்படும்.

24, 25 ''நின் பெருஞ்சீர் பொல்லா வினையேன் புகழும் ஆறு ஒன்றறியேன்''

என்றது தன் சிறுமை கூறி, அவையடக்கம் உரைத்தது. பொல்லாங்கைத்தரும் தீவினையுடையேன் ஆகிய நான் உன்னுடைய பெரிய கீர்த்திகளை எடுத்துக் கூறிப் புகழும் நெறியினைச் சிறிதும் அறியேன் (எ—று)

பொல்லா-பொல்லாங்கு, பொல்லாமை, குற்றம்.

இச்சிவபுராண யாப்பு வகையில் **செவியுறைச் செய்யுள் வெண்பா** ஆதலின், அது புகழொடும் பொருளொடும் புணர்ந்து வரும் ஆதலின் (தொல் – செய் – 124) அவற்றுள் முதலதைச் சுட்டிப் **'புகழுமாறு ஒன்றறியேன்'** என்றார்.

26-31 புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரம்ஆகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்
எம்பெருமான் என்றது

பொல்லாவினை காரணமாக அடிகளார் தமக்குப் பண்டு நிகழ்ந்த அவல நிகழ்ச்சியைக் கூறியது.

"எம்பெருமானே! புல்லாகியும், பூண்டாகியும், புழுவாகியும், மரமாகியும், பலவகை விலங்குகளாயும், பறவையாகியும், பாம்பாகியும், கல்லுள் வாழ் உயிராகியும், மனிதராகியும், பேயாகியும், பூதகணங்களாகியும், வலிய அசுரராகியும் முனிவராகியும் தேவராகியும், நிகழா நின்ற நிலைத்திணை இயங்குதிணை என்னும் இருவகைத் திணையுள் எல்லாப் பிறவிகளிலும், பிறந்து பிறந்து நான் இப்பொழுது சலிப்புற்றேன். (எ–று.)

இப்பகுதி, *"பந்தமும் வீடும் படைப்போன் காண்க."* (திருவண்–52) *என்ற இரண்டில் இறைவன் உயிர்கட்குப் பந்தத்தை உண்டாக்கும் செயலை அடிகள் தம்மேல் வைத்துக் கூறியவாறு.*

இப்பிறவிகளைப் "பேரறி யாத அநேக பவங்கள்" (திருப்படை–5) *என்பர். இப்பிறவியை உலகத்தார் உண்டென்பர்: இல்லென்பர். இல்லென்பாரை நோக்கி 'இப்பிறவி உண்டு' என அடியார் பொருட்டுத் திருவுளம் பற்றினதெனக் கொள்க. என்பது அனுபூதியுரை.* (ப. 260)

32. மெய்யே உன் பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன் என்றது

உண்மையாகவே உன்னுடைய பொன் போன்ற திருவடிகளைக் கண்டு இன்றுதான், பொல்லா வினையிலிருந்தும் அது தரும் பல்வகைப் பிறப்பிலிருந்தும் விடுதலை அடைந்தேன், (எ–று.)

'மெய்யே' என்பதை விளியாகவும் கொள்ளலாம் ''எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்'' என்பது பந்தநிலை; ''பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்'' என்பது வீட்டுநிலை. இவ்விரண்டு அடிகளையும் அன்பர் ஒருசேர ஓதிக் காண்க.

அடிகளார்

''யானையாய்க் கீடமாய் மானுடராய்த் தேவராய்
ஏனைப் பிறவாய்ப் பிறந்திறந் தெய்த்தேனை
ஊனையும் நின்றுருக்கி எவ்வினையை ஒட்டுகந்து
தேனையும் பாலையும் கன்னலையும் ஒத்தினிய
கோனவன்போல் வந்தென்னைத் தன்தொழும்பிற்
கொண்டருளும்
வானவன்பூங்கழலே பாடுதுங்காண் அம்மானாய்''
[திருவம்-14]

என்று இருவகை நிலையையும் கூறுதல் காண்க.

சிவபுராணம்

''பொன்னடிகள் கண்டு பொல்லா வினையிலிருந்து விடுபட்ட காரணத்தால் எல்லை இலாதானே! நின் பெருஞ்சீர் அடங்கிய சிவபுராணத்தைக் கூறத் தொடங்கினேன்'' என்பது எச்சம் என்னும் யாப்புறுப்பாகும்.

இனி, அடிகளார் 'உய்யவென் உள்ளத்துள்' (33) என்னும் அடியிலிருந்து அல்லற் பிறவி அறுப்பானே ஓ. (91) என்னும் அடிவரைக் கூறுவன வெல்லாம் **சிவபுராணம்** என்க.

சிவபெருமான் அநாதி காலத்திலிருந்து, உயிர்கட்காகச் செய்துவருஞ் செயல்களை அடிகளார் தன்மேல் வைத்தும், பிறர்மேல் வைத்தும் கூறுவதுடன், அப்பெருமானுடைய ஏனைய இலக்கணங்களையும் இடை இடையே கலந்து கூறுவதால், இப்பகுதி **சிவசூத்திரம்** என்று கூறத்தகும் என்க.

இச் சிவ புராணத்திற்கு அகவல் என்றொரு பெயர் ஆன்றோரால் வழங்கப்படுகின்றது. அது யாப்பால் இட்ட பெயரன்று; இறைவனை முன்னிலைப் படுத்தி அழைத்து அழைத்துக் கூறுவதால் அகவற் பொருளுடைய இப்பாட்டை அகவல் என்றனர் என்க. இவ்வாறு அழைத்துக் கூறும் வழக்கத்தை.

"ஆன்கன்று தேடி அழைக்கும் அதுபோல
நான்கன்றாய் நாடி அழைத்தேன்என் நந்தியை"

(திருமந்-2627) என்று, திருமூலர் கூறுதலைக் காண்க. இவ்வாறு அழைத்துக் கூறப்படுவதால் இது செவியுறையாயிற்று.

33, 34. உய்ய என் உள்ளத்துள் ஓங்காரம் ஆய்நின்ற மெய்யா! என்றது முதற்புராணம்.

இப்பகுதிக்கு உரை கூறுங்கால்

"தையலார் மையலிலே தாழ்ந்துவிழக் கடவேனைப்
பையவே கொடுபோந்து பாசமெனுந் தாழ்உருவி
உய்யுநெறி காட்டுவித்திட் டோங்காரத் துட்பொருளை
அய்யன்எனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே"

(அச்சோ-7) என்னும் பாட்டின் கருத்தை உட்கொண்டு பொருள் கூறுக.

(தையலார் மையலிலே தாழ்ந்து விழுதற்குக் காரணமான காமத்திலிருந்து யான்) பிழைக்கும் வண்ணம் என் மனத்திலே ஓங்காரம் என்னும் மந்திரப் பொருளாய் நின்ற மெய்ப் பொருளே! (எ-று)

மந்திரம் தூலம், சூக்குமம், காரணம் என்று மூன்று வடிவாய் இருக்கும். வெளிப்பட இசைப்பது தூலம்; நினைவின் அளவாயிருப்பது 'சூக்குமம்; நினைவு அடக்கமாயிருப்பது காரணம் என்க. இவற்றுள் சூக்குமம், காரணம் என்னும் இரண்டற்கும் மனம் இடமாதலின், உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற மெய்யா, என்றார் என்க. வெளிப்பட இசைக்குந் தூல மந்திரத்திற்கு நாக்கு இருப்பிடமென்க. "நற்றவா உனை நான் மறப்பினும் சொல்லும் நா" என்பதால் அறிக.

ஓங்காரம்

சிவ புராணத்தைக் கூறத் தொடங்கியவர், சொல்லுலகம் பொருள் உலகம் (சத்தப் பிரபஞ்சம் அத்தப் பிரபஞ்சம்) என்னும் இரண்டில், முற்பட்ட சொல்லுலகில், இறைவன் பிரணவ மந்திர வடிவாயிருப்பது தலைமை நிலையாதலால் அதனையே முதற்புராணமாக எடுத்துக் கூறுகின்றார்.

''ஓம்கார பிரணவவ் ஸமவ்'' என்னும் (1 பிரதமை காண்டம், சுலோகம் 160) அமரகோசப் படி ஓங்காரம் என்பதும், பிரணவம் என்பதும் ஒரு பொருளில் வருகின்ற சொல்லாகும். ஓம்காரம் என்பதற்கு உலகத்தைக் காப்பது என்பது பொருள். தமிழ் மொழியில் ஓம் என்பது 'ஓம்படை' என்ற பொருளில் வரும். படர்க்கையாரை உளப்படுத்தும் 'ஓம்' என்கின்ற தன்மைப் பன்மை விகுதியாகவும் வரும். ஓங்காரத்திற்கு ஏகாச்சரம் என்றொரு பெயர் உண்டு.

ஏகாச்சரத் தோற்றம்

மக்கள் மூச்சுக்காற்றை உள்ளே இழுக்கும் பொழுது 'ஸோ' என்னும் ஓசை உண்டாகும். அதுபோல் மூச்சுக் காற்றை வெளியே விடும் பொழுது 'ஹம்' என்னும் ஓசை உண்டாகும். இதனை, 'ஸோஹம்' என்னும் இயற்கை மந்திரம் என்பர். அவற்றையே ஹம்ஸோ அல்லது ஹம்ஸம் என மாற்றி ஒலித்தால் அதனை ஹம்ஸ மந்திரம் என்பர். மேற்கண்டவற்றால் ஸோஹம், ஹம்ஸோ அல்லது ஹம்ஸம் என்பவற்றின் இயல்பை உணர்ந்து கொள்க.

மேற்கூறியவற்றுள் 'ஸோ' என்பதில் 'ஸ்' என்னும் உபாதியாகிய மெய்யெழுத்தை நீக்கிவிட்டால் 'ஓ' என்னும் உயிரெழுத்து மிஞ்சும். அஃதே போல் 'ஹம்' என்பதில் 'ஹ்' என்னும் உபாதியாகிய மெய்யெழுத்தை நீக்கிவிட்டால் 'அம்' என்பதும் மிஞ்சும். ஆகவே மிஞ்சிய ஓகாரத்தையும் அம் என்பதையும் சேர்த்து ஒலித்தால் 'ஓஅம்' என்னும் பிரணவ மந்திரம் தோன்றும்.

இக்கருத்தை வீரசைவ நூலாகிய சித்தாந்த சிகாமணியில் பஞ்சாக்கர செபத்தலத்தில் உள்ள பதினாறாம் பாட்டு கூறுகின்றது. அப்பாடல் வருமாறு:

"ஸோஹம் என்றுள சொரூபமே
தூயமந் திரந்தான்
ஆக நன்குற அறிகுவர்
ஹம்ஸம் என் பனதாம்;
போக, அதேமில் ஓமெனப்
புகலும் ஓர் எழுத்தாம்
ஏக மந்திரம் உதிக்குமென்று
இயம்புவர் பெரியோர்."

உரைக்குறிப்பு

ஸோஹம் என்பதில் உபாதி போக அந்தமில் 'ஓஅம்' எனப் புகலும் ஓர் எழுத்தாம் ஏகமந்திரம் உதிக்கும் என்பதாம்.

மேற்பாட்டினை அடுத்த பாட்டு, "காட்டும் ஓம் எனும் எழுத்து நிட்கள சிவன் தன்னை" (17) எனக் கூறுவதால், ஓங்காரம் நிட்கள வடிவாகிய சிவம் என்னும் செம்பொருளை உணர்த்துவதாகும் என்று உணர்க.

மாண்டுக்கிய உபநிடதம் கூறும் பிரணவப் பொருள்:

"அமாத்ர: சதுர்த்தோ: அவ்யவ ஹார்ய:
பிரபஞ்சேஉபசம: சிவ: அத்வைத:
ஏவம் ஓங்கார: ஆத்மைவ:"

என்பது மாண்டுக்கிய உபநிடதம் கூறும் பிரணவச் செய்தியாகும். இதன்பொருள் அளவில்லாதது; அறம் பொருள். இன்பம் வீடு என்னும் நான்காக இருப்பது, உலக வழக்கம் இல்லாதது. உலகத்திற்கு எட்டாதது, சிவவடிவானது, இரண்டற்றது என்னும் ஓங்காரம் ஆத்மாவே என்பதாகும்.

பகவத் கீதை கூறும் செய்தி

"ஓம் தத் ஸத் இதி நிர்தேசோ
ப்ரஹ்மணஸ் த்ரிவித:
ஸ்மருத:
(அத்தியாயம் 17, சுலோகம் 23)

என்னும் சுலோகம் பிரம்மத்தினுடைய பெயர்கள் **ஓம் தத் ஸத்** என்னும் மூன்று விதமாகக் கூறப்படும் என்று கூறுகின்றது. மேற்கண்ட சுலோகத்தால் ஓம் என்பது பிரமத்தைக் குறிக்கும் மூன்று பெயர்களுள் முதற்பெயர் என்பதைத் தெரிந்து கொள்கின்றோம். இம் முதற் பெயரை முதலில் உச்சரித்தே வேதம் முதலானவற்றை ஓதுதல் அறிஞரின் வழக்கமாக உள்ளது. அவ்வழக்கப்படியே மாணிக்க வாசகரும் இச் சிவபுராணத்தை **"உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற"** என்று தொடங்குகின்றார். இனி, மாணிக்கவாசகர் அச்சோப்பதிகம் ஏழாம் பாட்டில்,

"தையலார் மையலிலே தாழ்ந்து விழக் கடவேனைப்
பையவே கொடு போந்து பாசமெனுந் தாழுருவி
உய்யு நெறி காட்டுவித்திட் டோங்காரத் துட்பொருளை
ஐய னெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே"

என்று கூறுகின்றார். அப்பாட்டில், அவர்; இறைவன் தனக்கு உய்யு நெறியைக் காட்டுவித்து ஓங்காரத்தின் உட்பொருளை உணர்த்தினான் என்பதைத் தெளிவாகக் கூறுகின்றார்.

மற்றும், திருமூலர்,

"உரையற்ற ஆனந்த மோன சொரூபத்தன்
கரையற்ற சத்தியாதி காணில் அகார
மருவுற் றுகார மகாரம தாக
உரையற்ற தாரத்தில் உள்ளொளி யாமே" (2844)

என்னும் இப்பாட்டில் கூறும் செய்தியை ஆராய்வோம்.

தாரம் என்பது பிரணவத்தை; அதன் உள்ளொளியாக விளங்குபவை அகார, உகார, மகாரப் பொருள்களாகும். அப் பொருள் உரையற்ற ஆனந்த மோன சொரூபத்தில் இருந்து

அறியத்தக்க தென்றும், சத்தியம், ஞானம், அனந்தம், ஆனந்தம் என்னும் நான்கு வடிவாக இருப்ப தென்றும் கூறுகின்றார்.

எனவே, அறிஞர் ஓங்கார மந்திரத்தை எடுத்துக் கொண்டு அதனுடைய உள் எழுத்தாகிய அகார, உகார, மகாரத்தை உணர்ந்து அகாரத்தின் பொருள் துவம்பதப் பொருளாகிய சீவன் என்றும், உகாரம் தத்பதப் பொருளாகிய பரன் என்றும், மகாரம் அசிபதப் பொருளாகிய சிவம் என்றும் உணர்ந்து இவை ஒவ்வொன்றற்கும் நிகழும் நனவு கனவு ஒடுக்கமாகிய சுழுத்தி என்னும் ஒன்பது அவத்தைகளையும் நீக்கி, துவம் பதத்தில் மாயப் பாழைக் கடந்து சிவதுரியத்தையும், தத்பதத்தில் வியோமப் பாழைக் கடந்து பரதுரியத்தையும், அசிபதத்தில் உபசாந்தப் பாழைக் கடந்து சிவதுரியத்தையும் உணர்ந்து, இம் மூன்று துரியத்தையும் ஒன்றாக்கி ஒரே சிவமாக உணர்ந்து தியானிப்பதே ஓங்காரத்தின் உட்பொருள் தியானமென்க. இதனையே, திருமூலர் மற்றோரிடத்தில்

"துரியங்கள் மூன்றுங் கடந்தொளிர் சோதி
அரிய பரசிவம் யாவையு மாகி
விரிவு குவிவற விட்ட நிலத்தே
பெரிய குருபதம் பேசவொண் ணாதே" (2657)

என்னும் இப்பாட்டில் ஓங்காரத்தின் உட்பொருளைத் துரியங்கள் மூன்றுங் கடந்தொளிர் சோதி என்றும், அரிய பரசிவம் என்றும், பெரிய குருபதம் என்றும் கூறி ஓங்காரத்தின் உட்பொருளைப் 'பேசவொண்ணாத' நிலையாகிய மௌன சமாதியில் இருந்து கருதத் தக்க தென்றும் கூறியுள்ளமை அறிக.

ஓங்காரத்திற்கு மேற் கூறியவாறு பொருள்களை அறிந்து கொண்டு அதைத் தியானம் செய்து வருதலே மந்திர யோகமாகும்.

"ஓங்காரா திகளனுசந் தானத்தாற் பரத்தி
லுள்ள மடங் குதலேமந் திரயோகம்"

என்பர். (வேதாந்த சூடாமணி, செய்யுள் 135)

குறிப்பு: வடமொழியாளர் 'ஓம்' என்பதையும் 'அத' என்பதையும் முதலில் கூறும் மங்கல மொழி என்பர். மாணிக்க வாசகரும் சிவபுராணத்தை ஓம் என்னும் மங்கலச் சொல்லை முன்வைத்தே தொடங்குகிறார்.

ஓங்காரத்தைப் பற்றிய வேறு விளக்கங்கள்

பிரணவமந்திரப் பயன்

"தீம ரந்தொறும் அடைந்தழி வுறாது தெரிவா
காமை நின்றரணி யால்வடிவு காணும் அதுபோல்,
ஆமு டம்பினழி வின்றிமறை கின்ற அமலன்
ஓம்எ னும்பொருள் உணர்ந்திட உடம்பில் வெளியாம்'
[பெருந்திரட்டு]

"காமம் வெகுளி மயக்கம் இவைகடிந்(து)
ஏமம் பிடித்திருந் தேனுக்(கு) எறிமணி
ஓம்எனும் ஓசையின் உள்ளே உறைவதோர்
தாமம் அதனைத் தலைப்பட்ட வாறே"
(திருமந்–2436)

பிரணவமந்திரக்கணிப்பு இல்லாதவர்:

"ஓங்காரத் துள்ளொளி உள்ளே உதயமுற்(று)
ஆங்காரம் அற்ற அனுபவம் கைகூடார்
சாங்காலம் உன்னார் பிறவாமை சார்வுறார்
நீங்காச் சமயத்துள் நின்றொழிந் தார்களே"
[திருமந்–1556]

விளிக்கு முடிக்குஞ் சொல்:

'மெய்யா' 'விமலா' என்றவிளிக்குஞ் சொற்களுக்கெல்லாம் தனித்தனி முடிக்குஞ்சொல்லைத் தொடர்தொறும் கூறா விடினும், ஈற்றில், அல்லற்பிறவி அறுப்பானே ஓ, யென்றதில் 'ஓ' என்னும் முறையீட்டுச்சொல்லையே முடிபாக அடிகளார் அமைத்திருப்பதால் அச்சொல்லையே எல்லாவிளிகட்கும் முடிபாகக் கொள்க.

34. 'விமலா' என்பது இரண்டாவது புராணம்

ஆணவம் கன்மம் மாயை என்னும்மலங்களிலிருந்து வேறுபட்டவனே' (எ.று)

அடிகள்

''வேதிபோற்றி விமலா போற்றி (போற்-106)

என்றும், ''கமலநான்முகனும்'' கார்முகில் நிறத்துக் கண்ணனும். நண்ணுதற்கரிய விமலனே! (அருட்-4) என்றும் கூறுவர். இவ்விரண்டுள் ''வேதி'' என்பது உயிர்களை மலங்களிலிருந்து வேறுபடுத்துபவன் என்றும் ''விமலா'' என்பது மலங்களிலிருந்து வேறுபட்டவன் என்றும் பொருள்படும்.

34. ''விடைப்பாகா''
என்பது மூன்றாவது புராணம்

அறவிடை, மால்விடை என்னும் இருவகை விடைகளையும் ஊர்ந்து அன்பருக்கு அருள் செய்பவனே! (எ-று)

இறைவன் அன்பர்க்கு அருள்புரியுங்கால் அறவிடை ஊர்வன். துன்ப நீக்கத்தில் மால்விடை ஊர்வன்.

சேக்கிழார்:

''விடைமருவும் பெருமானும் விறல்வேந்தர்க்கு
அருள்புரிந்தார்''

என்பர் (பெரிய-மனுநீதி-46)

அடிகளார்

''கடகரியும் பரிமாவும் தேரும்உகந் தேறாதே
இடபம்உகந் தேறியவா றெனக்கறிய இயம்பேடீ!
தடமதில்கள் அவைமூன்றும் தழலெரித்த அந்நாளில்
இடபமதாய்த் தாங்கினான் திருமால்காண்
சாழலோ'' (திருச்சா-15)

என்றும்

''மால்விடை ஊர்தி போற்றி'' (திருச்சா-65)

என்றும்,

''விடைவிடா துகந்த விண்ணவர் கோவே''' (பிடித்த-2)

என்றும் கூறுதல் காண்க.

சிவாட்டோத்தரசதம், "ஓம் விருடபாருடாய நம; என்று கூறும். இச்சிவபுராணத்துள் விடைப்பாகா" என்பது மட்டும் புராணக்கதை. மற்றவையெல்லாம் சிவமாகிய நிட்களப் பொருளின் பண்பும்செயலுமாகும்

34-35. வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே

என்பது நான்காம் புராணம்.

அறிவு நூல்கள் உன்னைப் பெரியோனே! என்று கூறவும் நீ அக்கூற்றிற்கு மாறுபட்டு மேலிட மெல்லாம் ஓங்கியும், கீழிடமெல்லாம் ஆழ்ந்தும் சுற்றிடமெல்லாம் விசாலித்தும் விளங்கும் வியாபக நுண்பொருளாக உள்ளவனே! (எ-று)

அடிகளார்

போற்றித் திருவகவலில், இறைவன் பெரியவன் என்ற பொருளில் ஐயா போற்றி என்றும், (ஐயன், ஐயை என்பன பெரியன் பெரியவள் என்று பொருள்தரும்) அவன் மிகச்சிறிய வனாகவும் உள்ளான் என்ற பொருளில் "அணுவே போற்றி" என்றும் கூறுவர். இந்த இரண்டு சொல்லையும், முரண் என்னும் தொடையழகு அமைய "ஐயா போற்றி அணுவே போற்றி" (போற்-112) என்று கூறியுள்ள கருத்து அறியத்தக்கது.

ஈண்டு அப்பொருளையே கருதி வேதங்கள் ஐயா! (பெரியோனே) என்று கூறவும், நீ ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணிய னாகவும் உள்ளாய் என்று இறைவனுடைய நுண்மைத் தன்மை யைச் சிறப்பித்துக் கூறினார் என்க. 'எனவும்' என்று உம்மை விரிக்க.

மற்றொரு பாடம்

"வேதங்கள் ஐயாய் என" என்பதாகும். இப்பாடத்திற்கு "வேதங்கள் புலனாகாத நுண்மை வடிவினனே! என்று கூறுமாறு ஓங்கியும், ஆழ்ந்தும், விசாலித்தும் விளங்கும் நுண்ணியனே" என்று பொருள் கொள்க.

ஐம்மை–நுண்மை "அணுத்தருந் தன்மையில் ஐயோன் காண்க" [திருவண்-43] என வருதலைக் காண்க.

திருமூலர், 'தன்வலி யால்உல கேழுந் தரித்தவன்" என்று இறைவனுடைய பெருமையினையும் "தன்வலி யாலே அணுவினுந் தான்நொய்யன்" என்று சிறுமையினையும் (திருமந் 3023) கூறுதல் காண்க.

'என'என்பதற்கு முன் உரைக்கு என்று கூறவும் என்றும், மற்றொருபாட உரைக்கு, 'என்று கூறுமாறு' என்றும் பொருள் கொள்க.

இறைவன் ஏகதேச நுண்மையன்' அல்லன், ஒழிவற நிறைந்த நுண்மையன் என்பார், 'ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியன்' என்று நுண்மையைச் சிறப்பித்தார். வேதங்கள் ஐயா எனக் கூறுதலை "வேதம் நான்கும் ஓலமிட்டு உணங்கும் நின்னை எய்தலுற்று மற்றொருண்மை இன்மையின்" (திருச்ச-75) என்று கூறுதலைக் காண்க. "நுண்ணியன் என்பது இறைவன் இயல்பைக் கருதியது "நுணுக்கரிய நுண்ணுணர்வே, என்பது, அவன் அறிவை நோக்கியது.

ஒப்பு; "ஆழியனாய் அகன்றே உயர்ந்தானை"

(தேவா 7–67–3)

"நள்ளும் கீழுளும் மேலுளும் யாவுளும்
"எள்ளும் எண்ணெயும் போல்நின்ற எந்தையே"

(திருச்ச–46)

"மஹதோ மஹியான் என்பதையும்
அணோரணீயாம்"

(பகவத்கீதை 8–9) என்பதையும் ஒப்பு நோக்குக

36. **வெய்யாய்** என்பது ஐந்தாம் புராணம்.

அருக்கனையும் தீயினையும் உடம்பாகப் பெற்று ஒளியையும் வெப்பத்தையும் உலகிற்குத் தருபவனே (எ-று)

இதனை அடிகளார் "நாடொறும் அருக்கனிற் சோதி அமைத்தோன்" என்றும், 'தீயின் வெம்மை செய்தோன்',

(திருவண், 19,20,22) என்றும் கூறுவர். ஆதித்யவர்ணம் (பகவத் கீதை 8-9) என்பதையும் ஒப்பு நோக்குக.

36. தணியாய் என்பது ஆறாம் புராணம்

திங்களை உடம்பாகப்பெற்றுத் தண்மையைச் (குளிர்ந்த-நிலவைச்) செய்பவனே! (எ-று).

'தண்ணியாய்' என்னுஞ்சொல் 'தணியாய்' எனத் தொகுத்தது! 'மதியிற் றண்மை வைத்தோன்' (திருவண்-21) என்றதைக்காண்க.

37. இயமானன் ஆம் விமலா என்பது ஏழாம் புராணம்.

உடம்பிற்குத் தலைவனாயிருக்கும் உயிரை வடிவாகப் பெற்றிருந்தும், உயிர்போல் மலத்தொடு கூடியிராமல் தூய்மை யாயிருப்பவனே! (எ-று)

யஜமானன் என்னுஞ்சொல் இயமானன் எனத்திரிந்தது. வேள்வித் தலைவனுக்கு யஜமானன் என வழங்கிய பெயர் உடம்பிற்குத் தலைவனாகிய உயிர்க்கும் வழங்கலாயிற்று. 'அடிகள்' புவனம் நீர்த்தீக் காற்றியமானன் வானம் இருசுடர்க் கடவுளானே' (திருச்ச-63) என்று பின்னர்க் கூறுவதைக் கருதி, வெய்யாய் தணியாய் இயமானன் ஆம்விமலா'' என்பதற்கு உரை கூறப்பட்டுள்ளது. எனவே அடிகள் இங்கே கூறாதுவிட்ட நிலம் நீர் காற்று வானம் என்னும் இவற்றையும் கருத்துட்கொண்டு ஐம்பெரும் பூதங்களையும் வடிவாகப் பெற்றவனே' என்றும் கூறிக்கொள்க

இங்கே "எட்டுக்கொண் டார்தம்மைத் தொட்டுக்கொண் டேநின்றார். விட்டார் உலகமென் றுந்தீபற" என்னும் திருவுந்தியார் பாடலையும் "அட்டமூர்த்தியே நம," என்ற சிவார்ச்சனையையும் ஒப்பிட்டுக் கருதுக.

37. பொய்யாயினஎல்லாம் போய்அகல வந்தருளி

38. மெய்ஞ்ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே என்பது எட்டாம் புராணம்.

பொய்ப்பொருள் உணர்வாயின வெல்லாம் உள்ளத்தை விட்டுப் போய் அகலுமாறு என்னிடம் தானே ஞானாசிரியனாய் எழுந்தருளி அருள் செய்து சிவஞானமாகிய உண்மை ஞானமேவடிவாகி விளங்குகின்ற உண்மைச் சுடரே' (எ-று)

வந்தருளி' என்றதால் ஞானாசிரியன் கொள்ளப்பட்டது.

'அடிகளார், "பொய்தீர் மெய்யானே" (திருச்ச – 89) என்றும் "பொய்யவ னேனைப் பொருளென ஆண்டொன்று பொத்திக் கொண்ட மெய்யவனே" (நீத் 7) என்றும், "ஆவியோ டாக்கைப் புரைபுரை கனியப் 'புகுந்து நின் றுருக்கிப் பொய்யிருள் கடிந்த மெய்ச் சுடரே" (கோயிற் – 3) என்றும், 'செப்புதற் கரிய செழுஞ் சுடர் மூர்த்தி' (பிடித்த 5) என்றும் கூறுவனவற்றை எல்லாம் ஒப்பு நோக்குக.

ஆசிரியனால் கூறப்படும் வேதாந்த வாக்கியத்தால் உதிக்கும் ஞானத்தையும் "இலிங்கவடிவம்" என்று கொள்பவர் கருத்திற் கிணங்கி இவ்வாறு கூறினார் என்க.

39. "எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே" என்பது ஒன்பதாம் புராணம்.

உலகியலுக்குரிய பாசஞானம், வீடுபேற்றிற்குரிய மெய்ஞ்ஞானம் என்னும் இரண்டில் எந்த ஞானமும் இல்லாதேனுக்கு உலக இன்பத்தையும் வீட்டின்பத்தையும் தருதற்குரிய பெரியோனாக இருப்பவனே (எ-று). 'எஞ்ஞானமும்' என உம்மை விரிக்க.

எஞ்ஞானம் என்பதற்கு அபரஞானம், பரஞானம் என்னும் இரண்டில் எந்த ஞானமும் இல்லாதவனுக்கு என்றும் பொருள் கொள்ளலாம்.

அடிகளார் "அறிவி லாத எனைப்புகுந் தாண்டுகொண் டறிவதை அருளிமேல், நெறியெ லாம்புல மாக்கிய எந்தை" (திருச்ச – 32) என்பர்.

40. அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல் அறிவே என்பது பத்தாம் புராணம்.

(எஞ்ஞானமும் என்னிடம் இல்லாவிட்டாலும் மறைந்திட மூடிய மாயஇருளாகிய அஞ்ஞானம் மட்டும் உண்டு; அந்த) அறிவின்மை தன்னை நீக்குவிக்கும் நல்ல அறிவாகி இருப்பவனே! (எ-று).

இறைவன் உயிர்க்குள் உயிராயிருந்து ஒவ்வொரு உயிரையும் உணர்த்தலின் அதனால் உயிரின் அறியாமை நீங்குதலின் இவ்வாறு கூறினார்.

நல்அறிவு-உணர்த்தும் அறிவு.

அடிகளார் 'அறிவே போற்றி' (போற்றி–197) என்பர். மற்றும்:

"அறிவ னேஅமு தேஅடி நாயினேன்
அறிவ னாகக்கொண் டோஎனை ஆண்டது?
அறிவி லாமையன் றேகண்ட தாண்டநாள்
அறிவ னோ? அல்ல னோ? அருள் ஈசனே"

(திருச்ச – 50)

என்று கூறுவதைக்கருதுக.

41. 'ஆக்கம் அளவு இறுதி இல்லாய் என்பது பதினொன்றாம் புராணம்

பிறரால் படைக்கப்படுதலும் அளவியிருக்கச் செய்தலும் அழிக்கப்படுதலும் என்னும் இச் செயல்கள் இல்லாதவனே (எ-று)

இறைவன் ஆக்கல் காத்தல் அழித்தல் என்னும் வினைகட்கு நிமித்த காரணனாக இருத்தலன்றிப் பிறர் செய்யும் செயலுக்குச் செயப்படுபொருளாகான் என்பது கருத்து.

அளவு-அளவியிருக்கச் செய்தல்; அது காத்தலாகும். அல்லது நிற்கின்ற கால எல்லையுமாம்.

அடிகள் ''ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெருஞ் சோதி'' (திருவம் - 1) என்றும், ''ஆதி குணம் ஒன்றும் இல்லான் அந்தம் இலான் வரக்கூவாய்'' என்றும்கூறுவனவற்றைக் காண்க.

'ஆக்கம் பெறாமலிருந்து ஆக்குவாய், என்பதற்குப் ''போற்றி யெல்லாவுயிர்க்கும் தோற்ற மாகிநீ தோற்ற மில்லாய்'' என்றும்'

''இறுதி எய்தாமலிருந்து இறுதி செய்வாய் என்பதற்குப்', போற்றியெல்லா வுயிர்க்கும் ஈறாய் ஈறின்மை யானாய்', (திருச்ச – 70) என்றும் வருவனவற்றை ஒப்பு நோக்கி அறிக.

41 – 42. அனைத்து உலகும் ஆக்குவாய் என்பது

பன்னிரண்டாம் புராணம்.

(பிறரால் படைக்கப்படாமலிருந்து கொண்டே எல்லா உலகத்தையும் படைப்பவனே! (எ-று)

42. (அனைத்து உலகும்) காப்பாய்! என்பது

பதின் மூன்றாம் புராணம்.

(பிறரால் காக்கப்படாமலிருந்து கொண்டே எல்லா உலகத்தையும் காப்பவனே! (எ-று)

42. (அனைத்து உலகும்) அழிப்பாய்

என்பது பதினான்காம் புராணம்.

(பிறரால் அழிக்கப்படாதவனா யிருந்து கொண்டே) எல்லா உலகத்தையும் அழிப்பவனே! (எ–று)

(அனைத்து உலகும்) அருள் தருவாய்

என்பது பதினைந்தாம் புராணம்.

அனைத்து உலகத்தையும் ஆக்கிக் காத்து அழிப்பதன்றி பக்குவமுள்ள எல்லா உயிர்கட்கும் பாச நீக்கஞ் செய்து அருள் புரிபவனே! (எ.று.)

43. அனைத்து உலகும் போக்குவாய்

என்பது பதினாறாம் புராணம்.

(பக்குவமுள்ள உயிர்கள் அனைத்திற்கும் அருள் புரிவ தன்றிப்) பக்குவமில்லாத உயிர்கள் அனைத்தினையும் பிறப்பு நெறியிற் போகச் செய்பவனே. (எ–று)

'அனைத்துலகும்' என்ற சொல் நான்கிடத்தும் கூட்டப் பட்டது. 'உலகம் என்ற சொல் ஆக்குவாய் முதலான மூன்றிடத்தில் தநுகரண புவன போகங்களையும், அருள் தருவாய் போக்குவாய் என்ற இரண்டிடத்தில் உயிர்வகை களையும் குறித்தது.

ஆக்கமும் அளவும் இறுதியுமாகிய இவற்றைத் தான் பெறாமல் அனைத்துலகத்தினுக்கும் ஆக்குதல், காத்தல், அளித்தல், அருளுதல், போக்குதல் என்னும் ஐந்து தொழிலைச்செய்வது இறைவனொருவனுக்கே உள்ள இயல்பென்க.

அடிகளார்

''முழுவதும் படைப்போற் படைக்கும் பழையோன்'' என்றும், ''காப்போற் காக்குங் கடவுள்'' என்றும், ''காப்பவை கரப்போன்'' என்றும் கூறுவனவற்றை ஒப்பு நோக்கி அறிக. (திருவண்டப் 12–15)

43. என்னை நின் தொழும்பில் புகுவிப்பாய்

என்பது பதினேழாம் புராணம்.

''அடியேனை மட்டும் உன்னுடைய சிறந்த தொண்டு நெறியில் புகுமாறு செய்விப்பவனே! (எ–று)

தொழும்பு-தொண்டு அல்லது பணி.

அடிகளார்

''கோனவன்போல் வந்தென்னைத் தன்தொழும்பிற் கொண்டருளும் வானவன்'' (திருவம்-14) என்றும் ''நின் விழுத் தொழும்பின் உள்ளேன்'' (நீத்-2) என்றும் கூறுதலைக் காண்க.

"விழுத்தொழும்பின் உள்ளேன்" என்பதற்கு உன்னுடைய சிறந்த தொண்டினால் உள்ளேன் என்று பொருள் கொள்க.

44. நாற்றத்தின் நேரியாய் என்பது பதினெட்டாம் புராணம்.

"மலரின் மணம்போல உலகமெல்லாம் நிறைந் திருப்பவனே" [எ-று]

'நேர்தல்' என்னும் பலபொருள் ஒரு சொற்கு ஈண்டு நிறைந்து என்று பொருள் கொள்க.

அடிகளார் "பூவின் நாற்றம் போன்றுயர்ந் தெங்கும் ஒழிவற நிறைந்து மேவிய பெருமை" (திருவண்-115, 116) என்றும் "உற்ற யாக்கையில் உறுபொருள் நறுமலர் எழுதரு நாற்றம் போல் பற்ற லாவதோர் நிலையிலாப் பரம்பொருள்" [அதிசய-9] என்றும் கூறுதல் காண்க.

இறையனார் களவிய லுரை "அது [வீடுபேற்றின்பந்]தான் மணியினது. ஒளியும், மலரினது நாற்றமும், சந்தனத்துத் தட்பமும் போல் உண்ணின்று எழுதரும் ஒரு பேரின்ப வெள்ளத்தது" என்று கூறுவதால், இறைவன் மலரின் மணம் போலத் தொண்டரின் உண்ணின்று இன்பம் விளைவிப்பவனாய் உள்ளான் என்றும் உரை கொள்க.

கலியாண்டு 4998-இல் (கி.பி. 1897) பிருங்கிமா நகரம் இராமசாமி முதலியார் பதிப்பித்த திருவாசகம் மூலமும் உரையும் உள்ளபதிப்பில் "ஆற்றத்தில் நேரியாய்" என்று பாடம் தரப்பட்டு, இதற்கு "உன்னை அடையும் வழியில் செவ்வியனே" என்று உரையும் எழுதப்பட்டுள்ளது.

44. சேயாய் என்பது பத்தொன்பதாம் புராணம்.

(உலகப் பொருளையே கருதிப் புறத்தே திரிபவர்க்குச்) சேய்மையில் இருப்பவனே! (எ-று)

சேய்மை - தூரம்,

அடிகளார் "புறத்தார்க்குச் சேயோன்" [சிவபு-8] என்றும், "ஓயாதே உள்குவார் உள்ளிருக்கும் உள்ளானை; அவ்வாறு உள்காதவர்க்குச் சேயானை" [திருவம்-7] என்றும், "சேயனாகி நின்றலறுவ தழகோ" [செத்தி-7] என்றும் கூறுவதை ஒப்பிட்டறிக.

44. நணியானே என்பது இருபதாம் புராணம்.

அன்பர்கட்கு அணிமையில் இருப்பவனே! (எ-று)

அடிகளார்

"மெய்யடியவர்கட்கு அண்மையனே என்றும், சேயாய் பிறர்க்கு" [நீத்தல்-22] என்றும், "அன்பர்க்கு மெய்யானை அல்லாதார்க்கு அல்லாத வேதியனை" [திருவம்-13] என்றும் கூறுதல் காண்க. வேதியன் வேறுபட்டவன்.

சேயாய் நணியானே என்னும் இரண்டையும் கருதி தூரத்தில் உள்ளதும், சமீபத்தில் உள்ளதும் என்று கூறும் செய்தியைப் பகவத்கீதையில் (அத்தியாயம் 13, சுலோகம் 15) காண்க.

திருமூலர் "சேயன் அணியன் தித்திக்கும் தீங்கரும்பு" [2365] என்றும்"செலவழி வாரில்லை சேயன் அணியன்" [3043] என்றும் கூறுவர்.

தூரத்திலுள்ளதும், சமீபத்திலுள்ளதும் ஆம்

(பகவத்கீதை 13-15)

45. மாற்றம் மனம்கழிய நின்ற மறையோனே! என்பது இருபத்தொன்றாம் புராணம்

"மறுமொழி அறிவும், மன உணர்வும் உணரமுடியாமல், நீங்க நின்றிருக்கும் மறைந்த பொருளே! [எ-று]

மாற்றம்-உண்மைப் பொருள் உணரவேண்டி வினாவும் வினாவிற்குக் கூறப்படும் விடை. மறையோன் - சொல் உணர் வினுக்கும், மன உணர்வினுக்கும் எட்டாமல் மறைந்திருப்பவன் என்று பொருள்.

"மறை ஈறு அறியா மறையோனே" (திருச்ச–85) என்றும் "வாக்கும் மனமும் மறைந்த மறைப்பொருள்" (திருமந் – 2854) என்றும் வருவனவற்றைக் காண்க.

அடிகளார் "சொற்பதங் கடந்த தொல்லோன் உள்ளத் துணர்ச்சியிற் கொள்ளவும் படான் கண்முதற் புலனால் காட்சியு மில்லோன்" (திருவண் 111–113) என்றும்

"உரை உணர்வு இறந்த ஒருவ போற்றி"

(போற்றி – 124) என்றும் கூறுவனவற்றைக் காண்க. **அத்துவித வெண்பா உரை** "புகலரிதாய் – சொல்லெல்லாம் வாக்கினில் உற்பத்தி; வாக்குச் சுத்தமாயையில் உற்பத்தி; அச்சுத்தமாயை நாதபரியந்தம் வியாபகம், அதற்கப்பாற் றனது காரியஞ் செல்லாதாகையால் புகல் [சொல்லுதல்] அரிதாய் என்றார். உதாரணம். **சிவஞான சித்தியார்** வாசக வாச்சிய ஞானம் வயிந்துவத்தின் கலக்கம்" என்றும், **திருவாசகம்** "சொல்லும் பொருளும் இறந்த சுடரை" என்றும் "மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே" என்றும் வருவனவற்றால் உணர்க என்று உரைக்கும் உரையை ஒப்பு நோக்குக. [பக். 88]

"விறகிற் றீயினன் பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்"

என்பார் திருநாவுக்கரசர். இப்பகுதியை ஒப்பு நோக்குக.

46-48 கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போல
சிறந்து அடியார் சிந்தனையுள்தேன்
ஊறி நின்று
பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்!

என்பது இருபத்திரண்டாம் புராணம்.

மறையோனாயினும், அப்பொழுது கறந்த பாலொடு தேனைக்கலந்தாற் போலவும், அப்பொழுது பிழிந்தெடுத்த கருப்பஞ்சாற்றொடு தேனைக் கலந்தாற் போலவும், இருவகை

அடியார் உள்ளங்களிலும் [கலந்து] சிறந்து, இனிமையை ஊறச்செய்து நிலைபெற்று நின்று, அந்த அடியவர் பிறந்த பிறப்பினை அறுத்துவிடும் எங்கள் பெருமானே [எ—று] சிறந்து—வினையெச்சம்.

'பால் என்னாமல்' கறந்த பால்' என்று கூறிய அடை மொழியின் கருத்தால், அப்பொழுது பிழிந்தெடுத்த கருப்பஞ்சாறு என்று கூறப்பட்டது.

ஞான சம்பந்தருக்குப் பால் கொடுத்து ஆட்கொண்டார். அப்பருக்குச் சூலைநோய் கொடுத்து ஆட்கொண்டார். இவ்வகையான இருவகை அடியார் உள்ளங்களிலும் இறைவன் கலந்து இனிப்பினைத் தந்து நிற்கின்ற நிலைக்கு வருடிக் கறந்த பாலொடு தேன் கலந்த கலப்பும், வருத்திப் பிழிந்த கன்னலொடு தேன் கலந்த கலப்பும் உவமையாயின. பாலும் கன்னலும் இருவகை அடியவரின் உள்ளத்திற்கும், தேன் இறைவனுக்கும் உவமைப் பொருளாகக் கொள்க.

இருவகை அடியவரும் இறைவனைத் தம் உள்ளத்தே கூட்டிக் கணிப்பது [தியானிப்பது] தேன் ஊறி நிற்பதற்கு ஏதுவாயிற்று.

அடியாரின் உள்ளமும் இறைவனும் கூடி நின்றதற்குப் பயன் அடியவரின் பிறப்பறுத லாயிற்று.

இதனை அடிகளார் "வினையேன் மனத்துத் தேனையும் பாலையும் கன்னலையும், அமுதத்தையும் ஒத்து, ஊனையும் என்பினையும் உருக்காநின்ற ஒண்மையனே! [நீத் 21] என்பர். இங்கே தன் மனத்தில் இறைவன் கலந்த நிலையைக் கூறுகின்றா ராதலால் 'வினையேன் மனம்' என இகழ்ந்துரைத்தார்.

திருமூலர் உபதேசம் என்ற தலைப்பில் "குற்றமற்ற பாலினுள் தேனைக் கலந்தாற்போலச், சலனம் அற்ற சிந்தையுள் ஆரியனாகிய ஆசிரியன் தன் உபதேச மொழியைச் செப்புவன்" என்னும் கருத்தால்

"புரையற்ற பாலினுள் நெய்கலந் தாற்போல்
திரையற்ற சிந்தையுள் ஆரியன் செப்பும்" (134)

என்பர்

"சிறந்தடியார் சிந்தனையுள்"

என்ற சொற்றொடரைச் சிறந்த அடியார் சிந்தைனையுள் என்று பிரிப்பார். (பழைய உரை)

மற்றோர் உரை

கறந்த பாலும் கன்னலமுமாகிய இரண்டுடன் நெய் என்னும் தேனையும் கலந்தாற்போல என்பது உவமைப் பொருளாகும். இதற்கு உவமேயப் பொருளாகக் கறந்த பாலும் கன்னலும் நெய்யும் போன்ற மூன்று பொருள்களைக் கருதி ஆராய்ந்து உணர வேண்டும். இவ்வாராய்ச்சிக்குத் திருமந்திரப் பாட்டொன்று துணைபுரிகின்றது. அப்பாடலாவது.

"அணுவும் பரமும் அசிபதத் தேய்ந்து
கணுவொன் றிலாத சிவமுங் கலந்தால்
இணையறு பால்தேன் அமுதென இன்பத்து
உணையது வாய்உரை அற்றிடத்து ஒன்றுமே"
(திருமந்திரம் 2440)

என்பதாகும்.

இப்பாட்டில் பால், தேன், அமுது மூன்று பொருள்களின் கலப்பு உவமையாகக் குறிக்கப்பட்டுள்ளது. இம்முப்பொருளைத் திருமூலர் எதற்கு உவமையாகக் கூறுகின்றார் என ஆராய்வோம்.

மூன்று துரியப் பொருள்களும் ஒன்றாகக் கலந்த நிலையை அறிவுறுத்தி, அதனைத் தியானித்திருக்கும் முறையைக் கூறுவதற்காக மூன்று உவமைப் பொருள்களைக் கையாள்கிறார்.

இதன் பொருள்

அணு என்னும் சீவதுரியமும் பரம் என்னும் பரதுரியமும் அசிபதத்தினாலே முன்னே ஒன்றாகி அவ்வொன்றான இரண்டு பொருள்களுடன் கணு ஒன்றிலாத சிவம் என்னும் அகண்ட சிவ துரியமும் ஒன்றாகக் கலந்தால், அக்கலப்புப் பாலும் தேனுமாகிய இரண்டுடன் தேவாமிர்தமும் கலந்தாற்போல இன்பத்தைத் தருவதாகும். சிறந்த அடியவர் இம்முத்துரியக் கலப்பு நிலையை

மனத்தில் கருதித் தியானித்து உரையற்ற இடமாகிய மௌன சமாதியை மேற்கொண்டிருப்பர்.

இங்கே திருமந்திரம் கூறும் மூன்று உவமைப் பொருள்களையும் சிவபுராணம் கூறும் மூன்று உவமைப் பொருள்களையும் கருத்தில் கொண்டால் மூன்று உவமேயப் பொருள்களை வருவித்து இப்பகுதிக்கு உரை கொள்ள வேண்டும். அம்மூன்று பொருள்கள் சீவதுரியமும், பரதுரியமும், சிவதுரியமும் ஆக வேண்டும். எனவே, இப்பகுதி திருமந்திரப் பாட்டின் கருத்தைத் தழுவியதாக உள்ளது.

குறிப்பு

திருமூலர் அகண்ட சிவம் என்னும் வடமொழிச் சொல்லிற்குக் "கணு ஒன்றிலாத சிவம்" என்னும் தமிழ்ச் சொல்லை அமைத்துக் காட்டுவது நாம் எண்ணி இன்புறத் தக்கது. இதன் வழி இவரின் தமிழ்ப் பற்று புலப்படுகிறது.

'உள்நைதல்' என்பது உனை எனத் திரிந்து வந்துள்ளது.

'உரையற்ற இடம்' என்பதற்கு மௌனசமாதி என்று பெயர்.

49. நிறங்கள் ஓர் ஐந்து உடையாய்'! என்பது இருபத்து மூன்றாம் புராணம்.

[ஒரு நிறத்தை மட்டும் பெற்றிராமல்] ஒரு கூட்டமாகிய ஐந்து நிறங்களையும் உடையவனே! [எ-று]

முற்றும்மை விரிக்க. உறையூரில் எழுந்தருளியுள்ள இறைவனுக்குப் 'பஞ்சவர்ணேசுரன்' என்று பெயர் வழங்குகின்றது.

இறைவன் நிலம் நீர் தீ காற்று வானம் என்னும் ஐம்பூதங்களை வடிவமாகப் பெற்றிருத்தலால் அவற்றிற்குள்ள பொன்மை வெண்மை செம்மை கருமை நீலம் என்னும் ஐந்து நிறங்களை உடையவன் என்றும்,

அல்லாமல், இறைவனுடைய அருவுருவாகிய சதாசிவ வடிவம் ஐம்பிரம மந்திர வடிவம் ஆதலின், பளிங்கு நிறத்திற்குரிய ஈசானம் உச்சியாகவும், கோங்கலர் நிறத்திற்குரிய தத்புருடம் முகமாகவும், கருமை நிறத்திற்குரிய அகோரம் நெஞ்சாகவும், கடம்பு மலரின் நிறத்திற்குரிய வாமதேவம் இடைப்பகுதியாகவும், பால் நிறத்திற்குரிய சத்தியோசாதம் திருவடியாகவும் கூறப்படுதலின், இவ்வகையில் நிறங்கள் ஓர் ஐந்தும் உடையவன் என்றும் கூறலாம்.

அடிகள் மற்றோரிடத்தில் "வெளியாய் கரியாய் பச்சையனே செய்ய மேனியனே" [நீத்தல்-31] என்று மாறுபட்ட நான்கு நிறப்பொருளாகவும் இருப்பான் என்பர். திருமூலர் "செய்யன் கரியன் வெளியன்நற் பச்சையன்" [1520] என்று கூறுதலை ஒப்பு நோக்குக.

மேலும், அடிகள் "முத்து மாமணி மாணிக்க வயிரத்த பவளத்தின் முழுச்சோதி அத்தன்" [அதிச-7] என்பர். "நித்திலச் சோதியன் நீலக் கருமையன்" [3019] என்றும், "நிறம்பல எவ்வண்ணம் அவ்வண்ணம் ஈசன்" [3020] என்றும் திருமூலர் கூறுவதையும் நோக்குக.

23-ஆம் புராணத்தில் "நிறங்கள் ஓர் ஐந்துடையாய்', என்பதற்கு "ஒப்பற்ற ஐந்துருவங்களை உடையவனே" என்று உரை எழுதப்பெற்று, 'ஐந்துருவம்' என்றது, சிருட்டியாதி பஞ்சகிர்த்தியத் தலைவர்களாய் நின்றமையை, என்று சிறப்புரையும் எழுதப்பட்டுள்ளது (பழைய உரை-பிரு-இரா)

49. 50. 'விண்ணோர்கள் ஏத்தமறைந்திருந்தாய்!

என்பது இருபத்து நான்காம் புராணம்.

வானுலகில் வாழும் தேவர்கள் உன்னை உயர்த்திக் கூறிப் புகழவும், அவர்க்குமுன் தோன்றாமல், "மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே" (சிவபு-45) என்றாற்போல், மறைந்தே இருந்தவனே! [எ-று]

திருமூலர் "வானோரா் அறியும் அளவல்லன் மாதேவன்" (6024) என்பர்.

50. எம்பெருமான்! என்பது இருபத்தைந்தாம் புராணம். (விண்ணோர்கள் ஏத்த மறைந்திருந்தாலும்) எமக்குப் பெருமானாக உள்ளவனே! [எ-று]

அடிகள் இறைவன் எல்லோர்க்கும் உரியவனாயிருந்தாலும் தமக்கே உரியவன் என்பதை, "எந்தையாயும் யாய்ஆயும், எம்பிரானாயும் இறைவன் எமக்கு உள்ளான். ஆனால், மற்றவர்க்குத் தந்தையாயும், தாயாகியும், தம்பிரானாகியும் உள்ளான் என வேறுபடுத்திக் கூறுகின்றார். அதனை

"எந்தை யாய்எம் பிரான்மற்றும் யாவர்க்கும்
தந்தை தாய்தம் பிரான்" (திருச்ச-51)

என்னும் இப்பாடலால் அறிக. இங்கே எம்பிரான், தம்பிரான் என்றது கோகழியாண்ட குருமணியை என்க. மற்றும், அடிகள் எங்கள் பிரான், எங்கள் பெருமான், எங்கோமான், எம்இறை, எம்பிரான் என்றும் உரிமைதோன்றக் கூறுவர்.

50, 61. "......... வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டி
புறந்தோல் போர்த்து எங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன்ஐந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துஉள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலம்தன்மேல் வந்துஅருளி நீள்கழல்கள் காட்டி
நாயில் கடைஆய்க் கிடந்த அடியேற்குத்
தாயில் சிறந்த தயாவான தத்துவனே!"

என்பது இருபத்தாறாம் புராணம்.

இப்பகுதி, இறைவன் வல்வினையில் உழலும் உயிர்களைப் பக்குவம் நோக்கி வீடுபேறடைதற்குரிய கடைசி உடம்பினைத் தந்து பிறக்குமாறு செய்து, பிறந்த அந்நிலையில், நிலவுலகத்தில் ஆசிரிய வடிவாய் எழுந்தருளி ஆட்கொள்ளுந் திறத்தினை அடிகள் தன்மேல் வைத்துக் கூறிய தென்க.

வலிய சஞ்சித வினையையுடைய என்றன்னையும், என்னை மறையுமாறு மூடிய கரிய ஆணவ இருளினையும் பிராரத்த வினையாகிய புண்ணிய பாவம் என்னும் அரிய கயிற்றாற்கட்டிப் பின்னர் புழு நிறைந்த வழுக்கினைப் புறந்தோல் போர்த்து எங்கும் மூடி.

அழுக்கு ஒழுகும் ஒன்பது வாயிலையுடைய குடிலாகிய பருவுடம்பினை, [கடைசி உடம்பாகச்] சிறியேனுக்கு நல்கி [யான் அவ்வுடம்புடையனாகிப் பிறந்திருந்த பொழுது] நிலவுலகில் ஆசிரியனாக எழுந்தருளிவந்து தன் நீண்ட திருவடியைக் காட்டி [ஞானோபதேசம் செய்து] நாயிலும் கடைப்பட்டவனாகிக் கிடந்த அடியேனுக்குத் தாயைக் காட்டிலும் சிறந்த தயவை உடையவனாகி உண்மைப் பொருளை உணர்த்தியவனே. [எ–று]

இப்பகுதியின் முடிவு

வல்வினையேன் றன்னையும், மறைந்திட மூடிய மாய இருளையும் அறம்பாவமென்னும் கயிற்றாற்கட்டிக் குடிலினைச் சிறியேற்கு நல்கி, நிலந்தன்மேல்வந்து, கழல்கள் காட்டித் தாயிற் சிறந்த தயாவான தத்துவனே! என்று முடிக்க.

இடையில்வந்த தொடர்களை

புழுவழுக்கினைப் புறந்தோல் போர்த்து மூடிச் செய்த குடில்; மலஞ்சோரும் ஒன்பது வாயிற்குடில்; அக்குடிலினைச் சிறியேற்குச் சரம உடம்பாக நல்கி.

எத்தகைய சிறியேன் எனில், மலங்குமாறு ஐம்புலனும் (மாறுபட்டு) வஞ்சனையைச்செய்ய, அதனால் விலங்கு (விலகும்) மனம்; அம்மனத்தைப் பெற்றதால் உனக்குக் கலந்த அன்பாகிக்

கசிந்து உள்உருகும் நலம் இல்லாதுபோன சிறியேன் என்று முடிக்க.

'விலங்கு மனம்' என்றதால் அதன் இனமாகிய புத்தி அகங்காரங்களையும் கொள்க. புலன் ஐந்தும் புத்தி மன அகங்காரங்களும் ஆகிய எட்டும் கூடியது, ''சத்தபரிச ரூபரச கந்த புத்திமனாங் காரம் புரியட்ட காயமே'' (திருமந்-2123) என்னும் பாட்டின்படி புரியட்ட காயமாகிய நுண்ணுடம்பாதலின், நுண்ணுடம்பின் நலமில்லாத எனக்கு, வீடுபேறடைவதற்கேது வான ஒன்பது வாயிற் குடிலைக் (தூல உடம்பினை) கடைசி உடம்பாகக்கொடுத்து, நிலந்தன் மேல் வந்து, அருளி, நீள்கழல்கள் காட்டி ஆட்கொண்ட தெல்லாம் தாயிற் சிறந்த உன்னுடைய தயவினைக் காட்டுகின்ற தென்பர்.

புழு வழுக்கு என்று பிரிக்க. வழுக்கு-நிணம். **அடிகளார்** ''நின் திருவடிக்காம் பவமே அருளுகண்டாய்,'' (திருச்சதகம்-5) என்று கூறுவதால் வீடுபேறடைதற் கேதுவான கடைசி உடம்பினை வேண்டி நின்றமை புலப்படும்.

இறைவன் தாயிற் சிறந்த தயாவான தத்துவனாய் விளங்கிய செய்தியை அவர்,

''பானினைந் தூட்டுந் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே'' [பிடித்த-9]

என்று கூறுவதுணர்க.

மேற்கண்ட பகுதியின் கருத்து

பண்டு பிறந்த ஆயிரக் கணக்கான பிறவிகள்தோறும் தான் செய்த புண்ணியப்பயனால் சூக்கும உடம்பின் பகுதியாகிய மனம் தூய்மை பெறும்; அந்நிலை கைவரப்பெற்றவனுக்கு

இறைவன் வீடுபேறடைதற் கேதுவான கடைசி உடம்பினைக் (சரமசரீரம்) கொடுக்கின்றான். அத்தகைய உடம்பைப் பெற்றவன் நூற்றொரு தலத்தில் முதற்றலமாகிய பிண்டத் தலத்தைப் பெற்றவனாகின்றான்; அதனைப் பெற்றவன் முறையே பிண்ட ஞானத்தலம் சமுசாரநீக்கத்தலம் என்னும் இவற்றைப் பெற்றபின், குரு இந்நிலவுலகில் எழுந்தருளி அருள் புரிவன். இதற்குக் **குருகாருண்யத்தலம்** என்று வீரசைவ சமய நூல்கள் கூறும். அதனைக் கருதியது இப்பகுதி என்க.

அடிகளர்

''நனவிலும் நாயேற் கருளினை போற்றி''

[போற்றி–144]

என்றும்,

''ஓய்வி லாதன உவமனில் இறந்தன
ஒண்மலர்த் தாள்தந்து
நாயி லாகிய குலத்தினுங் கடைப்படும்
என்னைநன் னெறிகாட்டித்
தாயி லாகிய இன்னருள் புரிந்தவென்
தலைவன்'' (திருச்ச–39)

என்றும் கூறுவர். திருமூலர் ''ஞானாபி டேகமே நற்குரு பாதமே'' (1476) என்பர்.

62. மாசு அற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே! என்பது இருபத்தேழாம் புராணமாகும்.

''விபரீத ஐயங்களாகிய மாசு நீங்கிய உண்மை அறிவினைத் திருவாய் மலர்ந்தருளிய செந்தாமரை மலர் போன்ற சுடரே! (எ–று)

இங்கே, '*சுடர்*' என்றது ஆசிரிய வடிவாய் வந்த இறைவனை. '*மலர்ந்த*' என்ற குறிப்பால் '*ஆசிரியன்*' என்று கொள்ளப் பட்டது. சோதி–ஆகமம்.

அடிகளார் இறைவனைச் சோதியாகவும், அதற்குப் பற்றுக் கோடாய் நின்றெரியும் சுடராகவும், அச்சுடருக்கு இடமான விளக்காகவும் (அகல்) செயல் முறை பற்றி வேறுபடுத்திக் கூறுவர்.

தமக்கு அருள் செய்த ஆசிரியன் செந்தாமரை மலர் போல் இருந்தார் என்பதை "செங்கமல மலர்போல் ஆருரு வாய என்னாரமுதே" [எண்-1] என்ற பாட்டால் **அடிகள்** குறிப்பிடுகின்றார்.

"மாசு அற்ற சோதி-திருவருள் ஞானமுமாம்"
மாசு அற்ற சோதீ! என விளியாக்கும்
(அநுபூதி உரை.)

63. தேசனே! என்பது இருபத்தெட்டாம் புராணம்.

"தேஜ: என்ற வட சொல்லின் அடியால் தேசன் என்றாயிற்று. இது பிரபாவம், ஒளி, பலம் என்னும் பொருளில் வரும் ஆதலால், பிரபாவம் உடையவனே! ஒளியுடையவனே! வலிமை உடையவனே! [எ-று]

அடிகளார்: "தேசன் அடி போற்றி" (சிவ-12) என்றும் "தேசனே அம்பலவனே" [திருச்ச-55] என்றும் "தேசனே ஓர் தேவருண்மை சிந்தியாது சிந்தையே" (திருச்ச-78) என்றும் "மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும் தேசன் [திருவெம்-2] என்றும் கூறுதலைக் காண்க.

உலகத்திலுள்ள ஒளியெல்லாம் சிவன் உருவத்தேசே, என்னும் கருத்தால் "தேசமார் ஒளிகளெல்லாம் சிவன்உருத் தேசது" என்னும் **சிவஞான சித்தி**

* ஞாயிறு, திங்கள், தீ, கோள்கள், உடுக்கள் என்னும் இவற்றிற்கெல்லாம் தேசினைத் தருதற்கு முதலான தேசனே. (பகவத்கீதை 15-12)

63. தேன் ஆர் அமுதே! என்பது இருபத்தொன்பதாம் புராணம்.

''தேன் கலந்து உண்ணப்பெறும் சாவாமருந்து போன்ற வனே! (எ–று)

அமிர்தம் மரணமின்மையைச் செய்யும் மருந்து; அது அமுது எனத்திரிந்தது. **அடிகள்** ''என்னில் கருணை வான் தேன் கலக்க அருளொடு பரா அமுது ஆக்கினன் பிரமன்மால் அறியாப் பெற்றியோனே, [திருவண் 179–182] என்ற இடத்தில் கருணையைத் 'தேன்' என்று கூறுதல் காண்க.

'தேனே! ஆர் அமுதே!' என்பது (பழைய உரை)

63. சிவ புரனே! என்பது முப்பதாம் புராணம்.

சிவபுரத்தை நகராகப் பெற்றவனே! (எ–று)

சிவ உலகம்; அதனுள் சிவநகரம்; அதனுள் சிவாலயம் என்று கூறப்படும் மூன்றில் சிவபுரம் என்பது சிவநகரம் என்க. பராசக்தி வியாபக உலகமே சிவலோகம் என்க.

''பராபரையே சிவலோகம் பரனுக் காமே'' (36) என்று கூறும் **சிவஞான தீபம் அடிகளார்** ''சிவலோகக் கோன்'' [யாத்-10] என்பர்.

சிவபுராணத்தொடர் தனித்தனி விளியாயிருந்தாலும் சில இடங்களில் ஒன்றோடு ஒன்று தொடர்புடையனவாயிருக்குமென்க.

விண்ணோர்கள் ஏத்த மறைந்திருந்தாய் (24) ஆனாலும், எனக்கு எம்பெருமான் ஆனாய் (25); எம்பெருமானாயிருந்து செய்த உபகாரம் என்னையெனின்? அடியேற்குத் தாயிற்சிறந்த தயாவான தத்துவன் (26) ஆனாய் மாசு அற்ற சோதியாகிய சிவாகமத்தைத் திருவாய் மலர்ந்த சுடரானாய் (27) என்று தொடர்புப்படுத்திக் கொள்க.

சிவலோகம் என்பது பரகதி என்றும் கூறப்படும். அது நரகம் 'சுவர்க்கம் நிலவுலகம் என்னும் மூன்றிற்கும் அப்பாற்பட்டது. என்பதனை 'நரகொடு சுவர்க்கம் நானிலம் புகாமல் பரகதி பாண்டியற் கருளினை'' (போற்-213-215) என்றும், ''முத்தி

தந்திந்த மூவுலகுக்கும் அப்புறத்தெமை வைத்திடும் அத்தன்'' (சென்னி-6) என்றும் வருவனவற்றால் அறிக.

'அடியார் உள்ளமே சிவபுரமாகக் கொண்ட நாதனே' என்னும் (அனுபூதி)

64. பாசம் ஆம் பற்று அறுத்து பாரிக்கும் ஆரியனே!

என்பது முப்பத்தொன்றாம் புராணம்.

ஆணவம் கன்மம் மாயை என்னும் பிணித்தலுக்கு அடி ஆகும் பற்றினை அறுத்து, அவற்றால் பிணிக்கப்பட்ட என் அறிவினைப் பெருகச் செய்யும் மேலோனே! (ஆசிரியனே) (எ–று)

ஆரியன்–மேலோன்: ஆசிரியன்; அரியன் என்பதும் ஆம்.

உயிரின் அறிவு இச்சைச் செயல்களைப் பாசப் பற்று பிணித்திருந்தது; அப்பற்றை அறுத்து விடவே உயிரின் அறிவு இச்சைச் செயல்கள் பெருகும் ஆதலின்: பாரிக்கும் என்று கூறினார்.

அடிகளார்: தமக்கு அருள்புரிந்த கோகழிக் குருமணியை ''ஈண்டிய மாயா இருள்கெட எப்பொருளும் விளங்கத் தூண்டிய சோதி'' (திருப்பாண்-6) என்பர். இங்கே எப்பொருளும் விளங்க என்பதற்கு 'உயிர்க்குச் சிற்றறிவொழிந்து எப்பொருளையும் காணும் வியாபக அறிவு உண்டாகுமாறு என்று பொருள் கூறிக் கொள்க.

இறைவன் ஆரியனாய் (ஆசிரியன்) வந்த செய்தியை

''நந்தம் பாடியின் நான்மறை யோனாய்
அந்தமில் ஆரிய னாய் அமர்ந் தருளியும்''

(கீர்த்தி 21, 22) என்பர்.

வேறுபாடம்

'பாரிக்கும் மாரியனே' என்றும் பாடம் உண்டு. இதற்குப் 'பெருமையுற வளர்க்கும் மழை போன்றவனே!'' என்று பொருள் உரைக்க.

அடிகளார்: ''கருமுகி லாகிய கண்ணே போற்றி'' [போற்றி-127] என்றும்' ''அண்டத்து அரும்பெறல் மேகன் வாழ்க'' [திரு அண்-95] என்றும் கூறுவர்.

ஆசிரியன் செய்யும் தீட்சை இரண்டு பகுதியாயிருக்கும். ஒன்று மலங்களை அறுத்தலாகும். மற்றொன்று அறிவினைத் தந்து சிவத்தினை விளங்கச் செய்வதாகும். இப்புராணம் மலங்களை அறுத்தல் என்க.

65-66 -நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெட பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே!

என்பது முப்பத்திரண்டாம் புராணம்.

அன்பினைப் பகுதியாகிய அடியாகக் கொண்ட தீட்சையைச்செய்து புரியட்ட காயப்பகுதியாகிய புத்திமனம் அகங்காரமென்னும் நெஞ்சகத்தில் ஐம்பொறிகள் செய்யும் வஞ்சகம் கெடுமாறு. நீங்காது நின்ற பெரிய கருணையே பெருகும்பெரிய ஆறு போன்றவனே! (எ-று)

அருள் புரிந்து என்றது, ஆசிரியன் செய்யும் தீட்சையை. முன்னே (31இல்) கூறியது பாச க்ஷயம் பண்ணுதலாகையால் 'பாசமாம்பற்றறுத்து என்றார். இது (32) சிவத்தினை விளங்கச் செய்ததாகையால் 'நெஞ்சில் பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே' என்றார். மாறிநின்று மயக்குதல் ஐம்புலன்கள் செய்யும் வஞ்சகமாகும். இறைவன் நெஞ்சில் இமைப்பொழுதும் நீங்காமலிருப்பதற்குப்பயன் மேற் கூறிய வஞ்சகம் கெடுதலாகும்.

திருமூலர் ''ஒன்றியென் உள்ளத்தின் உள்ளிருந் தானே'' (1762) என்பர். **அடிகளார்** ''பூவார் சென்னி மன்னனெம் புயங்கப் பெருமான் சிறியோமை, ஓவாது உள்ளம் கலந்து உணர்வாய் உருக்கும்'' (யாத்திரை-1) என்றும், மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென் மனத்திடை மன்னிய மன்னே, சிறைபெறா நீர்போல் சிந்தைவாய்ப் பாயுந் திருப்பெருந் துறையுறை சிவனே (கோயிற்-5) என்றும் கூறுவர்.

67 ஆரா அமுதே! என்பது முப்பத்து மூன்றாம் புராணம்

"உண்ண உண்ண நிறைவு பெறாத அமிழ்தம் போன்றவனே! (எ-று)

'ஆராத' என்னும் சொல் 'ஆரா' என நின்றது. ஈறு கெட்ட எதிர் மறைச் சொல். இதன் உடன்பாடு ஆர என்பதாம் "அருளமுதம் ஆரப் பருகி ஆராத ஆர்வங் கூர" (யாத்திரை-9) என்பதை நோக்குக.

தீட்சையால் உள்ளத்தில் பேராது நின்ற பெருமான் ஆரா அமுதாய் மேலும் மேலும் இனித்துக் கொண்டுள்ளான் என்றது. அடிகளார் "ஆராத ஆசையதாய்அடியேன் அகம்மகிழத்தேரார்ந்த வீதிப் பெருந்துறையான் திருநடஞ்செய் பேரானந்தம்" (திருப்பூ. 18) என்றும் "பருகியும் ஆரேன் (திருவண்-166) என்றும் "உன்னை உள்குவார் மனத்தின் உறுசுவை அளிக்கும் ஆரமுதே" (அருட்-6) என்றும் "ஆரா அமுதே அருளே போற்றி" (போற்-144) என்றும் கூறுவர்.

67 அளவு இலாப் பெம்மானே!
என்பது முப்பத்து நான்காம் புராணம்.

"(சிறியேனுடைய நெஞ்சில்பேராது நிற்பினும்) அளவை களால் அளத்தல் இல்லாத பெரியோனே! (எ-று)

பெருமான் என்னும் சொல் பெம்மான் என்றாயிற்று.

அடிகளார் "அளவ றுப்பதற் கரியவன் இமையவர்க்கு" (திருச்ச-35) என்றும் "அரியொடு பிரமற்கு அளவறி யொண்ணான்" (கீர்த்தி - 35) என்றும் "பிரமன் அரியென் றிருவருந்தம் பேதைமையால் பரமம் யாம்பரம் என்றவர்கள் பதைப்பொடுங்க அரனார் அழலுருவாய் ஆங்கே அளவிறந்து பரமாகி நின்றவா தோணோக்கம் ஆடாமோ" (திருத்தோ-12) என்றும் கூறுதலைக் காண்க

இறைவன் இமையவராலும், இமையவருள் உயர்ந்த பிரமன் திருமாலாலும் அளக்கமுடியாத பெரியோன் என்க.

"ஆன்ம சிற்சத்தியாற் கொள்ளப்படும் பிரமாண அளவைக்கு எட்டாதவனே!" என்னும் அனுபூதிஉரை.

68 ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே!

என்பது முப்பத்தைந்தாம் புராணம்.

கருதாதவருடைய உள்ளத்தின்கண் பக்குவம் வரும் காலம் நோக்கி ஒளிந்திருக்கும் ஒளிந்த (மறைந்த) பொருளே! (எ-று)

ஒளிதல்-மறைந்திருத்தல், முன்னே "மாற்றம்மனங்கழிய நின்ற மறையோனே" (சிவ-45) என்றதை ஒப்பு நோக்குக. "**ஒளிக்கும் சோரன்**" (திருஅண்-141) என்பர்

இறைவன் அடியவர் உள்ளத்தில் பேராது விளங்கிநிற்கின்றான். ஆனால். ஓராதார் உள்ளத்தில் பக்குவ காலம் வரும் வரை ஒளிந்திருந்து ஆளும் என்க. இதனைத் திருமந்திரம்

"வள்ளற் றலைவனை வானநன் னாடனை
வெள்ளப் புனற்சடை வேத முதல்வனைக்
கள்ளப் பெருமக்கள் காண்பர்கொ லோவென்று
உள்ளத்தி னுள்ளே ஒளிந்திருந் தாளுமே" (2994)

என்று கூறும்.

அடிகளார் "பரந்துபல் ஆய்மலர் இட்டு முட்டாதடியே இறைஞ்சி இரந்தஎல்லாம் எமக்கே பெறலாம் என்னும் அன்பருள்ளம் கரந்துநில்லாக்கள்வனே" (திருச்ச-6) என்பர். இதனால் கரந்து நிற்கும் இடம் அறிக.

69 நீர் ஆ உருக்கி என் ஆர் உயிராய் நின்றானே!

என்பது முப்பத்தாறாம் புராணம்.

நீர் போல் நெகிழ்ச்சி ஆகுமாறு உருகச் செய்து என்னுடைய உயிருக்குள் உடனாய்க்கலந்து நின்றவனே!(எ-று)

ஆய்-உடனாய்; நின்றானே-கலந்து நின்றவனே;

அடிகளார் "ஊனார் உடல் புகுந்தான் உயிர்கலந்தான் உளம்பிரியான்" என்றும், "உடலும் எனதுயிரும்புகுந்து ஒழியா வண்ணம் நிறைந்தான்" [உயிருண்–2, 6] என்றும் கூறுதலைக் காண்க.

இறைவன் உயிர்க்குள் உடனாய்க் கலந்து நிற்கும் நிலையறிந்து வழிபடுதலை 'ஞானாகமத்தலம்' என்று கூறும் சித்தாந்த சிகாமணி.

70. இன்பமும் துன்பமும் இல்லானே!

என்பது முப்பத்தேழாம் புராணம்.

"என் ஆருயிராய் இருந்தாலும், (69) தன் இயல்பால் யான் பெறும் இன்ப துன்பங்களைப் பெறாதவனே!" (எ–று)

இன்ப துன்பத்தைத் 'துவந்துவம்' என்பர். இறைவன் நிர்த்துவந்துவன் ஆதலால் 'இன்பமும் துன்பமும் இல்லானே' என்றார்.

70. (இன்பமும் துன்பமும்) உள்ளானே!

என்பது முப்பத்தெட்டாம் புராணம்

"என்னொடு கலந்த நின்ற இயல்பால் யான்பெறும் இன்ப துன்பங்களையும் பெறுபவனே! (எ–று)

இன்பத்தையும் துன்பத்தையும் **கருதாதவனே** என்றும் உரை கொள்ளலாம். உள்ளுதல் – கருதுதல்.

அடிகளார் "துன்பமுமாய் இன்பம் ஆயினார்க்கு" (திருப்பொற்–20) என்பர். "இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே" என்று ஒரு தொடராகக் கொண்டு, எதிர்நிரல் நிறையாக்கி, அநாதியே என்னுடனிருந்தும், இன்பக்கனமேயாகித் துன்பமில்லாத நாதனே!" என உரைக்கும் அநுபூதி உரை.

71. அன்பருக்கு அன்பனே!

என்பது முப்பத்தொன்பதாம் புராணம்.

(ஐந்திணைக்காமத்தலைவர்போல்) நின்பால் அன்பு செய்யும் அன்பருக்கு, அவர்கள்பால் அன்புசெய்யும் அன்புடையவனே! (எ–று)

அடிகளார் "தீர்ந்தஅன் பாய அன்பர்க்கு அவரினும் அன்ப போற்றி (திருச்ச–69) என்பர்.

இறைவன் அன்புசெய்பவர்க்கு அவரினும் அன்பு செய்ப வனாக உள்ளான் என்பது அவனுடைய பேரிரக்கத்தைப் புலப் படுத்துகின்றது.

71, 72. யாவையும் ஆய் அல்லையும் ஆம் சோதியனே!

என்பது நாற்பதாம் புராணம்.

"எல்லாப் பொருளும் தானாய், அப்பொருள் அல்லாத வனும் ஆகின்ற ஒளியுடையவனே! (எ–று)

இங்கே ஒளி (சோதி) என்றது திருவருட் சக்தியை.

இறைவன் எப்பொருளும் தானாய் இருப்பது பொது இயல்பு; அவற்றின் வேறாய் நிற்பது சிறப்பியல்பு.

இந்த இருவகை நிலையையும் **அடிகளார்** மற்றோரிடத்தில் "நிரந்த ஆகாயம் நீர்நிலம் தீகால் ஆய்அவை அல்லையாய்" (கோயிற்-6) என்று கூறுவர். "பார்பதம் அண்டம் அனைத்துமாய் முளைத்துப் பரந்ததோர் படரொளிப் பரப்பே" [கோயிற்–8] என்பதையும் நோக்குக.

இன்னும், "எல்லா உயிருமாய்த் தழைத்துப் பிழைத்தவை அல்லையாய் நிற்கும் எத்தனை" [பிடித்-8] என்றும்கூறுவதுணர்க.

72. துன் இருளே! என்பது நாற்பத்தொன்றாம் புராணம்.

மேற்கூறியவாறு திருவருட் சத்தியாகிய சோதியை உடையவனாக இருத்தலன்றித் திரோதான சத்தியாகிய இருளையும் உடையவனே! (எ–று)

"சோதியன்" அன் விகுதிபெற்றது; அதனைப்போலவே ஈண்டும் அன் விகுதி புணர்த்து 'இருளன்' என்று கொள்க.

இறைவன் திரோதான சத்தியுடன் கூடியிருந்து உயிர்கட்கு உலக போகங்களையும் திருவருட் சத்தியுடன் கூடியிருந்து வீட்டினையும் தருதலால் இருளாயிருந்து இகத்தையும், வெளியாயிருந்து பரத்தையும் தருவன் என்னுங் கருத்தால் **அடிகளார்** "இருளே வெளியே இகபர மாகி இருந்தவனே" (நீத்தல்–17) என்பர்.

"சோதியுமாய் இருளாயினார்க்கு" [திருப்பொற்–20] என்றதையும், இருட்கும் ஒளிக்கும் ஒன்றேயிடம்" என்ற **கொடிக்கவியையும்** நோக்குக.

அனுபூதி உரையார் "என்னை விட்டு நீங்காத மகாகேவல இருள். [ஆணவம்] சடமாதலால், அதனைப் பிரேரிக்கும் கடவுள் நீயேயாதலால் அதனையும் இடமாக உடைய உடைப் பொருளே" என்பர்.

72. தோன்றாப் பெருமையனே!

என்பது நாற்பத்திரண்டாம் புராணம்.

பிறவாத பெருமையை உடையவனே! (எ–று)

சிலப்பதிகாரம் "பிறவா யாக்கைப் பெரியோன்" என்று கூறும். கந்தரனுபூதி "உதியா மரியா விமலன்" என்று கூறும்.

வேறுஉரை: உயிர் வர்க்கமாகிய எங்களுக்கு (எங்கள் உணர்விற்கு) விளங்காத பெருமையை உடையவனே! (எ–று)

அடிகளார் இறைவன் பெருமையை "அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம் இன்னுழை கதிரின் துன்அணுப் புரையச் சிறியவாகப் பெரியோன்; [திருவண்–6] என்றும், "அந்தமில் பெருமை அழலுரு" [கீர்த்தி–92] என்றும், "பேர்ந்துமென் பொய்ம்மை யாட்கொண் டருளிடும் பெருமை போற்றி" [திருச்ச–69] என்றும், "வெறுப்பனவே செய்யும் என்சிறுமையை நின்பெருமையினாற் பொறுப்பவனே" (அடைக்–2) என்றும் "அடியார் பெயராத பெருமையனே" (நீத்தல்–25) என்றும்

கூறுவனவற்றுள் இறைவன் பெருமையின் கூறுபாடுகளைக் காண்க. சராசரமனைத்தும் "நின்னிடைத்தோன்றி நின்னிடை யடங்கலின் ஒன்றினுந் தோன்றாய் ஒன்றினும் அடங்காய், என்பது பட்டினத்தார் பாட்டு.

73. ஆதியனே! என்பது நாற்பத்து மூன்றாம் புராணம்.

படைத்தற் றொழிற்கு நிமித்த காரணமாய் முதற்கண் இருப்பவனே! (எ-று)

அடிகளார் "நிரந்தர மாய் நின்ற ஆதி" (அதிச-2) என்றும், 'முடியா முதலே" [கோயில் மூத்-1] என்றும், கூறிய தோடல்லாமல் முழுமுதல், வழிமுதல் என்னும் இருவகை முதலாக இறைவன் உள்ளான் என்பதை, "முழுமுதலே ஐம்புலனுக்கும் என்றனக்கும் வழி முதலே" (கோயி-4) என்றும் கூறுவர்.

73. அந்தம் நடு வாகி அல்லானே!
என்பது நாற்பத்து நான்காம் புராணம்.

அழித்தல் காத்தல் என்னும் தொழிலுக்கு முறையே நிமித்த காரணன் ஆன உருத்திரனும் திருமாலும் ஆகி, ஆதியன் முதலிய இம் மூவர் அல்லனும் ஆகி இருப்பவனே! (எ-று)

இறைவனாகிய ஒருவன், ஆக்குதல் காத்தல் அழித்தல் என்னும் முத்தொழில் செய்யும் பிரமன், திருமால், உருத்திரன் என்பவருடைய உள்ளத்திலே, முறையே பவன், மிருடன், அரன், என்னும் பெயருடையவனாய்ப் பொருந்தியிருந்து, அவர்களை அத்தொழிலில் இயக்கி விடுவன் ஆதலால், அவர் களுடன் ஒன்றியிருந்த நிலையில் ஆதியன், நடுவன், அந்தன் என்று பேசப்படுகின்றான்.

அல்லானாய் வேறுபட்ட நிலையில் 'இறை' என்னும் ஒருவனாகவே பேசப்படுகிறான். அடிகளார் "முந்திய முதல்நடு இறுதியும் ஆனாய்" என்றும், ஆனால் "மூவரும் அறிகிலர்" என்றும் கூறி இறைவனுடைய இருவகை நிலைகளையும்

புலப்படுத்தியமை காண்க. முழுமுதல், வழிமுதல் என்ற இரண்டு நிலை மேலே கூறப்பட்டன.

இறைவனுடைய முழுமுதல் தன்மையை,

"தானே படைத்திடும்; தானே அளித்திடும்:
தானே துடைத்திடும்; தானே மறைத்திடும்;
தானே இவைசெய்து தான்முத்தி தந்திடும்;
தானே வியாபி; தலைவனும் ஆமே.," [1809]

என்று **திருமந்திரம்** கூறும்.

74. ஈர்த்து என்னை ஆள் கொண்ட எந்தை பெருமானே

என்பது நாற்பத்தைந்தாம் புராணம்.

ஒன்றுக்கும் பற்றாத என்னையும் வலிந்து இழுத்து அடியனாகக் கொண்ட எம் தந்தையாகிய பெரியோனே! (எ–று)

'என்னையும்', என இழிவு சிறப்பும்மை விரிக்கப்பட்டது. ஆள்–அடிமையாள். 'ஆளுதல் கொண்ட' என்றுமாம். பக்குவமுள்ள உயிர்களை இறைவன் வலிந்து இழுத்துத் தானே ஆட்கொள்வனாகையால், அப்புராணச் செயலை **அடிகளார்** தம்மேல் வைத்துக் கூறுகிறார்.

இறைவன் தானே ஆட்கொள்ளுதலைப் "பண்டைநற் றவத்தால் தோன்றிப் பரமனைப் பத்தி பண்ணும், தொண்டரைத் தானே தூய கதியினில் தொகுப்பன்" என்று **சித்தியார்** கூறும்.

அன்றியே "பல அன்பர் தாமே முயன்று பண்டைநாள் தொண்ட ராயினர்; வாதவூரன்ப! பாடும் பணிநீ கூடும் பொருட்டு, மதுரைமா நகரில் குதிரை மாறியும், விண்புகழ்முடிமிசை மண்பொறை சுமந்தும், நீற்றெழின் மேனியில் மாற்றடி பட்டும், நின்னைத் தொண்டன் என்னக் கொண்டனன்' [நால்வர்நான்–12] என்று **சிவப்பிரகாசர்** மணிவாசகரை இறைவன் ஆட்கொண்ட செய்தியைக் கூறுவராகையால், அச்செயலை அடிகள் குறிப்பிட்டதுமாம்.

அடிகளார் "நிச்சலும் ஈர்த்தாட் கொள்வோன் வாழ்க" [திருவண்–99] என்றும் "இரும்புதரு மனத்தேனை ஈர்த்தீர்த் தென் என்புருக்கிக் கரும்புதரு சுவையெனக்குக் காட்டினை" (திருவே–1) என்றும் கூறுவர்.

75, 76 கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டு உணர்வார் தம் கருத்தின் நோக்கு அரிய நோக்கே.

என்பது நாற்பத்தாறாம் புராணம்.

மெய்ப்பொருள் உணரும் கூரிய அறிவால் அளவைகளைக் கருவியாகக் கொண்டு உணரத் தொடங்குபவர்தம் கருத்தினுள் நோக்கி உணர்வதற்கரிய காட்டும் கருவியாக இருப்பவனே! [எ–று]

நோக்கு – ஆன்மவிழி.

அன்றியே, நோக்கி "அருள்செய்தலுமாம். அன்பால் நீ அகம் நெகவே புகுந்தருளி ஆட்கொண்டது, என்பாலே நோக்கியவா றன்றேயெம் பெருமானே" (திருவே–7) என்பர் அடிகளார்.

76. நுணுக்கு அரிய நுண் உணர்வே!

என்பது நாற்பத்தேழாம் புராணம்.

"மேலும் நுண்மையாதற்கு இயலாத மிக நுண்ணிய உணர்வே! [எ–று]

உயிர் நுண்ணிது; அதன் உணர்வு அதனினும் நுண்ணிது; அவ்வுணர்வுக்குள் உணர்வாயிருந்து உணர்த்தும் இறைவன் உணர்வு அதனினும் நுண்ணிதென்க. "நுணுகிஉள் கலந்தோன்" என்பது திருவிசைப்பா.

இறைவன் உணர்வுமயமானவன் என்பதை, "உடையாய் போற்றி உணர்வே போற்றி" (போற் 80) என்றும், "உரை உணர்வு இறந்துநின்று உணர்வதோர் உணர்வே" (கோயிற்–3) என்றும் அடிகள் கூறுவதால் அறிக.

திருமூலரும்: "வாக்கும் மனமும் மறைந்த மறைப்பொருள், நோக்குமின் நோக்கப் படும்பொருள் நுண்ணிது". (திருமந்-2854) என்பர்.

பாரதியார்: "தூல அணுக்களாய்ச் சூக்குமமாய்ச் சூக்குமத்திற் சாலவுமே நுண்ணியதாய்த் தன்மையெலாந் தானாகி" [88-பரசிவவெள்ளம்] என்பர்.

77. போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே!

என்பது நாற்பத்தெட்டாம் புராணம்.

இப்புராணம் வியாபகப் பொருளின் இயல்பைக் கூறியது. இனம் பற்றிப் புணர்வின் பின் பிரிவும் கொள்க.

"ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குப் போதலும், அங்கிருந்து திரும்பி வருதலும், ஒருபொருளுடன் கூடுதலும், அப்பொருளிலிருந்து பிரிதலும் இல்லாத எங்கும் நிறைந்த புண்ணிய வடிவனே!' (எ-று)

இறைவன் ஒழிவற எங்கும் நிறைந்த நிறைபொருள் ஆகையால், இவ்வாறு கூறினாரென்க. இவ்வாறு கூறியதனால், இறைவன் இந்நான்கும் இல்லாத வியாபி என்பதும், உயிர்கட்கு இந்நான்கும் உள்ளன என்பதும் பெற்றாம்.

திருமூலரும்

இங்குநின் றான்அங்கு நின்றனன் எங்குளன்;
பொங்கிநின் றான்புவ னாபதி புண்ணியன், [3021]

என்றும்,

"போக்கொன்றும் இல்லை வரவில்லை கேடில்லை"
[2854]

என்றும் கூறுவனவற்றை ஒப்புநோக்குக.

அடிகள்

"பூதங்கள் தோறும்நின் றாயெனில் அல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம்உனைக் கண்டறி வாரை"

(திருப்பள்ளி–5) என்பர்.

"புணர்வு" என்பதற்கு 'நிற்றல்' என்று பொருள் கூறும் **பழைய உரை.**

அச்சுமாறிப்போதலும் (இறத்தலும்) புவனபோக வரவும் (பிறத்தலும்) அவற்றில் பிரதிபந்தப்படாமையும் (புணர்விலாமையும்) உடைய புண்ணியனே! என்பது அநுபூதியுரை. இவ்வுரைக்குப் போக்கும் வரவும் புணர்விலாமையுமான புண்ணியனே! என்று பாடம் இருத்தல் வேண்டும்.

அடிகளார்: 'போற்றியைம் புலன்கள் நின்னைப் புணர்கிலாப் புணர்க்கையானே (திருச்–70) என்பதால், ஐம்புலப் புணர்வு இலாதவன் என்றுமாம்.

78. காக்கும் எம் காவலனே!

என்பது நாற்பத்தொன்பதாம் புராணம்.

"காவலன் என்பான் உலகத்தைக் காக்கும் அரசன் என்க, அவன் தன் மெய்க்காவலராலும், படைகளாலும், காக்கப் படுபவனாயிருந்து உலகத்தைக் காத்தலால் காக்கப்படுங் காவலன் ஆவான் என்க. இறைவன் தனக்குப் பிறரைக் காவலராகப் பெறாமலிருந்து கொண்டே உலகத்தைக் காத்தலால், காக்கின்ற எம்முடைய காவலனே! என்றார்" (எ–று)

வினைகள் வந்து தாக்காமல் அவற்றைத்தடை செய்தலும், வினைகள் தரும் தீங்கை உயிர்கள் பெறாமல் காத்தலும் எனக் காத்தல் இரண்டு வகைப்படும், இறைவன் இரண்டு வகையான காவலனாகவும் இருக்கின்றான் என்ற செய்தியை அடிகளார்,

"அத்த உன் அடியேன் செய்த வல்வினையைக் கழிதரு காலமும் ஆய்அவை காத்து எம்மைக்காப்பவனே" (திருச்ச-8) என்பர்.

78. 'காண்பு அரியபேர் ஒளியே'!

என்பது ஐம்பதாம் புராணம்.

புலன்களால் காண்பதற்கு முடியாத உள்ளொளியாகிய பேரொளியே! [எ-று]

உள்ளொளியாகவும் புறவொளியாகவும் இறைவன் உள்ளான். இங்கே கூறிய ஒளி உள்ளொளி ஆதலால், 'காண்பு அரிய' என்று சிறப்பித்தார். புற ஒளியைத் 'தோற்றச்சுடரொளி யாய்' என்று பின்னே கூறுவர்.

அடிகளார் "விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய் எண்ணிறந்து எல்லை இலாதானே" (23-24) என்றும், "நீள் ஒளியாகிய நிருத்தா போற்றி," (போற்-202) என்றும் கூறுவர்.

79. ஆற்று இன்ப வெள்ளமே!

என்பது ஐம்பத்தொன்றாம் புராணம்.

(உலகம் பயன்பெறுமாறு) ஆற்றிலே பெருகும் இன்பந் தரும் வெள்ளம் போன்றவனே! (எ-று)

இறைவன் உண்மை [சத்து], அறிவு, (சித்து) இன்பம் (ஆனந்தம்) என்னும் மூன்று அழியா இயல்பினை உடையவன். இம் மூன்றுள் அவன் இன்ப நிலையை அடிகளார் "பரமாநந்தப் பழங்கடல்" என்பர், (திருவண்-66) அதுவே, மேகமாக மாறி, அருள் துளி சிதறி, செஞ்சுடர்வெள்ளம் திசை திசை தெவிட்டச் செய்கின்றதென்றும், அவ்வெள்ளம் பாய, நிலையான நீர்நிலை களாகிய குட்டை குளமெல்லாம் நிரப்பியும், இயங்கும் நீர்நிலை களாகிய ஓடை, சிற்றாறு, பேராறு முதலியவையெல்லாம் பெருக்கெடுக்கச்செய்தும் உலகத்திற்குப் பயன்தரும் என்பர். தொண்ட உழவர் அருச்சனை வயலுள் அன்பு வித்திட்டு விளைந்த சிவபோகத்தை நுகர்ந்து பேரின்பம் எய்துமாறு வரும்

வெள்ளம் ஆதலின், [திருவண் 93 94] அதனை, 'ஆற்றின்ப வெள்ளமே' என்றார்.

அடிகளார்

''ஊனந் தன்னை ஒருங்குடன் அறுக்கும்
ஆனந் தம்மே ஆறா அருளியும்'' (கீர்த்–185–106)

என்றும்,

''செய்யவாய்ப் பைஞ்சிறகிற் செல்வீநஞ் சிந்தைசேர்
ஐயன் பெருந்துறையான் ஆறுரையாய்-தையலாய்
வான்வந்த சிந்தை மலங்கழுவ வந்திழியும்,
ஆனந்தம் காணுடையான் ஆறு'' (திருத்த–4)

என்றும்,

''அழிவின்றி நின்றதோர் ஆனந்த வெள்ளத்
திடையழுந்திக்
கழிவில் கருணையைக் காட்டிக் கடிய வினையகற்றிப்
பழமலம் பற்றறுத் தாண்டவன் பாண்டிப் பெரும்பதமே
முழுதுல குந்தரு வான்கொடை யேசென்று
முந்துமினே'' (திருப்பாண்–8)

என்றும் கூறுதல் காண்க.

79. அத்தா! என்பது ஐம்பத்திரண்டாம் புராணம்.

அப்பனே! என்றும், பொருளாயிருப்பவனே! என்றும், சிவந்த நிறத்தை உடையவனே! என்றும் ஆம் (எ–று).

அத்தன் என்னும் சொற்குத் தந்தையே என்றும், அர்த்தன் என்பது அத்தன் எனத்திரிந்து வழங்குதலால் பொருளா யிருப்பவனே என்றும், 'அத்து' சிவப்பு நிறத்திற்கு ஒரு பெயராதலால் சிவப்பு நிறத்தை உடையவனே என்றும் பொருள் கூறப்பட்டது.

அடிகளார் ''அன்னையொப் பாயெனக் கத்தனொப் பாயென் அரும் பொருளே'' [நீத்–16] என்றும் கூறுதலைக் காண்க.

79, 80. மிக்காய் நின்ற தோற்று அச்சுடர் ஒளியாய்!

என்பது ஐம்பத்து மூன்றாம் புராணம்.

"மிகுதலாய் நின்ற, பொருள்களைக் காட்டும் அத்தகைய ஞாயிறு முதலான சுடரும் அவற்றின் ஒளியுமாய் உள்ளவனே!" (எ–று)

சுடரும் ஒளியும் என்றும், சுடரின் ஒளி என்றும் பொருள் கொள்க. முன்பு, 'காண்பரிய பேரொளி' என்றது, உள்ளொளியை; ஈண்டு, 'தோற்றச்சுடரொளி' என்றது புறவொளியை.

திருநாவுக்கரசர்

"எரிபெ ருக்குவர் அவ்வெரி ஈசன
துருவ ருக்கம தாவ துணர்ந்திலர்"

என்றும் கூறுவதறிக.

திருமூலர்

"தானே சுடுமங்கி ஞாயிறுந் திங்களும்" [10]

என்பர்.

பழைய உரை: 'மிக்காய்' என்ற சொல்லைத் தனியாய்ப் பிரித்து 'மேலோனே என்று பொருள் கூறும்.

'தோற்றச் சுடரொளியாய்' என்பது, ஒற்று மிகுதலின் பெயரெச்சத் தொடரன்று.

80. சொல்லாத நுண் உணர்வாய்!

என்பது ஐம்பத்து நான்காம் புராணம்.

"அறிந்து, இலக்கணங் கூறப்பெறாத நுண்ணிய உணர்வு வடிவாக இருப்பவனே!" (எ–று)

மேலே, நுணுக்கரிய நுண் உணர்வே என்றதின் உரையை நோக்குக.

அடிகளார்

"மாலே பிரமனே மற்றொழிந்த தேவர்களே
நூலே நுழைவரியான் நுண்ணியனாய் வந்தடியேன்
பாலே புகுந்து பரிந்துருக்கும் பாவகத்தால்
சேலேர்கண் நீர்மல்கத் தெள்ளேணங் கொட்டாமோ"
(திருத்தெள்–14)

என்று கூறுவதறிக.

81-82– **மாற்றம் ஆம் வையகத்தின் வெவ்வேறே**
வந்து அறிவு ஆம் தேற்றனே!
என்பது ஐம்பத்தைந்தாம் **புராணம்**.

"மாறுபாடான சமயக் கொள்கைகள் பல **உண்டாதற்கு** இடமான இந்த உலகத்திலே, வேறுவேறான துணிபொருளாகக் கருதப்பட்டு வந்து, முடிவில் அறிவே வடிவாய் விளங்கும் நிச்சயப் பொருளே!" [எ–று]

'வேறு வேறு' என்ற சொல்' வெவ்வேறு' என்றாயிற்று.

சைவ சித்தாந்தத்தாற் சுட்டப்படும் பதிப்பொருள் எல்லாச் சமயங்கட்கும் முடிபொருளாதலால் **'தேற்றனே'** என்றார்.

அடிகளார்,

"உவலைச் சமயங்கள் ஒவ்வாத சாத்திரமாம்
சவலைக் கடலுள னாய்க்கிடந்து தடுமாறும்
கவலைக் கெடுத்துக் கழலிணைகள் தந்தருளும்
செயலைப் பரவிநாம் தெள்ளேணங் கொட்டாமோ"
(தெள்ளே–17) என்பர்.

'அறிவாம் தேற்றன்' என்பதை,

'அறிவு வடிவென் றறியாத என்னை
அறிவு வடிவென் றருள்செய்தான் நந்தி
அறிவு வடிவென் றருளால் அறிந்தே
அறிவு வடிவென் றறிந்திருந் தேனே' (–2357)

என்னும் **திருமந்திரத்தால்** அறிக,

அடிகளார் இறைவனுடைய இருவகை நிலைகளைக் குறிப்பிடும்பொழுது "தேறும் வகைநீ திகைப்புநீ தீமை நன்மை முழுதும்நீ" என்று (குழைத்த-5) குறிப்பிட்டுப், பின்னர் "சிவலோகா திகைத்தால் தேறும்வகை தேற்ற வேண்டாவோ" [குழைத்த-5] என்பர்.

மக்களின் உணர்வு, தெய்வ உணர்வு பெறாத நிலைமையையும், தெய்வ உணர்வு பெற்றாலும் தெய்வமல்லாதவற்றைத் தெய்வமாகக் கருதி யொழுகும் விபரீத நிலையையும், இதன்பின் உண்மைத் தெய்வத்தை ஐயுற்றுக் கருதும் நிலையையும் பெற்றிருக்கும் ஆதலால், மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து. பின் அறிவாம் தேற்ற நிலைக்கு வரும் என்றார்.

82. தேற்றத் தேளிவே! என்பது ஐம்பத்தாறாம் புராணம்.

"அபர ஞானமாகிய தேற்றத்தின் பின் விளையும் பரஞானமாகிய தெளிவுப் பொருளே! (எ—று)

சிவாகம நூலுணர்வு அபர ஞான மாகும். இது தேற்றம் என்று கூறப்படும். அபர ஞானத்தால் விளையும் அனுபவ ஞானம் பரஞானமாகும். இது தேற்றத்தால் விளைந்த தெளிவாகும்.

விபரீத ஐயமின்றிக் கடவுள் உண்டென்று ஆகமங்களால் உணர்ந்த நிலை தேற்றமென்க. இவ்வுணர்வின் பின் அனுபவத்திற்கு வந்த நிலை தெளிவென்க.

அடிகளார் "தெரிவரி தாகிய தெளிவே போற்றி" [போற்றி 196] என்றும், "தெளிவந்த தேறலை" [திருப்பொற்-18] என்றும், "தேறலின் தெளிவே" (கோயி-1) என்றும் கூறுவதறிக.

இத் தெளிவு நிலைக்குப்பின் தோன்றுவது இன்பநிலை என்க, இதனை அடுத்த புராணத்தில் காண்க.

82–83- என் சிந்தனையுள் ஊற்று ஆன உண் ஆர் அமுதே!

என்பது ஐம்பத்தேழாம் புராணம்.

"என் நினைவினுள் ஊறுகின்ற ஊற்றான அமுதே! என்னால் நுகரப்படும் அரிய அமுதே!' (எ-று).

ஊற்றான அமுதே, உண்ஆர் அமுதே என்று கூட்டுக. தேற்றப் பொருளாயும் தெளிவுப் பொருளாயும் விளங்கிய இறைவன் என் நினைவிலேயே அமுதம் மேல் ஊறி அநுபவப் பொருளாக உள்ளான் என்றார். இது இன்பநிலை.

அடிகளார்: "தேனே அமுதே கரும்பின் தெளிவே தித்திக்கும் மானே" [திருச்ச - 90] என்றும், 'ஞானக் கரும்பின் தெளியைப் பாகை நாடற் கரிய நலத்தை நந்தாத் தேனைப் பழச்சுவை ஆயினானைச் சித்தம் புகுந்துதித் திக்கவல்ல கோனை' [திருப்பொற்-15] என்றும், இவ் வின்ப நிலையைக் கூறுவ தறிக.

83. உடையானே! என்பது ஐம்பத்தெட்டாம் புராணம்.

"என்னை உடைமையாக உடையவனே"! (எ-று).

வடமொழியாளர் பொருளைச் 'ஸ்வம்' என்று கூறுவர். ஸ்வம்மை உடையவன் ஸ்வாமி (சுவாமி) என்க. இறைவனைப் பரம ஸ்வாமி என்பர்.

நாம் பொருள்களை 'உடைமை' என்கிறோம், உடைமையை உடையவன் உடையான் என்க. இந்த உலகமும்' உலகத்திலுள்ள பொருள்களும்' உயிர்களும் இறைவன் உடைமையாகும். இவற்றை உடையவன் இறைவன் ஒருவனே, அதனாலே அவனைப் பெருவுடையான் என்கின்றோம்.

மெய்கண்டார் 'நாம் அரன் உடைமை' என்பர்,

தேற்றம், தெளிவு, சிந்தையுள் ஊற்றான உண்ணாரமுதம் என்னும் மூன்று நிலையில் இறைவன் புலனாகி இருப்பினும், அவன் நம் உடைமையல்லன்; அவன் நம்மை உடைய உடையானே என்னும் கருத்தால் தேற்றனேதெளிவே அமுதே உடையானே என்றார்.

அடிகளார் இறைவனை நோக்கி 'நீ பொதுவாக எல்லாப் பொருள்களையும் உடையவன் ஆனாலும், நின்றனையே கருதி

உள்ளம் உருகும் பெருங் காதல் உடைய அடியவரைச் சிறப்பாக உடையவனாயிருக்கின்றாய்' என்னும் கருத்தால் "உடையா னேநின் றனையுள்கி உள்ளம் உருகும் பெருங்காதல் உடையார் உடையாய்! (திருச்ச-56) என்று கூறுவர். மற்று 'உடையாய் போற்றி உணர்வே போற்றி'' (போற்-110) என்றும், 'உடையாய் உன் அடைக்கலமே'' (அடைக்-1) என்றும், 'உத்தமன் அத்தன் உடையான்'' [திருச்-3] என்றும் கூறுவர்.

உடையவர், தம் உடைமையைத் தாம் ஆண்டுகொள்ளலாம், விற்றுக்கொள்ளலாம், ஒற்றிவைக்கலாம் என்னும் வழக்கத்தை அடிகளார் "இருந்தென்னை ஆண்டுகொள் விற்றுக்கொள் ஒற்றிவை என்னினல்லால் விருந்தின னேனை விடுதிகண்டாய்'' [நீத்-18] என்று புலப்படுத்துகிறார், அடைக்கலப்பத்து முற்றும் உடையானை நோக்கியே பாடியதென்க.

வீரசைவர்கள் தாம் வழிபடும் இட்டலிங்கத்திற்கு வைத்து வழங்கும் தமிழ்ப்பெயர் 'உடையவர்' என்பதாகும். இப்பெயர் ஆண்டான் அடிமைத் திறத்தை அறிவிக்கின்றது.

84-88 "வேற்று விகார விடக்குஉடம்பின் உள்கிடப்ப
ஆற்றேன் எம்ஐயா அரனேஓ என்றென்று
போற்றிப் புணர்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டுஇங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டவிழ்க்க வல்லானே''

என்பது ஐம்பத் தொன்பதாம் புராணம்.

குறிப்பு: இப்பகுதியைக் கற்பவர் 'விடக்குடம்பு' என்பது, பருவுடம் பென்றும் கள்ளப் புலக்குரம்பை' என்பது நுண்ணுடம் பாகிய புரியட்டகாய மென்றும், வேறுபாடறிந்து கற்க.

"வேறுபாட்டினை யுடைய குழந்தைப்பருவம் முதலான விகாரத்தைப் பெற்றிருக்கும் ஊன் உடம்பினுள்ளே கிடப்பப் பொறேன், எம் ஐயா ஓ என்றும், எம் அரனே ஓ என்றும்

ஓலமிட்டு உடையானாகிய [சிவபு-83] உன்னை ஓம்பி, உடம்பாலும் உள்ளத்தாலும் அறிவாலும் கூடப்பெற்றிருந்து, அவ்வாறு கூடப்பெற்றிருக்கும் அத்துவித உணர்வால் பொய்ப் பொருள் உணர்வெல்லாம் கெட, மெய்ப்பொருள் உணர்வே யான நின் தொண்டர்தாம், தம் விடக்குடம்பின் அழிவிற்குப் பின், மீண்டு இவ்வுலகில் வந்து, வினை ஏதுவான பிறப் பினைச் சாராதிருக்குமாறு, கள்ளப்புலக்குரம்பை என்னும் நுண்ணுடம்போடு அவரைப் பிணித்திருக்கும் முடிச்சினை அவிழ்த்து விடுவிக்கும் வல்லமை படைத்தவனே! [எ-று]

"கட்டவிழ்க்க வல்லானே" என்றும், "கட்டழிக்க வல்லானே" என்றும் இவ்வடிகட்குள்ள இரண்டு பாடங்களில் **முதற்பாடம்,** *"ஒட்டிய பாசம் உணர்வது வாகவே, கட்டி அவிழ்த்திடும் கண்ணுதல் காணுமே" (2124) என்னும்* **திருமந்திரப்** *பாடலுக்கு ஒத்திருத்தலை அறிக. வேற்றுவிகாரம் உடம்பிற்கு அன்றி உயிர்க்கு இல்லையாதலால் வேற்றுவிகார விடக் குடம்பு என்றார்.*

வேற்று விகாரமாவன

"ஊறுபட வொன்றினுளே பிறத்தல்பிறந் துளவாதல்
வேறுபட வளர்தல்வளர்ந் தயலொன்றாய் விளைந்தமைதன்
மாறுபடத் தேய்தலற மாய்தலென வருகின்ற
வாறியல்பு முடம்பன்றி யறிவடையா வாதலினால்"
(*பகவத்கீதை, அத்தியாயம்* 2, *பாடல்* 23)

இனிக், கள்ளப்புலக்குரம்பையைப் பற்றிய செய்திகள் வருமாறு:

1. சிவஞான போத மாபாடியம்

[சூ-2; அதி-3] "கண்டநனவை" என்னும் வெண்பா உரையுள், 'உள்ளது' என்றது தூல உடம்புகள் கெட்டவழியும் தனக்குக் கேடின்றிப் படைப்புக் காலந்தொடங்கிச் சங்கார காலமளவும் நிலை பெற்றுள்ளதாகிய புரியட்ட தேகம்" என்று

கூறப்பட்டுள்ளது. இப்புரியட்ட தேகமே இங்கு குறிப்பிட்ட கள்ளப்புலக் குரம்பை என்க.

"அத்தன் அமைத்த உடலிரு கூறினில்
சுத்தம தாகிய சூக்குமஞ் சொல்லுங்கால்
சத்த பரிச ரூப ரசகந்தம்
புத்திம னாங்காரம் புரியட்ட காயமே" [2123]

என்னும் பாட்டால், கள்ளப்புலக்குரம்பையின் வடிவத்தையும்,

"எட்டினில் ஐந்தாகும் இந்திரி யங்களும்
கட்டிய மூன்று கரணமும் ஆயிடும்
ஒட்டிய பாசம் உணர்வது வாகவே
கட்டி யவிழ்த்திடுங் கண்ணுதல் காணுமே (2124)

என்னும் பாட்டால், கள்ளப்புலக்குரம்பையின் வடிவத்தைக் கூறி, இறைவன் இக்குரம்பையை உயிருடன் கூட்டிக் கட்டிப் பின் அவிழ்த்திடும் என்னும் செய்தியையும்,

"காயுங் கடும்பரி கால்வைத்து வாங்கல்போல்
சேய இடம்அண்மை செல்லவும வல்லது" [2131]

என்னும் பாட்டால், அக் கள்ளப்புலக்குரம்பையானது குதிரைபோல் உயிரைச் சுமந்துகொண்டு எங்கும் விரைந்து செல்லவல்லது என்னும் செய்தியையும்,

"தானவ னாகிய தற்பரந் தாங்கினோன்
ஆனவை மாற்றிப் பரமத் தடைந்திடும்
ஏனை உயிர்வினைக் கெய்து மிடஞ்சென்று
வானும் நிலனும் புகுந்து வருந்துமே" [2134]

என்னும் பாட்டால், தான் அவனாகிய தற்பரந் தாங்கிய உயிர்கள் மட்டும் பிறப்பிறப்பை மாற்றி மேல்நிலை அடைந்திடும், ஏனைய உயிர்களெல்லாம் தம் வினைக்குத் தக்க நரக சுவர்க்க நிலவுலகங்களிற் சென்று வருந்தும் என்னும் செய்தியையும் **திருமந்திரம்** கூறுகின்றது.

3. **தணிகைப் புராணம்** காசியைக் காட்டிலும் திருத்தணிகைத்தலம் மேலானது என்ற கருத்தைக் கூறும் பொழுது, 'காசி பருவுடம்பாகிய ஓர் உடம்பை மட்டும் அட்டு,

காசியில் இறக்க முத்தி என்று கூறப்படும் ஒளியைப் பெற்றது; திருத்தணிகையோ பருவுடம்பு நுண்ணுடம்பு என்னும் இரண்டு உடல்களும், அவை கருவியாக ஈட்டப்படும் மாயை கன்மங்களும் வேருடன் மாயுமாறு செய்தலால் காசியின் மேலாம், என்ற கருத்தினை,

"ஒருடல் அட்டொளி பெற்றதிக் காசி
பாரிடை வந்து பணிந்தவர்க் கெல்லாம்
ஈருடல் ஈட்டுநன் மாயைகன் மங்கள்
வேரோடுமாய்த்தலில் காசியின் மேலாம்"
(தணிகைப்புராணம். அகத்தியன் பேறு–8)

என்றும் கூறுதல் காண்க.

4) சொரூபானந்த உபநிடதம் என்னும் நூல்

"மொய்த்தாரும் சாட்சிக்குச் சரீர மான
மூன்றினுக்கும் அன்னியமும் முடிவுங் கூறின்
கர்த்தாவாம் சாட்சிக்கு ஞானத் தாலே
காரணமாம் தேகம்அந்தக் கணத்தின் நாசம்
தொத்தாய காரணதே கந்தா னொன்று
தொலைவதன்முன் சூக்குமதே கங்கள் கோடி
ஒத்தாய பிரளயத்தில் ஒடுங்கும் சூக்கம்
ஒன்றொடுங்கு முனமனந்தம் ஒடுங்குந் தூலம்"

என்று கூறும் [26] பாட்டினையும், "ஒரு சூக்கும சரீரம் சிருட்டியிலுண்டாய்ப் பிரளயத்தில் நாசமடைவதற்குள்ளாகக் கோடா கோடித் தூல சரீரம் தோன்றி மறையும்" என்னும் அதன் உரையினையும் நோக்கி அறிக.

அடிகளாரும் தூல உடம்பழிவிற்குப்பின், மீண்டும் இங்கு வந்து வினைப் பிறவி சாராதவாறு **கள்ளப்புலக்குரம்பை என்னும் நுண்ணுடம்புக் கட்டினை அவிழ்க்க வல்லவன் இறைவனொருவனே ஆவான்** என்று தெளிவாகக் கூறுகின்றார். அவர்: மேலே [சிவபுராணம் 55 58] விமலனே உனக்குக் கலந்த அன்பாகிக் கசிந்து உள்ளுருகும் நலந்தான் இலாதுபோன சிறியேன் ஆயினேன். அச்சிறுமை எதனால் விளைந்ததெனின், விலங்கு

[மாறுபட்ட] மனத்தால் விளைந்தது; மனம் எதனால் விலங்கிற்றெனில் மலங்குமாறு புலன்கள் ஐந்தும் வஞ்சனையைச் செய்தன; அதனால் மனம் விலங்கிற்று' என்று ஐம்புலனுடன் கூடிய மனக் கூட்டத்தைத் தலைமையாகக் கொண்ட கள்ளப்புலக்குரம்பையியல்பினைக் கூறியிருத்தற்காண்க.

எனவே, தூல உடம்பிற்குக் காரணமானது சூக்கும உடம்பென்பதும், அது 'கள்ளப்புலக்குரம்பை' என்று பெயர் பெறும் என்பதும், அவ்வுடம்பின் சிறந்த பகுதி மனம் என்பதும், அது ஐம்புல வஞ்சனையிற் சிக்கி மாறுபடாம லிருந்தால் கலந்த அன்பாகிக் கசிந்து உள்ளுருகும் பெருநலம்வாய்க்கும் என்பதும் அறிந்து மனத்தினைத் தூய்மையாக வைத்துக்கொள்ளப் பயிற்சி செய்து கொண்டால் அப்பயிற்சி மேல் நிலை செல்வதற்கு வாயிலாக இருக்கு மென்க.

பாட வேறுபாடு

''**போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்**'' (சிவ 85-86) என்பது அச்சுப்புத்தகங்கள் எல்லாவற்றிலும் பல ஏட்டிலும் உள்ள பாடமாகும். ஆனால், எனக்கு வீரசைவ ரொருவர் வீட்டிலிருந்து கிடைத்த ஏட்டில் ''**போற்றிப் புணர்ந் திருந்து**'' என்றே பாடம் இருக்கக் கண்டேன். இப்பாடம் திருவாசகத்துள் அத்துவித இலக்கணங்கூறும் புணர்ச்சிப்பத்தினை நினைவுறச் செய்தது.

வழிபடும் உடையவரை [இட்டலிங்கத்தினை] வேறாக வைத்து வழிபடாமல் கைத்தலத்திலேயே எழுந்தருளச் செய்து வழிபடலும், வழிபாட்டின்பின் உடையவரை வேறாக வைத்து விடாமல் உடம்பின் உத்தமாங்கத்திலேயே பூண்டுகொண் டிருத்தலும் அத்துவித உணர்விற்கு அடிகோலுமாதலின், அடிகளார் அப்புணர்ச்சிப்பத்துள்

''நீண்ட மாலும் அயனும் வெருவ
நீண்ட நெருப்பை விருப்பிலேனை
ஆண்டு கொண்ட என்னா ரமுதை
அள்ளூ றுள்ளத் தடியார்முன்

வேண்டுந் தனையும் வாய்விட் டலறி
விரையார் மலர்தூ உவிப்
பூண்டு கிடப்ப தென்றுகொல் லோவென்
பொல்லா மணியைப் புணர்ந்தே'' [3]

என்று கூறும் பாட்டினை நினைவுறச் செய்தது.

பொல்லா மணியைப் புணர்ந்து, மலர்தூவிப் பூசித்து, உடம்பினுள் சிறந்த அணிகலன் போல் பூண்டு கிடக்கும் பேற்றினை அடிகளார் விரும்பி நின்ற செய்தியை அப்பாட்டு புலப்படுத்திற்று.

இவற்றை யெல்லாம் கருதின் 'போற்றிப் புகழ்ந்திருந்து' என்ற பாடத்தைக் காட்டிலும் 'போற்றிப் புணர்ந்திருந்து' என்ற பாடமே தக்கதென்று கருதுகிறேன்.

அத்துவித வெண்பா (5)

உடையவரை ''மிகும் அன்பினால் பூசித்து அகலாமை யோகம்'' என்று கூறும்.

அரனேயோ என்றதின் கருத்து

'ஹரன்' என்னும் வடசொல் அரன் எனத்திரிந்தது. இச் சொல்லிற்கு அழிப்பவன் என்பது பொருளாகும். பிறவி அழிவை வேண்டுபவர், இறைவனை அரனேயோ என்று போற்றுதலைச் செய்வர் என்க. இக்கருத்தினை

''அரகர என்ன அரியதொன் றில்லை
அரகர என்ன அறிகிலர் மாந்தர்
அரகர என்ன அமரரும் ஆவார்
அரகர என்ன அறும்பிறப் பன்றே [916]

என்று திருமந்திரம் கூறும்.

89. 'நள் இருளில் நட்டம் பயின்று ஆடும் நாதனே'!

என்பது அறுபதாம் புராணம்.

நள் இருளிலும் என்று உம்மை விரிக்க.

"செறிந்த இருட்காலத்திலும் (உறங்காதிருந்து) இயக்கும் நடனத்தைப் பல நெறித்தாகப் பயின்று நடிக்கும் உலக நாதனே!" (எ–று)

'நள்ளிருள்' என்பது ஒவ்வொரு நாளிலும் உயிர்கட்கு நிகழும் உறக்க காலத்தையும், ஒவ்வொரு பிறவியிலும் நிகழும் உறக்கத்தை யொத்த சாக்காட்டுக் காலத்தையும். ஒவ்வொரு ஊழிக்கால முடிவில் நிகழும் பிரளய காலத்தையும் குறிக்கும்.

இறைவன் பகற்காலம் அன்றி, இம் மூன்று நள்ளிருட் காலத்தும் இயக்கும் நடனத்தைப் புரிந்துகொண்டிருப்பன் என்பது கருத்து.

சிலர், கடவுள் பிரளய காலத்திலே உலகத்தைத் தனக்குள் ஒடுக்கி வைத்துக்கொண்டு தானும் உறங்குவன் என்பர்.

அங்ஙனமின்றி, உயிர்கள் விழித்திருக்குங் காலத்தும் உறங்கும் காலத்தும். அவை உடம்புடன் கூடி இயங்குங் காலத்தும் சாக்காடெய்திய காலத்தும், அவை தனுகரண புவன போகங்களைப் பெற்றிருக்கும் திதிக்காலத்தும் தனுகரண புவன போகங்களைப் பெறாதிருக்கும் பிரளய காலத்தும், இறைவன் உறங்காநிலையில் உள்ளவனாய் இயக்கும் நடனத்தைச் செய்து கொண்டிருப்பன் என்பது சைவசமய அறிஞர் கண்ட உண்மை யாகும்.

அப்பர் 'உண்ணாது உறங்காது இருந்தாய் போற்றி' என்பர்.

அடிகளார் "கூரிருள் கூத்தொடு குனிப்போன் வாழ்க" (திருவண்–102) என்றும், "இரவுநின் றெரியாடிய எம்இறை" [அதிசய–3] என்றும் பொதுவாகக் கூறியதன்றி.

"உழிதரு காலும் கனலும் புனலொடு மண்ணும் விண்ணும்
இழிதரு காலமெக் காலம் வருவது வந்த தற்பின்
உழிதரு கால் அத்த" (திருச்ச–8)

என்று சிறப்பாகவும் கூறுதல் காண்க.

இறைவன், பிரளயத்திலும் ஐந்து தொழில்களைச் செய்வன் என்பதை,

மிருகேந்திர சூத்திரப் பொருளாக,

"ஒடுங்கிய பொழுதும் பாசம் ஒழிப்பவர்க் கொழித்திட்
டன்றி
விடுந்தகை யினரை விட்டு வினையினர் வினைப்பா
கஞ்செய்
தடங்கிய மாயா சத்தி தோன்றுதற் கமைத்தி யாவும்
படும்படும் முறையி ருப்பப் பார்த்துளன் பரம னன்றே"

என்று சதமணிமாலை கூறும்.

ஒடுங்கிய காலத்தில் (பிரளயத்தில்) பாசம் ஒழிப்பவர்க்கு ஒழித்திடலைப் 'போதயன்' என்றும் பந்தத்தில் விடுந்தகையினரை விடுதலை 'ருத்தன்' என்றும், வினையினர் வினையைப் பாகம் செய்தலைப் 'பாசயன்' என்றும், அடங்கிய மாயா 'சத்தி தோன்றுதற்கு அமைத்தலைப் 'பிரகுர்வன்' என்றும், யாவும் படும்படும் முறை இருப்பப் பார்த்தலைப் 'பச்யன்' என்றும் **சதரத்ன சங்கிரகம்** கூறும்.

எனவே, **இறைவன் நள்ளிருளிலும் உறக்கம் எய்தாமல் விழித்த நிலையிலே இருந்து செயலாற்றுகின்றான் என்பதாம்.**

அநுபூதி உரையாசிரியர் "நள்ளிருள்-மகாகேவலம்; மகாகேவலத்துள்ளிருந்து சூக்கும நடஞ்செய்யும் நாதனே" **என்பர்.**

90. தில்லையுள் கூத்தனே!

என்பது அறுபத்தொன்றாம் புராணம்.

இதற்கு இரண்டு பொருள் உள்ளன.

ஒன்று: உடம்பினுள்ளே தில்லை என்று குறிக்கப்படும் மூலமான இடத்தில் நின்று, உடம்பு புலன் அந்தக்கரணம் முதலியவற்றையெல்லாம் இயக்கிவிடும் கூத்தினைச் செய்பவனே என்பதாம்.

மற்றொன்று: உலகத்தே தில்லையென்று குறிக்கப்படும் நடுவான இடத்தில் நின்று, உலகப்பொருள்களை இயக்கி விடும் கூத்தினைச் செய்பவனே! என்பதாம்,

திருமூலர் உடம்பினுள் (பிண்டத்துள்) உயிர்ப்பின் [பிராணன்] கூறான இடைநாடிக்குரிய இடத்தை இமயம் என்றும், பிங்கலை நாடிக்குரிய இடத்தை இலங்கை என்றும், இவற்றின் நடுவாகிய சுழுமுனைக்குரிய இடத்தை மேரு என்றும் இம் மூன்றினுக்கும் மூலமான இடத்தைத் தில்லை என்றும் குறிக்கின்றார். இறைவன் இம்மூலமான இடத்தில் நின்று பிராண வாயுவை இயக்கிக் கைகால் முதலிய உறுப்புகளில் கலக்குமாறு செய்கின்றான் என்பர்.

அதனைப் போல, உலகத்தில் (அண்டத்தில்) இமயம், இலங்கை, மேரு இவற்றிற்கு மூலமான தில்லையம்பதியில் நின்று, உலகப் பெருங்காற்றை இயக்கி, உலகப் பொருள்களில் கலக்குமாறு செய்கின்றான் என்பர்.

மேற் கூறிய கருத்தினை,

"இடைபிங் கலைஇம வானோ டிலங்கை
நடுநின்ற மேரு நடுவாஞ் சுழுனை
கடவுந் திலைவனம் கைகண்ட மூலம்
படர்வொன்றி என்னும் பரமாம் பரமே" [2754]

"இருதயந் தன்னில் எழுந்த பிராணன்
கரசர ணாதி கலக்கும் படியே
அரதன மன்றினின் மாணிக்கக் கூத்தன்
குரவனாய் எங்கணும் கூத்துகந் தானே" (2761)

என்னும் **திருமந்திரப்** பாடல்களால் அறிக.

அடிகளாரும்

"சிறுநெறிகள் சேராமே திருவருளே சேரும்வணம்
குறியொன்றும் இல்லாத கூத்தன்றன் கூத்தையெனக்
கறியும் வண்ணம் அருளியவா றார்பெறுவா ரச்சோவே"

என்பர். (அச்சோ – 2)

90. தென்பாண்டி நாட்டானே!
என்பது அறுபத்திரண்டாம் புராணம்.

தென்னாடாகிய பாண்டியன் நாட்டினை உடையவனே! (எ-று)

பாண்டிய னாட்டை உடையவன் என்பதைத் "தென்னாடுடைய சிவனே போற்றி" [போற்றி-168] என்பதால் அறிக.

"பாண்டிப்பெரும்பதமே" [திருப்பாண்டி - 8] என்றும், "பாண்டி வெள்ளமே" [ஆனந்த - 7] என்றும் வருவனவற்றை நோக்கினால் 'பாண்டி' என்ற சொல் 'பெருமை' என்று பொருள் படுமாறு உணர்க. இது நல்ல தமிழ்ச்சொல்லாகும். இதனை அறியாதார் 'பாண்டவர் வழி வந்தவர் பாண்டியர்' என்று பிழைபடக் கருதுவர்.

91. அல்லல் பிறவி அறுப்பானே!

என்பது அறுபத்துமூன்றாம் புராணம்.

"துன்பத்தை உண்டாக்கும் பிறவியொடு உயிர்க்குள்ள தொடர்பினை அறுத்திடும் அரனே!" (எ-று)

அடிகளார் தாம் இறைவனிடம் பெற வேண்டுகின்ற சிறந்த பேற்றினைப் "பாருரு வாய பிறப்பற வேண்டும்" (எண்-1) என்றும்,

"வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ்வான் மனம் நின்பால்
தாழ்த்துவதும் தாமுயர்ந்து தம்மையெலாந் தொழவேண்டிச்
சூழ்த்துமது கரமுரலும் தாரோயை நாயடியேன்
பாழ்த்தபிறப் பறுத்திடுவான் யானுமுன்னைப் பரவுவனே"
[திருச்ச-16]

என்றும் கூறுகின்றனர்.

அப்பேற்றினையே இச்சிவபுராண முடிவில் தாம் வேண்டும் பயனாக அடிகளார் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர்

"பிறவி ஐவாய்அரவம் பொரும் பெருமான்" [நீத்-35]

என்றும்,

"என்னையுந்தன் இன்னருளால் இப்பிறவி ஆட்கொண்டு இனிப்பிறவாமே காத்து"! (திருவம்-12)

என்றும்,

"கறங்கோலை போல்வதோர் காயப்பிறப்போ டிறப்பென்னும்
அறம்பாவ மென்றிரண் டச்சந் தவிர்த்தெனை
ஆண்டுகொண்டான்"

(திருத்தெள்-6) என்றும் கூறுவதறிக.

"என் துன்பப் பிறவி அறுக்குமோ? நாதனே! என்று ஓலமிட்டு" என்பது **அநுபூதி உரை**.

என் அல்லற் பிறவியை அறுப்பவன் நீயன்றி வேறொருவரும் இல்லை என்ற தெளிவாலும், அதனை அறுத்துவிட வேண்டும் என்ற உட்கருத்தாலும் 'அல்லற் பிறவி அறுப்பானே, என்று இறந்த காலத்தால் கூறினார்.

"உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற மெய்யா! அல்லற் பிறவி அறுப்பானே! என்று முதற்புராணத்தையும் இறுதிப் புராணத்தையும் சேர்த்து ஓதுக.

91-92. ஓ என்று சொல்லற்கு அரியானை சொல்லி என்பது,

"ஓங்கார மெய்யா ஓ என்று............அல்லற்பிறவி அறுப்பானே ஓ என்று, இவ்வாறு சொல்லற்கு அரியானை இப்புராண மொழிகள் ஒவ்வொன்றாலும், ஓலமிட்டுச் சொல்லி" (எ-று)

இனி இப்புராண மொழிகட்கு முடிவு கூறி, இப்புராணத்தை ஓதினார்க்கு உண்டாகும் மறுமைப் பயனையும் தெளிவு பற்றிக் கூறத் தொடங்குகின்றார்.

'ஓ' என்பது ஓலமிடுஞ் சொல்.

'ஓங்கார மெய்யா' எனத் தொடங்கும் ஒவ்வொரு விளிகட்கும் இச் சொல் முடிக்குஞ் சொல்லெனக.

ஓ என்பதையும், என்று என்பதையும், தனித் தனி விளித் தொடர்கள் ஒவ்வொன்றிலும் கூட்டிக்கொள்க.

இறைவனை அவன் திருவடிக்கண் நின்று அழைத்து ஓலம் இடுதலை

அடிகளார்

"காலன் ஆருயிர் கொண்டபூங் கழலாய்
கங்கை யாய்அங்கி தங்கிய கையாய்
மாலும் ஓலமிட் டலறும்அம் மலர்க்கே
மரக்க ணேனையும் வந்திடப் பணியாய்"

(செத்திலா 9) என்றும்,

"வேதம் நான்கும் ஓலமிட்டு உணங்கும்" [திருச்ச–75]

என்றும் கூறுவர்.

இறைவனை நோக்கிப் பாடும் பொழுது இடைஇடையே ஓலமிடும் வழக்கத்தை

"ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மையாட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்"

(திருவம்–5) என்னும் பாட்டால் அறிக.

திருமூலரும்

"ஆனின் றழைக்கும் அதுபோல்என் நந்தியை
நானின் றழைப்பது ஞானங் கருதியே" (30) என்பர்.

92, 93 திரு அடிக்கீழ்ச் சொல்லிய பாட்டு என்பது,

"[திருப்பெருந்துறையில் ஞானாசிரியனாய் எழுந்தருளி வந்த இறைவன் பிரிவின்கண் வழிபட்டு ஆற்றியிருக்குமாறு கொடுத்துச் சென்ற] திருவடி நிலைக் கீழிருந்து அவ்விறைவனை விளித்து 'ஓ' என்று ஓலமிட்டுச் செவியுறை யாகக் கூறிய இச் *சிவபுராணப் பாட்டினை*" [எ–று]

'பாட்டுஉரை நூலே வாய்மொழி பிசியே
அங்கதம் முதுசொல்'. [தொல்–செய்]

என்னும் எழுவகைச் செய்யுளில் பாட்டு என்று கூறப்பட்டு,

"நெடுவெண் பாட்டே குறுவெண் பாட்டே
கைக்கிளை பரிபாட்டு அங்கதஞ் செய்யுளொடு
ஒத்தவை யெல்லாம் வெண்பா யாப்பின"

(தொல் - செய்– 114) என்ற நூற்பாப்படி அமைந்த செய்யுள் என்னும் வெண்பாப்பாட்டே இச்சிவபுராணப் பாட்டெனக.

இறைவன் ஞானாசிரியனாய் எழுந்தருளி வந்து அடிகளார்க்கு உபதேசித்துவிட்டுப் பிரிந்து சென்றார் என்ற செய்தியைப் பெரும்பற்றப் புலியூர் நம்பி திருவிளையாடற்புராணம் கூறுகின்றது. அப்பிரிவின்கண் முதற்கண் ஓதப்பட்ட **கோயிற் பதிகத்தில்** ஒன்பதாம் பாட்டில் **அடிகளார்.**

"தீதிலா நன்மைத் திருவருட் குன்றே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாதுநீ போவதோர் வகையெனக் கருளாய்
வந்துநின் இணையடி தந்தே" [9]

என்று இறைவன் இணையடி தந்து பிரிந்து சென்ற செய்தியைத் தெளிவாகக் கூறுதலைக் காண்க.

93, 94, 95, பொருள் உணர்ந்து சொல்லுவார் செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன் அடிக்கீழ் பல்லோரும் ஏத்தப் பணிந்து

என்பது,

"இச் சிவபுராணப் பாட்டின் உண்மைப் பொருளைக் கருதி உணர்ந்து, செப்பலோசையாற் சொல்லுவார், சிவ நகரத்தின் நடுவிடத்தே பொருந்தியிருக்கும் [திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும்] சிவபெருமானுடைய திருவடியின் கீழிடத்தே பலரும் பணிந்து ஏத்துமாறு சிவானுபூதியிற் சென்று நிலை பெறுவர். [எ–று]

சிவபுரம் – சிவநகரம்

சிவஞான தீபம் "பராபரையே சிவலோகம் பரனுக்காமே" (36) என்று கூறுவதால், தூய திருவருள் வெளியே சிவலோகம் என்க. அச்சிவலோகத்தின் நடுவிடத்தே உள்ள பரவெளியே சிவநகரம் என்க.

அடிகளார் "உடலிது களைந்திட் டொல்லை உம்பர்தந் தருளு போற்றி" (திருச்ச-64) என்றும், "வீடுதந் தருளு போற்றி" (திருச்ச–100) என்றும், "பத்தியாய் நினைந்து பரவுவார் தமக்குப் பரகதி கொடுத்தருள் செய்யும் சித்தனே" (அருட். 8) என்றும் கூறுவதால், அவர் மறுமைப் பேற்றை உம்பர், வீடு, பரகதி என்கின்ற சொல்லால் வழங்குகின்றார் என்பது புலனாகும்.

மேலும் அவர்,

"முத்தி தந்திந்த மூவுலகுக்கும் அப்புறத் தெமைவைத்திடும் அத்தன்" [சென்னி–6] என்று கூறுவதால் அவர் கருதியுள்ள மறுமைப் பேறு, பாதலம், மண்ணுலகம், விண்ணுலகம் என்னும் மூன்றுலகத்திற்கும் அப்பாற்பட்ட தென்பது அவர் கருத்தென்க.

அதனை அவர் சிவலோகம் என்றும், அவ்வுலகத்திலுள்ள சிவபுரம் அல்லது, சிவநகரம் என்றும் கூறுகிறார். அது எல்லா உலகத்திற்கும் மேற்பட்ட தென்க. எனவே உயர்ந்தவற்றுக் கெல்லாம் உயர்ந்தது **'சிவபுரத்தின் உள்ளார் சிவனடி'** என்பது பெறுதும்.

திருவள்ளுவரும்

"யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்" [346]

என்பர்.

சேக்கிழார் கூறும் வீடு பேறு

பெரிய புராணத்துள் சேக்கிழார், அறுபான் மும்மை நாயன் மார்களெல்லாம் தத்தம் தகுதிக்கேற்பவெவ்வேறான வீடு பேற்றைப் பெற்றதாகக் கூறுகிறார்.

திருநீலகண்டர் முதலியோர் சிவலோகம் பெற்றார் என்றும், மூர்க்க நாயனார் முதலியோர் சிவபுரம் புக்கார் என்றும், அமர்நீதிநாயனார் முதலியோர் இறைவன் முன் தொழுது வாழ்ந்திருக்கும் பேறு பெற்றார் என்றும், மெய்ப் பொருள் நாயனார் முதலியோர் வானவர்கட்கெட்டா அருட் கழல் நீழல் பெற்றார் என்றும், சண்டேசுரநாயனார் மட்டும் தனிப்பதம் பெற்றார் என்றும், இவர்களுக்கு மேலாகத் திருஞானசம்பந்தப் பெருமான் மட்டும் சோதிபுக்கு இறைவ னுடன் ஒன்றி உடனானார் என்றும் கூறியுள்ளார்.

ஆகமங்கள் கூறுவன

சிவாகமங்கள் அடியவர் பெறும் பேற்றினைச் சாலோகம் என்றும், சாமீபம் என்றும், சாரூபம் என்றும், சாயுச்சியம் என்றும் நான்கு வகையாகக் கூறும்.

அருள்நந்தியார் கூறுவது

"இருவினைச் செயல்கள் ஒப்பின் ஈசன்றன் சத்தி தோயக்
குருவருள் பெற்று ஞான யோகத்தைக் குறுகி முன்னைத்
திரிமலம் அறுத்துப் பண்டைச் சிற்றறி வொழிந்து ஞானம்
பெருகிநா யகன்றன் பாதம் பெறுவது சுத்தமாமே."

[சிவஞானசித்தி சுபக்கம்-230] என்னும் பாட்டில் அவர் இறைவன் திருவடியைப் பெறுதலே சுத்தநிலை என்பர். இப்பாட்டின் உரையில் "இறைவன் திருவருளைக் கூடுதல் சுத்தம்" என்று உரைப்பர் சிவஞான முனிவர்'. திருவடியும் திருவருளும் ஒன்றென்பது இவர் கருத்தாகும்.

மாணிக்கவாசகர் பெற விரும்பியது

இங்ஙனம் வீடுபேறு பலவகையாகக் கூறப் பெறினும் அடிகளார், பெற விரும்பிய வீடுபேறு எது என்பதைப் பார்ப்போம்.

அடிகளார்

"செடிசே ருடலைச் செலநீக்கிச் சிவலோ கத்தே
நமைவைப்பான்
பொடிசேர் மேனிப் புயங்கன்றன் பூவார் கழற்கே
புகவிடுமே" [யாத்-4]

என்றும்,

"திருமா மணிசேர் திருக்கதவம் திறந்த போதே சிவபுரத்துத்
திருமால் அறியாத் திருப்புயங்கன் திருத்தாள் சென்று
சேர்வோமே" [யாத்-4]

என்றும், கூறுவதால்

இச்சிவபுராணத்தைப் பொருளுணர்ந்து [இது அறிவின் தொழில்], சொல்லுவார் [கன்மேந்திரியமாகிய வாயின் தொழில்], சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ச் செல்வர் என்பதையே அடிகளார் **முடிந்த மறுமைப் பயனாக்** கூறியுள்ளார்.

சிந்தை மகிழ்தலும், முந்தை வினைமுழுதும் மோய்தலும் இம்மைப் பயனாகும் என்பது முன்னே கூறப்பட்டுள்ளது.

பிற சான்றோர் கருத்து.

திருவள்ளுவர்

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர்? நீந்தார்;
இறைவன் அடிசேரா தார்"

என்பர் வீடொன்று பாயிரத்துள்.

நம்மாழ்வார்

"எம்மா வீட்டுத் திறமும் செப்பம்உன்
செம்பா பாத பற்புத் தலைசேர்த்து ஒல்லை"

என்று கூறுவர்.

திருமூலர்.

“விரும்பில் அவனடி வீர சுவர்க்கம்
பொருந்தில் அவனடி புண்ணிய லோகம்
திருந்தில் அவனடி தீர்த்தமு மாகும்
வருந்தி அவனடி வாழ்த்தவல் லார்க்கே”
“திருவடி யேசிவ மாவது தேரில்
திருவடி யேசிவ லோகஞ் சிந்திக்கில்
திருவடி யேசெல் கதியது செப்பில்
திருவடி யேதஞ்சம் உள்தெளி வார்க்கே” (திருமந்-138)

என்று கூறுகின்றார்.

வீரசைவரின் பேறு:- வீரசைவ சித்தாந்த நெறியினர் சதாசிவ வடிவாகிய தம் இட்டலிங்கத்தினைச் சத்தியோசாதமுகத்தில் பூசிப்பவராவர். சத்தியோசாதம் சதாசிவ மூர்த்தியின் ஐந்து முகங்களில் ஒன்றாகவும், அம் மூர்த்தியின் திருவடியாகவும் கூறப்படுதலால் திருவடியே அவர்க்குப் பேறென்க.

சிவா திருச்சிற்றம்பலம்

சிவ புராணச் சிற்றுரை

முற்றும்.

பிற்சேர்க்கை - 1

சிவபுராண யாப்பு

திரு. அடிகளாசிரியர்

தோற்றுவாய்

திருவாசகத்தில் சிவபுராணப் பாட்டு, தொல்காப்பியர் கூறியுள்ள எழுநிலத்தெழுந்த செய்யுள்களில் பாட்டு என்னும் செய்யுள் வகையைச் சார்ந்தது. இது தொண்ணூற்றைந்து அடிகளை உடையது. இப்பாட்டில் ஈற்றடிமட்டும் முச்சீர் பெற்ற சிந்தடியாகும். ஏனைய அடிகளெல்லாம் நாற்சீர் பெற்ற அளவடிகளே.

சிவபுராண யாப்பினைப் பற்றிய பலர் கருத்து

இச்சிவபுராணப் பாட்டினைப் பல திருவாசகப் பிரதிகள் **'சிவபுராணத்தகவல்'** என்றே குறிப்பிடுகின்றன. அன்றித் திருவாதவூரர் புராணமும் **'அகவல்'** என்றே குறிப்பிடுகின்றது. திருவாசகப் பதிக வரிசை கூறும் வெண்பா அந்தாதியும்

''திருவகவல் நான்கின் திறங்கேளாய் நெஞ்சே''

என்று சிவபுராணம் முதலிய நான்கினையும் 'திரு அகவல்' என்றே கூறுகின்றது.

ஆனால், வேறு சிலர் அறிஞர் இப்பாட்டு அகவல் அன்று; கலிவெண்பாவே ஆகும் என்று கூறுகின்றனர்.

சிவபுராணம் அகவலும் அன்று; கலிவெண்பாவும் அன்று;

இச்சிவபுராணம் முற்றிலும் இயற்சீர் விகற்பத்தால் வந்த வெண்டளைகளையும், வெண்சீர் ஒன்றிவந்த வெண்டளை களையும் பெற்று ஈற்றடி பிறப்பு என்னும் அசைச்சீரால் முடிதலின் இது அகவலன்று என்பது தேற்றமாகும்.

ஆனால், இச்சிவபுராணப் பாட்டில் அடிகளார் இறைவனை உளங்கனிய அழைத்துப் (அகவிப்) புகழ்கின்றார். இவ்வாறு அழைத்துப் பேசுகின்றமையின் முன்னோர் திருவாசகத்துள் இப் பகுதியை அகவல் என்று கொண்டனரோ என்பதும் கருத வேண்டியுள்ளது என்பர் தஞ்சாவூர் பள்ளி அகரப் பேரறிஞர் நீ. கந்தசாமிப்பிள்ளை அவர்கள் (அவர்கள் திருவாசகப்பதிப்பு).

இவர்கள் கூறுவது கருதத்தக்கதொன்றாகும், "அகவல் என்பது அழைத்தலுமாகும்" என்று பிங்கல நிகண்டு கூறுவதாலும், சங்க இலக்கியங்களில் அகவல் என்பது அழைத்தற் பொருளில் வருதலானும், தொல்காப்பியர் "ஏனையொன்றே தேவர்ப்பராஅம் முன்னிலைக் கண்ணே" (தொல். செய். 133) என்னும் நூற்பாவால் தெய்வத்தை முன்னிலைப்படுத்தி அழைத்துப் பரவும் வழக்கத்தைக் குறிப்பிடுதலானும், தெய்வத் திருநூலாகிய திருமுருகாற்றுப்படை,

"... ... ... காண்டக
முந்துநீ கண்டுழி முகனமர்ந் தேத்திக்
கைதொழுஉப் பரவிக் காலுற வணங்கி
... ...
அறுவர் பயந்த ஆறமர் செல்வ!
ஆல்கெழு கடவுட் புதல்வ! மால்வரை
மலைமகள் மகனே! மாற்றோர் கூற்றே!
... ...
போர்மிகு பொருந! குரிசில்! எனப்பல
யான்அறி அளவையின் ஏத்தி" (250-276)

என்று கூறும் பகுதியால் அவ்வழக்கத்தைத் தெளிவாகப் புலப் படுத்துதலானும். இச்சிவ புராணம் இறைவனை முன்னிலைப் படுத்தி அழைத்துப் பரவும் பொருளால் அகவலாகும்; யாப்பால் அகவலன்று.

கட்டுவிச்சி தெய்வத்தை அழைத்துப் பரவும் பாட்டிற்கு அகவல் என்றே பெயரிருத்தலை,

"அகவன் மகளே பாடுக பாட்டே" (குறுந். 23)

என்பதால் அறிந்து கொள்ளலாம்.

இச் சிவபுராணம் அகவல் போல் அடிநிமிர்ந்து வருதலால், சிலர் அகவலென்றே மயங்கக் கருதினர் போலும். அடுத்துச் சிவபுராணப் பாட்டு கலிவெண்பாவா? என்பதையும் பார்ப்போம்.

"அந்நிலை மருங்கின் அறமுத லாகிய
மும்முதற் பொருட்கும் உரிய என்ப"
(தொல். செய். 102)

"வாழ்த்தியல் வகையே நாற்பாக்கு முரித்தே"
(தொல். செய். 105)

என்னும் தொல்காப்பிய நூற்பாவின் பொதுவிதிப்படி ஆசிரியம் வஞ்சி வெண்பா கலிப்பா என்னும் நான்கு பாக்களும் அறம் பொருள் இன்பம் என்னும் மூன்று முதற்பொருளிலும், வாழ்த்தியற் பொருளிலும் வரும்.

"நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்
கலியே பரிபாட் டாயிரு பாவினும்
உரிய தாகும் என்மனார் புலவர்" (56)

என்று கூறியுள்ள சிறப்பு விதியின்படி, அகத்திணை பற்றிய புலனெறி வழக்கிற்குக் கலிப்பாவும் பரிபாடலும் சிறந்தனவாம்.

இளம்பூரணர் செய்யுளியல் 126 ஆம் நூற்பாவுரையில்.

"இருவயி னொத்தும் ஒவ்வா இயலினும்
தெரியிழை மகளிரொடு மைந்தரிடை வரூஉம்
கலப்பே யாயினும் புலப்பே யாயினும்
ஐந்திணை மரபின் அறிவுவரத் தோன்றிப்
பொலிவொடு புணர்ந்த பொருட்டிற முடையது
கலியெனப் படூஉங் காட்சித் தாகும்"

என்று **அகத்தியனார்** ஓதுதலின், கலிப்பா அகப்பொருளென வழங்கும்" என உரைத்தலால், கலிப்பா அகப்பொருட்கே சிறந்ததென்று தெரிகின்றது.

குறிப்பு:- வச்சணந்திமாலையும் "தூய, அகப்பொருண்மேலன்றி அருங்கலிகள் வாரா" என்று (44) கூறும்.

மேலும், தொல்காப்பியர் செய்யுளியலில் கலிப்பாவிற்கு இலக்கணம் கூறும் பொழுது கலிப்பா அகப்பொருள் பற்றி வரும் என்ற அதிகாரம் எல்லாக் கலிப்பாவிற்கும் வருதலால், அவ்வதிகாரத்தை வண்ணக வொத்தாழிசைக் கலிப்பாவிற்கும் அதன் இழிபாகிய கொச்சக ஒரு போகிற்கும் அம்போதரங்கத்திற்கும் மாற்ற வேண்டி, அம்மூன்றும் தேவர்ப்பராவும் பொருளில் வரும் (செய். 133) என்று கூறியுள்ளார்.

அவ்வாறு கூறவே, ஏனைய கலிப்பாக்களெல்லாம் முன்னைய விதிப்படி அகப்பொருளே பற்றி வரும் என்பதாயிற்று. எனவே, அவற்றுள் ஒன்றாகிய கலிவெண்பாவும் அகப்பொருள் பற்றி வருவதாயிற்று.

மேற்கூறியவாறு அகப்பொருள் பற்றி வரும் கலிப்பாக்களுள் கலிவெண்பாவிற்குத் தொல்காப்பியர்,

"ஒரு பொருள் நுதலிய வெள்ளடி யியலால்
திரிபின்றி முடிவது கலிவெண் பாட்டே" (செய். 147)

என்னும் நூற்பாவால் இலக்கணம் கூறியுள்ளார்.

இந்நூற்பாவிற்கு இளம்பூரணர் "ஈற்றடி யளவும் ஒரு பொருளைக் குறித்து, வெள்ளடி யியலால் திரிபின்றி முடிவது கலிவெண்பாட்டாம்" என்று உரை எழுதி "மரையா மரல்கவர" (6) என்ற கலித்தொகைப் பாட்டினை எடுத்துக்காட்டி, இது வெண்டளையான் வந்த வெண்கலிப்பா என்றனர்.

அவர் மேலும் "அஃதேல், இது நெடுவெண்பாட்டிற்கு ஓதிய இலக்கணத்தால் வருதலில் பஃறொடை வெண்பாவாம்; இதனை வெண்கலிப்பா என்றதென்னை எனின், என்று வினாவிக் கொண்டு, புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் எனவும், கைக்கிளை, பெருந்திணை எனவும் சொல்லப்பட்ட காமப்பொருள் ஏழனுள்ளும் யாதானுமொரு பொருளைக் குறித்து ஏனைக் கலிப்பாக்கள் போலத் தரவும் தாழிசையும் தனித்தனி பொருளாக்கிச் சுரிதகத்தால் தொகுத்து வரு நிலைமைத்தன்றித் திரிபின்றி முடிவதனைக் கலி வெண்பா எனவும், புறப்பொருட்கண் வரும் வெண்பாக்களைப் பஃறொடை வெண்பாஎனவும் கூறுதல் இவ்வாசிரியர் கருத்தென்க" என்று கூறியுள்ளார்

இவர் இவ்வாறு கூறுவதைக் கருதினால், கலிவெண்பா ஒரு பொருள் நுதலிய அகப்பொருள் மேல்தான் வரும் என்பது புலனாகின்றது. கலித்தொகையில் வந்துள்ள கலிவெண்பா எல்லாம் அகப்பொருட் பாட்டாகவே உள்ளன.

இச்சிவபுராணம் முற்றிலும் வெண்பா யாப்பாகவே வந்து இறுதி வெண்பா இயலால் முடிந்தாலும், அகப்பொருள் மேலதாய் வராமல், புறப்பொருட்கண் தெய்வத்தை முன்னிலைக் கண் வைத்துப் பரவும் துறையில் வந்துள்ளதால் கலிவெண்பா அன்று; இஃது ஒருவகை வெண்பா யாப்பினை உடைய பாட்டாகும் என்றே கருத வேண்டியுள்ளது.

இச்சிவபுராணம் கலிவெண்பா அன்றாயின், ஓர்வகை வெண்பாவே ஆயின், இஃது எந்தவகையான வெண்பாவின் பாற்படும் என்று வினா எழுகின்றது. அவ்வினாவிற்கு விடையைக் கீழே தருகின்றேன்.

சிவபுராணம் அறுவகை வெண்பாவுள் செய்யுள் வெண்பா என்பது

தொல்காப்பியர் செய்யுளியலில் வெண்பாவகைகளை

''நெடுவெண் பாட்டே குறுவெண் பாட்டே
கைக்கிளை பரிபாட்டங்கதஞ் செய்யுளொடு
ஒத்தவை யெல்லாம் வெண்பா யாப்பின''(114)

என்ற நூற்பாவினால் கூறியுள்ளார். ''நெடுவெண்பாட்டும் குறு வெண்பாட்டும் கைக்கிளையும் பரிபாடலும் அங்கதமும் செய்யுளும் ஆகிய ஆறும் தம்மின் ஒத்து வெண்பா யாப்பினவாய் வரும் என்பது மேல் நூற்பாவின் பொருளாகும்.

இவ்வாறு மேற்கூறப்பட்டுள்ள அறுவகை வெண்பாக்களில் செய்யுள் வெண்பாவை அங்கதத்தின் பின் வைத்து ஆசிரியர் ஓதி யுள்ள முறையை அறிஞர் கருதி உணர்க.

இந்நூற்பாவில் நிறுத்த முறையானே அங்கதவெண்பாவை உணர்த்திய பின்னர், செய்யுள் வெண்பாவின் சிறப்பிலக் கணத்தை ஆசிரியர் கீழ்வருமாறு ஓதுகின்றார்.

''செய்யுள் தாமே யிரண்டென மொழிப''
''புகழொடும் பொருளொடும் புணர்ந்தன் றாயின்
செவியுறைச் செய்யுள் என்மனார் புலவர்''

"வசையொடும் நகையொடும் புணர்ந்தன் றாயின்
அங்கதச் செய்யுள் என்மனார் புலவர்"
(செய், 123, 124 125) என்பவை அந்நூற்பாக்களாகும்

"அறுவகை வெண்பாக்களுள் ஈற்றிற் கூறிய செய்யுள் வெண்பாத்தாமே இரண்டு வகை எனக் கூறுவர் புலவர்" (123)

"ஒரு தலைவனைப் புகழ்ந்து கூறும் புகழுரையொடும் அவனுக்கு அறிவுறுத்தும் உண்மைப் பொருளொடும் கூடியதாக வரின், அது அத்தலைவனுடைய செவியில் அறிவுறுத்தும் செவி யுறைச் செய்யுள் வெண்பாவாகும். (124)

குறிப்பு: இது "பொங்குதலின்றி" (செய். 110) என்ற அடி களால் கூறப்பட்ட செவியறிவுறூஉவில் வேறுபட்டதென்க.

"நண்பாயிருப்பார் தீநெறி ஒழுகின் அவரைத் திருத்துதற் காக இடித்துரை கூறும் வசையொடும் அவர் மேல் தமக்குள்ள பற்றினைப் புலப்படுத்தும் நகை மொழியொடும் கூடிவரின் அங்கதச் செய்யுள் வெண்பா என்பர் புலவர் (125)

குறிப்பு: இது, மேற்கூறிய செம்பொருள்' கரந்தது என்ற இரு வகை அங்கதங்களிலும் வேறுபட்டதென்க. அவை நகை யின்றிக் கூறப்படுவன. இது நகையுடன் கூறப்படுவதென்று வேறுபாடறிக.

தொல்காப்பியர் "செய்யுள் தாமே இரண்டென மொழிப" (123) எனக் கூறியதன்றி, அவ்விரண்டிற்கும் செய்யுள் என்னும் சொல்லைப் பெய்து, செவியுறைச் செய்யுள் அங்கதச் செய்யுள் என ஓதியுள்ள கருத்தினை ஓர்ந்துணர்க.

தொல்காப்பியர் அளவியல் என்னும் உறுப்பில் மேலே கூறி யுள்ள பாக்களுக்கு அளவு கூறுமிடத்தே நெடுவெண்பாட்டுப் பன்னிரண்டடி காறும் வரும் என்றும், குறுவெண்பாட்டு இரண்டடியாயும் வரும் என்றும், அங்கதவெண்பாவிற்குச் சிறுமை இரண்டடியாயும் வரும் என்றும், அங்கதவெண் பாவிற்குச் சிறுமை இரண்டடியாயும் பெருமை பன்னிரண்டடியாயும் வரும் என்றும், ஆனால் கலிவெண்பா, கைக்கிளை வெண்பா, செய்யுள்வெண்பா, செவியறிவுறூஉ வாயுறை வாழ்த்து

புறநிலை வாழ்த்து என்னும் இவற்றிற்கு அடிவரையறை கூறப் படா; பொருள் முடியுங்காறும் வேண்டிய அடிகளைப்பெற்று வருமென்றும் கூறுகின்றார். இங்கே செய்யுள் வெண்பாவிற்கு அடிவரையறை இல்லை என்று கூறப்படுவதால். நெடுவெண் பாவிற்கோதிய பன்னிரண்டடிக்குமேல் பொருண்முடியுங்காறும் வேண்டிய அடியால் அது வரப்பெறும் என்பதாயிற்று.

செய்யுள் வெண்பா உரையாசிரியர்களால் மறைக்கப்பட்டதாயிற்று

தொல்காப்பியர் செய்யுளியல் 114, 123, 124, 125, 153 என்னும் ஐந்து நூற்பாக்களால் எடுத்தோதிய செய்யுள் வெண்பாவின் இலக்கணத்தை **இளம்பூரணரும் நச்சினார்க்கினி யரும்** மேற்கண்ட நூற்பாக்களுக்கு **வேறு உரை கூறி மறைத்தே விட்டனர்.**

பேராசிரியர் அம்மறைப்பைத் தம் மறுப்பினால் புலப்படுத்தினர்

ஆனால், பேராசிரியர் இளம்பூரணரைப் போலவே மேற்கண்ட நூற்பாக்களுக்கு வேறு உரை கூறினாலும், தம் மறுப்புரை ஒன்றால் செய்யுள் வெண்பா என ஒன்றிருந்தது என்பதைப் புலப்படுத்தி விட்டார். **அரிய செய்தி ஒன்றினைத் தம் மறுப்புரையால் வெளிப்படுத்திவிட்ட அவர்க்கு நாம் நன்றி செலுத்தக்கடமைப்பட்டுள்ளோம்.**

அவர் மறுப்புரை வருமாறு

"அங்கதச்செய்யுள். என்பது பண்புத்தொகை. **உம்மைத் தொகை என்பார் அங்கதச் செய்யுள் என்பதும், செய்யுள் என்பதும் வேறு என்ப.** அதற்கு விடை முன்னர்ச் சொல்லுதும்" என்று 'நெடுவெண் பாட்டே' (பேரா, செய் 118) என்னும் நூற்பாவுரை யில் கூறி, "செய்யுள் தாமே யிரண்டென மொழிப" (பேரா. செய். 127) என்னும் நூற்பாவுரையில்.

இனி ஒருவன் உரை : "இவற்றுள் தொகைச் சூத்திரத்துள் கைக்கிளை பரிபாட்டங்கதஞ் செய்யுள்" எனப்பாடம் ஓதி அங்கதமும் செய்யுளுமென இரண்டாக நிறுத்தான்; நிறுத்த முறையானே அங்கதம் உணர்த்திச் செய்யுள் உணர்த்திய செய்யுள் தாமே இரண்டென மொழிப என விதந்தான் என்பது' என்று அவ்வுரையைக் கூறிக் கொண்டு, மறுப்புரை கூறுகின்றார்.

மறுப்புரை

அற்றன்று: எல்லாப்பாட்டும் செய்யுள் எனப்படுதலின் அவற்றுள் ஒன்றனையே செய்யுள் எனல் ஆகாது;

அல்லதூஉம் "அங்கதச் செய்யுள் என்மனார் புலவர்" (தொல் செய். பேரா. 129) என இனி வருகின்ற சூத்திரத்து ஓதுமாதலான் இவையும் (இவ்விரண்டும்) அங்கதச் செய்யுளே, மேலைச்சூத்திரத்துள்ளும் (செய். பேரா. 118) அங்கதச் செய்யுள் என்பதே பாடம் என்பது. அதனாற் (அங்கதச்செய்யுள் என்மனார் 'புலவர் என்று கூறியதனால்) பெறுதும் என்பது' என்று மறுப்புரை வழங்கியுள்ளார்.

பேராசிரியர் இவ்வாறு கூறிமறுத்தாலும், 'செய்யுள்' என்று தொல்காப்பியர் கூறும் வெண்பா பண்டு இருந்திருக்கிறது என்பதை

'ஏழடி இறுதி ஈரடி முதலா
ஏறிய வெள்ளைக் கியைந்தன அடியே
'மிக்கடி வருவது செய்யுட் குரித்தே'
"சங்க யாப்பு"
ஆறடி முக்காற் பாட்டெனப் படுமே
ஏறிய அடியும் செய்யுளுள் வரையார்
'நூற்பெயர் தெரியாதது'
(யா.வி.கழ.பக். 132, 133, 251)

என வரும் யாப்பருங்கல விருத்தி மேற்கோள் நூற்பாக்களால் அறியப்படுகின்றது.

மேற்காட்டிய நூற்பாக்கள் வெண்பாவின் அடிச்சிறுமை பெருமைகளை உணர்த்த, விருத்தி ஆசிரியரால் மேற்கோளாக எடுத்து காட்டப்படுகின்றன.

"இரண்டடி முதலாக ஏழடி இறுதி வெண்பாவிற்குரிய அடிகளாகும். ஏழடியில் மிக்க அடிவருவது செய்யுள் என்னும் வெண்பாவிற் குரித்து"

"ஆறடி முக்கால் (ஏழடி) வெண்பாட்டிற்குரிய அடியாகும் ஏழடிக்குமேல் ஏறிய அடியும் செய்யுள் வெண்பாவில் நீக்கார்" என்பன மேற்காட்டிய நூற்பாக்களுக்குரிய பொருளாகும்.

மேற்குறிப்பிட்ட நூற்பாக்களால், செய்யுள் என்னும் பெயருடைய வெண்பாவகை பண்டு இருந்ததென்னுஞ் செய்தி புலனாவதால் பேராசிரியரின் முதல் மறுப்பு ஏற்றதாகத் தெரிய வில்லை.

'அல்லதூஉம்', அங்கதச் செய்யுள் என்மனார் புலவர்' என வருகின்ற சூத்திரத்து ஓதுமாகலின் (செய். பேரா. 129) இவையும் அங்கதச்செய்யுளே என்று, மற்றொரு மறுப்பையும் பேராசிரியர் கூறுகின்றார்.

அவர் இவையும் என்று குறித்தது, 'செய்யுள் தாமே இரண்டென மொழிப' என்ற நூற்பாவினால் கூறப்பட்டுள்ள இரண்டினையாகும். அவர் கூறுகிறபடி, இரண்டும் அங்கதமாயின், ஒன்றைச் செவியுறைச் செய்யுள் என்றும், மற்றொன்றை அங்கதச்செய்யுள் என்றும், கூறுவது பொருந்தாதென்க. மேலும் அவர் மேலைச் சூத்திரத்துள்ளும் (செய்.பேரா. 118) (அங்கதஞ் செய்யுள் என்பது பாடமாகாமல்) அங்கதச் செய்யுள் என்பதே பாடமென்பதூஉம் அதனால் பெறுதுமென்பது என்று கூறுகிறார். அவர் அவ்வாறு கூறுவதின் கருத்தென்னை எனின்? செய்யுள் வகை இரண்டில் ஒன்றை அங்கதச் செய்யுள் என ஓதியதால் முன்னே உள்ள தொகைச் சூத்திரத்தில் (செய். பேரா. 118) அங்கதஞ் செய்யுள் என உம்மைத் தொகையாகப் பாடங் கொள்ளாமல் அதனையும் அங்கதச் செய்யுள் எனப் பண்புத் தொகையாகவே பாடங்கொள்ள வேண்டும் என்பதாம். இதுவும் பொருந்துமாறில்லை. என்னை எனில்? இங்கே செவியுறைச் செய்யுள் அங்கதச்செய்யுள் என்பன பண்புத்தொகை நடையில் உள்ளன. தொகைச் சூத்திரம் (118) நெடுவெண்பாட்டும் குறுவெண்பாட்டும் கைக்கிளையும் பரிபாட்டும் என்னும் இவை உம்மைத்தொகை நடையாக இருத்தலின், இவற்றை அடுத்த அங்கதமும் செய்யுளும் 'அங்கதஞ் செய்யுள்' என உம்மைத் தொகையாகவே அமையும் என்க.

இதனைப்போலவே, அளவியலில் வரும் கலிவெண்பாட்டே' (153) என்னும் நூற்பாவுள் "கலிவெண்பாட்டும் கைக்கிளையும்

செய்யுளும் செவியறிவும் வாயுறையும் புறநிலையும் என்னும் இவை என்ற பகுதி எண்ணுநிலைகளினாலேயே தொடர்ந்த தென்க.

நமக்குத் தெளிவாகத் தெரிவது

எனவே 'செய்யுள்' என்று பெயருடைய ஓர்வகை வெண்பாப் பாட்டு பண்டு இருந்ததென்பது, தொல்காப்பியர் கூற்றாலும், அதற்குஉரைசெய்த பேராசிரியர் கூற்றாலும், சங்கயாப்புடையார் முதலிய யாப்பிலக்கண ஆசிரியர் கூறும் நூற்பாக்களாலும், நமக்குத் தெளிவாகத் தெரிகின்றது.

மாணிக்கவாசகர் பாடிய சிவபுராணப்பாட்டு தொல் காப்பியர் கூறிய செய்யுள் வெண்பாவே ஆகும். யாப்பருங்கல விருத்தியாசிரியர் இன்னும்பல அடியால் வந்த பஃறொடை வெண்பா இராமாயணமும் புராண சாகரமும் முதலாகவுடைய செய்யுள்களிற் கண்டு கொள்க'' என்று எழுதுவதை நோக்கினால், இச்செய்யுள் வெண்பா புறப்பொருள் பற்றிப் பழைய நிகழ்ச்சி களின் மேலதாய் வரும் என்று தெரிகின்றது.

சிவபுராணம் என்பதற்கு 'முன்மை அறிய முடியாத பழமை' என்று விளக்கம் கூறப்படுவதால், இது

''இழுமென் மொழியால் விழுமியது நுவலினும்
பரந்த மொழியால் அடிநிமிர்ந் தொழுகினும்
தோலென மொழிப தொன்மொழிப் புலவர்''
(தொல்.செய். 230)

என்னும் நூற்பா விதியால் அமைந்த 'தோல்' என்னும் தனிச் செய்யுள் வனப்புடைய தென்க.

சிவபுராணம் செவியறிவுறூஉப் பொருள் உடையது

செவியறிவுறூஉவின் பொதுப்பொருளாவது ஒருவரை முன்னிலைப் படுத்தி விளித்து அவர் தம் செவியின்கண் அறிவுறுத்திக் கூறுதலாகும். சிறப்புப்பொருள் வெவ்வேறுபட்டு வரும்.

தொல்காப்பியர் புரையோர் நாப்பண் பொங்குதலின்றி அவிதல் கடன் எனவும் (தொல். செய். 110) ஒருவனுடைய

புகழொடும் பொருளொடும் புணர்ந்து வருமெனவும் (செய். 124) சிறப்புப் பொருளை வேறுபடுத்திக் கூறுகின்றார். புறப்பொருள் வெண்பா மாலை அரசனுக்குச் சூழ்ச்சியைச் செவிக்கண் அறிவுறுத்துதலே செவியறிவுறுஉவாம் என்று கூறுகின்றது.

இவற்றிலிருந்து செவியறிவுறூஉவிற் கூறப்படும் பொருள் இடத்திற்கு தக்கவாறு மாறுபட்டு வரும் என்பது புலனாகும்.

அடிகளார் இறைவனைப் பலபடித்தாக முன்னிலைபடுத்தி விளித்துப் புகழ்ந்து, ஈற்றில் ''அல்லற் பிறவி அறுப்பானே ஓ'' என்று கூறுவதால் தன் பிறவி அறுதல் வேண்டும் என்பதைக் குறிப்பெச்சத்தால் குறித்துச் செவியறிவுறுத்தாராயிற்று. அதனால் இச்சிவபுராணம் செவியறிவுறூஉ என்னும் பொருளில் வந்த (செய். 124) செய்யுள் வெண்பாவாகும்.

கலிவெண்பாவின் பிற்கால நிலை

கலிவெண்பா அகப்பொருள் பலவற்றுள் ஏதாவது ஒரு பொருள் நுதலித்தான் வரும் என்று தொல்காப்பியர் கூறியுள்ள செய்தியும், கலித்தொகையில் வந்துள்ள கலிவெண்பாவெல்லாம் அவர் கூறியவாறே வந்துள்ள செய்தியும் முன்னே கூறப் பட்டன.

பிற்காலத் தெழுந்த யாப்பருங்கலம் முதலான யாப்பிலக்கண நூல்களெல்லாம் தொல்காப்பியர் கருத்தைக் கருதாமல், கலி வெண்பா பொருள் பாகுபாடின்றி அகப்பொருளிலும் புறப் பொருளிலும் வரும் என்று கருதலாயினர். யாப்பருங்கல விருத்தி யாசிரியர் தம் உரையுள் கலிவெண்பாவிற்கு அகப்பொருள் புறப் பொருள் பாடல்களையும் எடுத்துக் காட்டாகக் காட்டியுள்ளார்.

பிற்காலத்தே வாழ்ந்த குமரகுருபரர் புறப்பொருள் பற்றிக் கந்தர் கலிவெண்பா என்ற இலக்கியத்தை இயற்றியுள்ளார். ஆனால், மிகப்பேரறிஞரான உமாபதிசிவம் தாம் இயற்றியருளிய நெஞ்சுவிடுதூது அகப்பொருள் பற்றியதாதலால் அதனைக் கலிவெண்பா என்றும், தம் ஆசிரியரைப் போற்றும் பொருள் அமைந்த புறப்பொருள் பற்றிய இலக்கியத்தைப் போற்றிப் பஃறொடை என்றும் வேறுபடக் குறித்துள்ளார். என்னிடத்தில் ஓலை ஏட்டில் உள்ள அவ்விலக்கியம் 'போற்றித் திருத்தொடை' என்ற பெயரால் குறிக்கப்பட்டுள்ளது.

திருவாசக காலம்

சிவபுராணம் அகவல் யாப்புடையதென்றும், அன்று, கலிவெண்பா வென்றும், கூறுவது மேலோட்டமாய்க் கருதிய உணர்ச்சியால் உண்டானதாகும். அவ்விரண்டும் இன்றி இச்சிவ புராணம் ஓர்வகை வெண்பாவிலே அடங்கும் என்பதும், அது செய்யுள் வெண்பாவே ஆதல் வேண்டும் என்பதும் இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளன. சிவபுராணத்துள் பிற்காலக் கலிவெண்பாப் போல் தனிச்சொல் வராமலிருத்தலையும் அறிஞர் கருதியுணர வேண்டும். **இத்தகைய பழைய யாப்புமுறை தேவாரத்தில் இல்லையாதலால் இத்திருவாசகம் தேவார காலத்திற்கு முற்பட்ட தென்க.**

சிவபுராண யாப்பமைப்பு:

தொல்காப்பியர் 'அளவும் சிந்தும் வெள்ளைக்குரிய, தளை வகை யொன்றாத் தன்மை யான'' (தொல். செய் 55) என்னும் நூற்பாவினால் வெண்பாப் பெற்றுவரும் (நிலங்களை) அடிகளைக் கூறியுள்ளார்.

இளம்பூரணர் இந்நூற்பாவிற்குத் ''தளைவகை ஒன்றாத் தன்மைக்கண் அளவடியும் சிந்தடியும் வெண்பாவிற்குரிய, ஒன்றுந் தன்மைக்கண் நெடிலடியும் சில (இரண்டு) வரும் என்பர்.

அவர் உரையின் கருத்து: இயற்சீர் ஒன்றாமையாற் பிறந்த வெண்டளை பெற்றுவரும் அடிக்கண் அளவடி ஐந்தும் சிந்தடி மூன்றும், வெண்சீர் வந்து ஒன்றும் தன்மைக்கண் நெடிலடி இரண்டும் ஆகப் பத்துவகை அடி வெண்பாவிற்கு வரும் என்பது இங்கே கூறப்பட்டவை நாற்சீரடியில் வரும் எழுத்துவகை அடிகளாகும்.

எனவே, வெண்பாவில் நாற்சீர் கொண்ட அடியில் 7, 8, 9 என்னும் எழுத்துக்கணக்குள்ள சிந்தடி மூன்றும், 10, 11, 12, 13, 14 என்னும் எழுத்துக் கணக்குள்ள அளவடி ஐந்தும் 15, 16 என்னும் எழுத்துக் கணக்குள்ள நெடிலடி இரண்டும், ஆகப் பத்துவகை அடிகள் வரும் எனக.

இச்சிவபுராணச் செய்யுள் வெண்பா தொண்ணூற்றைந்து அடி உடையது. இவற்றுள் ஈற்றடி ஒன்றும் முச்சீர் அடி; ஏனைய தொண்ணூற்று நான்கும் நாற்சீர் கொண்ட அடிகளாகும்.

இத்தொண்ணூற்று நான்கு அடிகளுள், வெண்பாவிற்குரிய 7, 8, 9 என்னும் எழுத்துக்கணக்குள்ள சிந்தடிகள் ஒன்றும் வரவில்லை. அளவடிகளுள் பத்தெழுத்தடியும் வரவில்லை. அளவடியுள் பதினோரெழுத்தடி ஐந்தும், பன்னிரண்டெழுத்தடி இருபத் தொன்பதும், பதின்மூன்றெழுத்தடி முப்பத்து நான்கும், பதினான் கெழுத்தடி பதினெட்டும், நெடிலடியில் பதினைந் தெழுத்தடி எட்டும் ஆகிய இவைகளே வந்துள்ளன

இச்சிவபுராண வெண்பா தொண்ணூற்றைந்து அடிகளிலும் வந்துள்ள சீர்கள் முந்நூற்று எழுபத்தொன்பதாகும். இவற்றுள் தேமாங்காய்ச்சீர் எழுபத்தொன்று, புளிமாங்காய்ச்சீர் நாற்பத் திரண்டு. கருவிளங்காய்ச்சீர் நாற்பத்திரண்டு, கூவிளங்காய்ச்சீர் ஐம்பத்தேழு ஆக மூவகைச் சீருள் வெண்பாவுரிச்சீர் இருநூற்றுப் பன்னிரண்டு வந்துள்ளன.

தேமாச்சீர் தொண்ணூற்றொன்று; புளிமாச்சீர் முப்பத் தெட்டு. கருவிளச்சீர் பதினொன்று; கூவிளச்சீர் இருபத்தாறு ஆக ஈரசைச் சீருள் இயற்சீர் நூற்று அறுபத்தாறு வந்துள்ளன. ஈற்றில் பிறப்பு என்னும் நிரைபு அசைச்சீர் ஒன்று வந்துள்ளது. ஆகச் சிவபுராணத்துள் வந்துள்ள சீர் முந்நூற்று எழுபத் தொன்பதின் பாகுபாட்டினை இவ்வாறு அறிக.

சிவபுராணம் நல்ல தொடை அமைப்பை உடையது. ஓரடிக்கும், அதனை அடுத்து வரும் மற்றோரடிக்குமாய் அமைந்த அடி எதுகைத் தொடை இதனுள் பெரும்பாலும் சிறப்பாய் அமைந்துள்ளது ஓரடியுள் வரும் இணை ஒரூஉ முதலியவை மோனை. எதுகை. முரண், இயைபு என்னும் இவைகளைப் பெற்று வந்துள்ளன.

முடிப்புரை

தொல்காப்பியரால் சொல்லப்பட்ட பல செய்திகள் பிற் காலத்தவரால் மறக்கப்பட்டும், பிறழ உணரப்பட்டும், புறக்கணிக் கப்பட்டும் போயின. அவற்றை நன்கு ஆய்ந்து தமிழுலகத்திற்குத் தந்தால் அது ஒரு நல்ல செயலைச் செய்ததாக அமையும். அறிஞர் உலகம் இப்பணியில் உழைக்கவேண்டும் என்பது என் பணிவான வேண்டுகோளாகும்.

பிற்சேர்க்கை 2

பேராசிரியர் திரு. அடிகளாசிரியர் வாழ்வும் பணியும்

(அ. சிவபெருமான்)

தமிழ்நாட்டில் தென்னார்க்காடு மாவட்டம் கல்லக்குறிச்சி வட்டத்தின் தென்கோடியில் வடவெள்ளாற்றின் வடக்குக் கரையில் உள்ளது குகையூர் என்னும் கூகையூராகும். இவ்வூரை இலக்கியங்கள் குகையூர் என்று கூறும். பொது மக்கள் கூகையூர் என்று கூறுவர்.

திருமூல நாயனாருடைய கொள்கையில் பயிற்சியுடைய சித்தநாதர் என்னும் சித்தர் ஒருவர் இவ்வூருக்கு வந்து, ஆற்றங்கரைப் புதருள் தங்கி சிவயோக சமாதியை மேற்கொண்டிருந்தனர். அவர் அட்டமா சித்தியிலும் வல்லவராய் இருந்தார்.

அவ்வூரை ஆண்டிருந்த குறுநில மன்னராகிய **மாலாங்கன்** என்பவன் சித்தநாதருடைய பெருமையை உணர்ந்து தன் மனைவியுடன் வந்து பேரன்புடன் அவர்க்குப் பணிவிடை செய் தொழுகினான். அவ்விருவடைய பேரன்பினையும் மகப்பேறின்றி மூப்படைந்துள்ள நிலையினையும் உணர்ந்த சித்தநாதர் அவ்விருவரையும் இளமை உடையவராக ஆக்கி, வீரசைவ சமய நெறியை மேற்கொண்டு வாழுமாறு செய்து, பக்குவற்கு உபதேசிக்கும் மாதவக் குருபரனாக மாலாங்கனை ஆக்கினர்.

அம்மாலாங்கனிலிருந்து அவன் பரம்பரை சித்த நாதேஸ்சுராதீனமாக ஆயிற்று.

அப்பரம்பரையில் பிற்காலத்தில் **பட்டத்துப் பெரியசாமி ஐயர்** என்பவர் வளர்ந்து வந்தார். அவர் மனைவி **குங்கும அம்மாள்** ஆவர். அவ்விருவரும் நன்கு படித்தவர்.

அவ்விருவர்க்கும் கி.பி. **1910-இல் சாதாரணயாண்டு சித்திரைத் திங்கள் ஐந்தாம் நாள் ஞாயிற்றுக்கிழமை தனுர் இலக்கினத்தில் பூசம்நாளில் திரு அடிகளாசிரியர் முதல் மகனாகப் பிறந்தார்.** இவரின் பிள்ளைப்பெயர் **குருசாமி அய்யர்** என்பதாகும்.

பிற்காலத்தில் தனித்தமிழ் இயக்கத்தலைவர் தவத்திரு. மறை மலையடிகளார் கருத்துப்படி திரு. அடிகளாசிரியர் எனப் பெயரை மாற்றிக்கொண்டார்.

இளமைக்காலமும் கல்வியும்

இவர்க்கு ஏழாம் யாண்டில் தந்தையார் காலமாகி விட்டார். இவர் தாயார் குங்கும அம்மாள் என்பவர்தான் இவரை பேணிப்புரந்து கல்வி கற்குமாறு செய்தார். பெரம் பலூருக்கு அண்மையிலுள்ள நெடுவாசல் என்னும் ஊர் இவர் தாயார் பிறந்த ஊராகும். தாய்மாமன் இருவராவர். மூத்தவர் திரு. கு. சுப்பிரமணிய தேவர். இளையவர். திரு. கு. சிவப்பிரகாச தேவர் ஆவர். இவ்விருவரும் நன்கு தமிழ் பயின்றவர்கள். மருத்துவக்கலை, சோதிடக்கலை ஆகியவற்றிலும் வல்லவர்கள். அடிகளாசிரியர் இவர்கள் (தாய்மாமன்) வீட்டில் தங்கி தமிழ்ப் பயிற்சியையும் வடமொழிப் பயிற்சியையும் பெற்றார்.

பெரம்பலூரில் வாழ்ந்த திரு. மருதநாடார் என்பவரிடம் சோதிடக் கலையைக் கற்றுக்கொண்டார். முசிறி அரசினர் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராய் இருந்த உயர்திரு. வீ. குமாரவீரையர் என்பவரிடம் நன்னூல் காண்டிகை உரையை முறைப்படி பாடங் கேட்டார். 1937-இல் இவர் தனியாகப் பயின்று சென்னைப் பல்கலைக் கழகத்தில் தேர்வெழுதித் தமிழ்ப் புலவர் பட்டத்தைப் பெற்றார்.

மயிலம் கல்லூரியில் பணி

14—7—1938-இல் மயிலம் திருமடத்தில் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க் கல்லூரி என்ற பெயரால் ஒரு தமிழ்க் கல்லூரி தோன்றிற்று. அக்கல்லூரியில் இவர் முதல் ஆசிரியராக அமர்ந்தார். அக்கல்லூரி பல்கலைக்கழக ஒப்புதல் பெற்றபின் 1—7—41-இலிருந்து 30—11—41 வரை விரிவுரையாளராகவும், 1—12—42-இலிருந்து 1—7—1950 வரை துணைத்தலைவராகவும் அங்குப் பணியாற்றினார்.

கரந்தைக் கல்லூரிப் பணி

பின்னர் 3—7—1950-இலிருந்து 3—7—1970 வரை தஞ்சாவூர் கரந்தைப் புலவர் கல்லூரியில் விரிவுரையாளராகவும், துணை முதல்வராகவும் பணியாற்றினார். 4—4—70-இலிருந்து ஓய்வு பெற்றார்.

ஓய்விற்குப்பின்

சேலம் மாவட்டம் ஆத்தூரில் அமைந்திருந்த தனியார் தமிழ்க் கல்லூரி ஒன்றில் முதல்வராக மூன்றாண்டுகள் பணியாற்றியுள்ளார்.

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறையில் ஆராய்ச்சியாளராக ஓராண்டு (1977) பணியாற்றியுள்ளார்.

20—1—1982 ஆம் நாளிலிருந்து 1—10—1985ஆம் நாள் வரை தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் சுவடிப் புலத்தில் சிறப்புநிலை இணைப்பேராசிரியராக அமர்ந்து தொல்காப்பிய ஆராய்ச்சியைச் செய்து வந்தார். அதன்பின் மூப்பின் காரணமாகத் தமிழ்ப்பல்கலைக்கழகப் பணியிலிருந்து தாமே விலகிக் கொண்டார். மூப்பின் காரணமாகத் தமிழ்ப்பல்கலைக் கழகப் பணியிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்ட அவர் தம் இல்லத்திலிருந்து அப்பணியை (தொல்காப்பியப் பதிப்புப் பணியை) நிறைவு செய்து வழங்கினார்.

குடும்பம்

இருந்தமிழே உன்னால் இருந்தேன் வானோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்.

என்று தமிழுக்காக வாழ்ந்து வரும் பேராசிரியர் அடிகளாசிரியர் அவர்கள், தாம் பிறந்த ஊரிலேயே பிறந்த கூரை வீட்டிலேயே மண்தரையில் இன்னமும் அமர்ந்து இந்த மண்ணோடு இருக்கும் பற்றை நிலைப்படுத்துவார் போல் வளங்குன்றிய வாழ்வே வாழ்ந்து வருகிறார். தமிழ்ப்பணிக்காகவே தம்பொருளாதாரத்தைச் செலவிட்டு, வேண்டுமென்றே வளங்குன்றிய வாழ்வைத் தேடிக்கொண்டவராவார்.

அறிவுசான்ற மூன்று ஆண்மக்களும், அமைதி சான்ற மூன்று பெண்மக்களும் வாசுகி அனைய மனையாளுமே இவரது சொத்துக்களாக உள்ளனர். சிந்தனை செய்தே சிறந்த இவர் உடல் இன்று பலரின் சிந்தனைக்கு உரியதாக உள்ளது. எழுதி எழுதியே முதிர்ந்த இவரது கைகள் எழுத மறுக்கின்றன. நடந்தே சிறந்த கால்கள் நடை தடுமாறுகின்றன. ஆனால் சிந்தனை மட்டும் தடுமாறாமல் தமிழையே இன்றும் சிந்தித்துக் கொண்டிருக்கின்றது. அகவை (86) முதிர்ந்த நிலையில் எந்த ஆசையும் அற்று, தம் நூல்கள் அச்சேறித் தமிழகத்தில் உலா வரவேண்டுமென்ற பற்று ஒன்றுடன் மட்டுமே இவர் வாழ்ந்து வருகிறார்.

அடிகளாசிரியரின் படைப்புக்கள்

1. உரை நூல்கள்:

அ. உரைப் பதிப்புக்கள் (உரையோடு விளங்கிய நூல்களைப் பதிப்பித்தல்)

1 அருணகிரி அந்தாதி – சரசுவதிமகால் வெளியீடு 1967

2 மருதூரந்தாதி உரை–சரசுவதிமகால் வெளியீடு 1968

3 காலச்சக்கரம் – சரசுவதிமகால் வெளியீடு (சோதிட நூல்) 1969–79

4 வராகர் ஓராசாத்திரம் (சோதிட நூல்) சரசுவதிமகால் வெளியீடு 1970–81–91

5 சிவஞான தீபம் உரை – சரசுவதிமகால் வெளியீடு 1970

6 சிவப்பிரகாச விகாசம் உரை–சரசுவதிமகால் வெளியீடு 1977

ஆ. உரைவரைவுகள் (தாமே உரை எழுதி வெளியிட்டமை)

7 முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ் உரை 1958

8 சேக்கிழார் பிள்ளைத் தமிழ் உரை 1967

9 தமிழகக் கல்வெட்டு விளக்கவுரை (மு. கோவிந்தராசனாருடன் இணைந்து எழுதியமை) 1957–58

10 திருவலஞ்சுழி தேவாரப்பாடல்கள் உரை 1956

11 திருவாசகக்கோயில் திருப்பதிகம் உரை 1981

12 சிவபுராணச் சிற்றுரை 1986–96

13 சதமணிமாலை மூலமும் உரையும் 1990

14 சித்தாந்த சிகாமணி அங்கத்தலத்திரட்டு உரை 1992

15 ஸ்ரீமத்சிவஞான பாலய தேசிகர் திருப்பள்ளி எழுச்சி 1993

2. பதிப்பு நூல்கள்:
(ஓலைச் சுவடிகளிலிருந்து பதிப்பித்தவை)

16	வீரசைவப் பிரமாணம்	1936
17	சதமணிமாலை (மூலம் மட்டும்)	1938
18	சிவப்பிரகாச விகாசம் (மூலம் மட்டும்)	1939
19	காமநாதர் கோவை	1947
20	மேன்மைப் பதிகம்	1957
21	சதுர்லிங்க தசகோத்திர சதகம்	1958

3. ஆராய்ச்சி நூல்கள்:

22	தொல்காப்பியம் – எழுத்து இளம்பூரணம்	1969
23	'ஐவகையடியும்' என்னும் தொல்காப்பிய நூற்பா விளக்கம் (சென்னைப் பல்கலைக் கழகம்)	1977
24	தமிழ்இலக்கண இலக்கியங்களில் சைவசித்தாந்தம்	1978
25	தொல்காப்பியம் – சொல் – இளம்பூரணம் (தமிழ்ப்பல்கலைக்கழகம்)	1990
26	தொல்காப்பியம் – பொருள் – செய்யுளியல் (தமிழ்ப்பல்கலைக்கழகம்)	1985
27	தொல்காப்பியம்-பொருள்-எட்டு இயல் மட்டும் (தமிழ்ப்பல்கலைக்கழகம் அச்சில்)	

4. படைப்பிலக்கிய நூல்கள்:

அ. செய்யுள் வடிவம்

28	பிள்ளைப் பாட்டு	1945
29	திருஅரசிலிக் காதை	1948
30	குழந்தை இலக்கியம்	1963
31	சான்றாண்மை (கோப்பெருஞ்சோழன் பற்றியது)	1964–1975
32	சென்னிமலை முருகன் தோத்திரம்	1980
33	அரசியல் இயக்கம்	1981

34 பல்சுவைப் பண்ணத்திப் பாடல்கள் (குழந்தை இலக்கியம்) 1983

35 அருள்திரு மாரியம்மன் திருப்பதிகம் 1984

36 உளத்தூய்மை 1984-94

37 தண்ணிழல் (திருமுடிக்காரியைப் பற்றிய அரிய இலக்கியம்) 1990

38 மறவர் நத்தக்குன்றமரும் திருமுருகன் திருவடிப் பாமாலை 1993

39 தொழிலியல் 1993

40 மெய்ப் பொருட் காதை 1995

ஆ. உரை நடை

41 எங்களூர் 1937

42 தொடக்கப்பள்ளி-நாடகம் 1949

43 வீரசைவ சிவ பூஜாவிதி 1976

44 விலையேற்றமும் வாழும் வழியும் 1984

பொருள்முட்டுப் பாட்டினால் முடங்கிக் கிடக்கும் அச்சேறா நூல்கள்

1 குழந்தை இலக்கியம் (தொகுதி மூன்று)
2 குதம்பைச் சித்தர் பாடலும் உரையும்
3 கலித்தொகை உரை (குறிஞ்சிக் கலி)
4 தொல்காப்பியச் செய்யுளியல் ஆராய்ச்சி (உரைநடை)
5 பிரபுலிங்கலீலை உரை
6 அடிகளாசிரியரின் சமுதாயப் பாடல்கள்
7 அடிகளாசிரியரின் இலக்கணக் கட்டுரைகள்
8 அடிகளாசிரியரின் இலக்கியக் கட்டுரைகள்
9 திருக்குறள் உரை (133 குறள் வரை)
10 முப்பால்-உரைநடை
11 மகாவாக்கிய ஆராய்ச்சி

—:—



பேராசிரியர் திரு. அடிகளாசிரியர்

சிவபுராணத்தை முறைப்படி ஓதுதலால் உண்டாகும் இருவகைப் பயன்களைக் குறித்து அடிகளார் கூறுவதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை. என் வாழ்க்கையில் மனித முயற்சியால் நீக்க முடியாத துன்ப நிகழ்ச்சி ஏதாவது ஏற்பட்டால், அப்பொழுது தூய இடத்தில் தூய்மையாயிருந்து சிவபுராணத்தைப் பொருளுணர்ச்சியுடன் மனம் உருகி ஓதுவேன். அப்பொழுது அத்துன்பம் எவ்வாறோ நீங்கி விடும். இது யான் கண்ட உண்மையாகும்.

(நூலாசிரியரின் அனுபவ உண்மை)

சபாநாயகம் அச்சகம், சிதம்பரம் - சென்னை.